விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-2788)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 31 புதன்கிழமை (13.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 116

# பௌத்த மேலாதிக்கத்துக்காக வடக்கில் இராணுவக் குவிப்பு

## வடக்கு உறுப்பினர்கள் கடும் சாடல்

(யாழ்ப்பாணம்)

*தேசிய பாதுகாப்பு எனக் கூறிக்கொண்டு வட பகுதியில் சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தினை நிலைநாட்டுவதற்காகவே இராணுவத் தரப்பினர் வடக்கில் அதிகளவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர் என தெரிவித்த வட மாகாண சபை உறுப்பினர்கள், நல்லாட்சி அரசு என்று கூறப்படுகின்ற போதிலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நிலவிய அதே ஆட்சியே தற்போதும் தேசிய அரசால் வடக்கில் முன்னெடுக்கப்படுவதாகவும் கடுமையாக சாடியுள்ளனர்.*

23ஆம் பக்கம் பார்க்க....



கோப்பு படம்

## விக்னேஸ்வரனை எச்சரிக்கும் தினேஷ்

(கொழும்பு)

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்ந்து குழப்பமான செயற்பாட்டில் ஈடுபடுவாரானால் வரதராஜப்பெருமாளுக்கு நடந்ததே நடக்கும் என பொது எதிரணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்

24ஆம் பக்கம் பார்க்க....

## மயங்கி வீழ்ந்த குடும்பஸ்தர் மரணம்

(தெல்லிப்பழை)

மேசன் வேலை செய்து கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மயங்கி விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை கிழக்கு கோயிற் புரத்தைச் சேர்ந்த சின்னன் கதிரவேலு (வயது66) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தெல்லிப்பழை கிழக்கு கோயிற் புரத்தைச் சேர்ந்த இவர் துர்க்காபுரத்தில் மேசன் வேலை செய்து கொண்டிருந்தபோது பிற்பகல் 3 மணியளவில் திடீரென மயக்கமுற்று விழுந்துள்ளார்.

உடனடியாக அருகிலிருந்தவர்கள் துணையுடன் அவர் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (செ-30)

# மாநிலங்களை அமைக்கும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு இல்லை!

## வடக்கின் எதிர்பார்ப்பு நிறைவேறாது-மகிந்த



(கொழும்பு)

மாநிலங்களை அமைத்து இணைப்பதற்கும், பிரிப்பதற்கும் மாகாண சபைகளுக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வடமாகாண சபையின் எதிர்பார்ப்பு ஒருபோதும் நிறைவேறாது என்றும் குறிப்பிட்டார்.

யோசனைகள் முன்வைத்து வருவதை பார்த்தால் எதிர்கால

23ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5



புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

## புதிதாக நிலங்களை சுவீகரிக்கவில்லை!

(கொழும்பு)

இலங்கையின் வடக்கில் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த இடங்களையே தற்போது இராணுவம் கையகப்படுத்திவருவதாகவும் புதிதாக நிலத்தை கையகப்படுத்தும் திட்டம் இல்லையென்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினர் வடக்கில் பல பகுதிகளிலும் பொது

24ஆம் பக்கம் பார்க்க....

### காணி சுவீகரிப்பு குறித்து 18ஆம் திகதி

## ஜனாதிபதி, பிரதமர் இணைந்து வடக்கு முதல்வருடன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு மற்றும் காணிப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து அழைப்பு விடுத்துள்ளதாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் பதினெட்டாம் திகதி திங்கட்கிழமை இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது. வடமாகாணசபையின 49ஆவது அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை கைதடியில் அமைந்துள்ள வட

24ஆம் பக்கம் பார்க்க....

### மோ.சைக்கிளால் மோதுண்டு

## வீதியில் விழுந்த நபர் மீது ஆட்டோ ஏறியதில் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளால் மோதுண்டு வீதியில் விழுந்தோர் மீது பின்னால் வந்த ஆட்டோ ஏறியதில் குறித்த நபர் படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் மடத்தடி உரும்பிராய் மேற்கு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த பாலன் நடராசா (வயது 58) என்ற

23ஆம் பக்கம் பார்க்க....

### வித்தியா படுகொலை வழக்கு

## கண்கண்ட இரு சாட்சியங்களுக்கு 20ஆம் திகதிவரை விளக்கமறியல்!

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் கண்கண்ட சாட்சியங்கள் என கைது செய்யப்பட்டுள்ள 11ஆம் மற்றும் 12ஆம் சந்தேக நபர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நேற்றைய வழக்கின் போது, குற்றப்புலனாய்வுதுறை மன்றில் பிரசன்னமாயிருக்கவில்லை. இதனால் அவ

24ஆம் பக்கம் பார்க்க....

## விடுதலையானவர் மீண்டும் கைது

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்ட கிளிநொச்சியை சேர்ந்த விஜயகுமார் கேதீஸ்வரன் என்ற அரசியல் கைதி மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளரர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 13ஆம் திகதி நல்லாட்சி அரசாங்கத்தால் 39 அரசியல் கைதிகளுடன்

23ஆம் பக்கம் பார்க்க....

## கடற்படை வசமிருந்த 6.5 ஏக்கர் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கீரிமலை நகுலேஸ்வரம் கிராமசேவகர் பிரிவில் 6.5 ஏக்கர் காணிகள் நேற்றையதினம் கடற்படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு உட்பட்ட ஜே-226 கீரிமலை நகுலேஸ்வரம் கிராம சேவையாளர்

23ஆம் பக்கம் பார்க்க....

### யாழில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும்

## “சுகாதார மேம்பாட்டுக் கிராமம்”

### உருவாக்க தீர்மானம் என அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் “சுகாதார மேம்பாட்டு கிராமம்” உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் டெங்குவார மீளாய்வுக்கூட்டம் நேற்றையதினம் யாழ் மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னரே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்தில்டெங்கு நோயை

23ஆம் பக்கம் பார்க்க....

யாழ் இந்தியத் தூதரகம் வட மாகாண
பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும்
சிறப்புப்பட்டிமன்றம்

விடயம்: மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு அவசியமானவை
தொன்று தொட்டு வரும் பழமைகளே! | மாறிவரும் புதுமைகளே!

இடம்: சங்கிலியன் தோப்பு, நல்லூர்.
காலம்: நாளை 14-04-2016 வியாழக்கிழமை
நேரம்: மாலை 5.30 மணிக்கு

நடுவர்கள்
தென்னிந்திய பட்டிமன்றப் பிரபல்யப் பேச்சாளர்கள்

திரு. ராஜா





அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

திருமதி பாரதி பாஸ்கர்



## வட மாகாணசபையால் தயாரிக்கப்பட்ட
# தீர்வுத்திட்ட முன்வரைபு மீதான விவாதம் நேற்று நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்ட முன்வரைபு மீதான விவாதம் நேற்றைய தினமும் நடைபெறவில்லை. குறித்த தீர்வு திட்ட முன்வரைபினை விவாதிக்க என நேற்றைய தினம் விசேடமாக மாகாண சபை கூடிய போதிலும் திடீரென அது கைவிடப்பட்டு வேறு விடயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசினால் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான கருத்துக்கள் பெறப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் வடக்கு மாகாண சபையும், புதிய அரசமைப்புக்கான கருத்துக்களை முன்வைப்பதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது.

இந்தக் குழுவினர் மூன்று உப பிரிவுகளாகப் பிரிந்து அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வரலாறு சார்ந்த விடயம், அரசியல் ரீதியான விடயம், அதிகாரப் பகிர்வு தொடர்பிலான விடயம் என்று மூன்று குழுக்கள் இதற்காக நியமிக்கப்பட்டிருந்தது.

மூன்று குழுக்களும் தமது முன் வரைபுகளை முன்வைத்து முதலமைச்சர் தலைமையில் கலந்துரையாடல் நடத்தியிருந்தது. இதன்போது பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுள்ளன. வழங்கக் கூடிய அதிகாரப் பகிர்வையே கோர வேண்டும் என்று ஒரு தரப்பினர் இதன்போது கருத்துத் தெரிவித்து வந்தனர்.

13வது திருத்தத்தை தாண்டிய அதேவேளை சமஷ்டியை ஒத்த வகையில் தீர்வுத்திட்டம் இருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.மாநில சுயாட்சியை மையமாக வைத்தே அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மூன்று குழுக்களினது வரைபுகளும் ஒன்றிணைக்கப்பட்டு புதிய அரசியல் தீர்வு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்வு திட்ட முன்வரைபு வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போது சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் மீதான விவாதம் நேற்று நடைபெறும் என அறிவிக்கப்பட்ட போதிலும்,

நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனினும் அடுத்த அமர்வில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை எதிர்வரும் முப்பதாம் திகதி எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இதன் போது வடக்கு மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட தீர்வு திட்டம் முழுமை செய்யப்பட்டு அவரிடம் கையளிக்கப்படவுள்ளது. மேலும் குறித்த தீர்வு திட்டத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளுமா? என உறுப்பினர்கள் சிலர் ஏற்கெனவே கேள்வி எழுப்பிய நிலையில், குறித்த தீர்வு திட்டம் தொடர்பிலான கருத்துக்களை உறுப்பினர்கள் சிலர் தற்போதும் முதலமைச்சரிடம் கையளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(செ-4)

## தாக்குதலை விசாரிக்க இரா.விசாரணைக்குழு

(கொழும்பு)

கொக்குத்தொடுவாய் பகுதியில் கிராம சேவகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து இராணுவ தரப்பில் விசாரணை நடத்த விசேட குழுவொன்று கொழும்பிலிருந்து சென்றுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் தெரிவித்தார்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரால் கிராம சேவகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித்து நேற்று முன்தினம் முல்லைத்தீவில் கிராம அலுவலர்கள் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் இந்த சம்பவத்தை கண்டித்து வடமாகாண சபையில் நேற்றைய தினம் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த சம்பவத்தில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருப்பதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரணை செய்வதற்கு விசேட குழுவொன்றை அங்கு அனுப்பி வைத்துள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (செ-12)

# கொழும்பு துறைமுக நகரத் திட்டம் 99 வருட குத்தகைக்கு உத்தேசம்

## பிரதி அமைச்சர் அஜித் பெரேரா கருத்து

( கொழும்பு )

கொழும்பு துறைமுக நகரமயமாக்கல் அபிவிருத்தி திட்டத்துக்காக இலங்கை-சீனா ஒன்றிணைந்த நிறுவனம் ஒன்றிற்கு 99 வருடக் குத்தகைக்கு நிலப்பரப்பை வழங்க உத்தேசித்துள்ளோம் என பிரதியமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தொடர்பில், நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

துறைமுக நகரத் திட்டம் என்பது பல்வேறு விமர்சனங்களுக்குள்ளான ஒரு செயற்றிட்டமாகும். இது மகிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவல்ல என்பதை மறந்துவிட வேண்டாம். துறைமுக நகர எண்ணக்கரு 2001 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவினால் கொண்டு வரப்பட்டதாகும். இந்தத் திட்டத்தை மீள ஆரம்பிக்க எம்மால் முடிந்துள்ளது.

நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பு சீனாவுக்கு நிரந்தரமாக வழங்கப்படவிருந்த நிபந்தனையை நாம் நீக்கியுள்ளோம். அதற்குப் பதிலாக கடலை நிரப்பி உருவாக்கப்படவுள்ள நிலப்பரப்பை சீனா இலங்கை ஒன்றிணைந்த உரிமை கொண்ட நிறுவனமொன்றுக்கு 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்க உத்தேசித்துள்ளோம் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம் என்றார்.

மேலும், அந்த நிறுவனம் தற்போது நிறுவப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு அவர் பின் வருமாறு பதிலளித்தார்,

அந்த நிறுவனம் தற்போது வரை நிறுவப்படவில்லை. சீனாவில் வைத்து பிரதமர் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இந்த செயற்றிட்டம் தாமதமாகும் போது அதற்கான நட்டஈட்டை வழங்க வேண்டி ஏற்படும் என சிலர் கூறினர்.

ஆனால், அவ்வாறு நட்டஈடு செலுத்த வேண்டியதில்லை என பிரதமர் தெளிவாகக் கூறியுள்ளார். குறித்த நிலப்பரப்பில், மோட்டார் பந்தயம் நடத்துவதற்கான ஓடு பாதையொன்று அமைப்பது தொடர்பிலும் திட்டமொன்று காணப்பட்டது. அது சூழல் மாசடைதலில் தாக்கம் செலுத்தும் விடயமென்பதால் அதனை நீக்கியுள்ளோம் என அஜித் பி.பெரேரா தெரிவித்தார். (செ-12)

# வீட்டினை உடைத்து உட்புகுந்து பணம், நகை திருட்டு



(கோப்பாய்)

நீர்வேலி மேற்கு கரந்தன் பகுதியில் உள்ள வின்சன் என்பவரது வீட்டில் நேற்று முன்தினம் பகல் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இத்திருட்டுச் சம்பவத்தில் நகை மற்றும் ஒரு தொகை பணம் திருடப்பட்டுள்ளது.

குறித்த வீட்டினர் சம்பவம் இடம்பெற்ற திங்கட்கிழமை அன்று கடைசி பங்குனித் திங்கள் என்பதால் பொங்கல் வழிபாட்டுக்காக மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு சென்றுள்ளனர்.

இதனை வாய்ப்பாக பயன்படுத்திய திருடர்கள் பகல் 11 மணியளவில் குறித்த வீட்டின் யன்னல் கம்பியினை வளைத்து உள்நுழைய முயற்சித்துள்ளனர். அது பயனளிக்காது போக வீட்டின் பின்புறக் கதவினை கூரிய ஆயுதத்தினால் கொத்தி கதவினை உடைத்து உள்நுழைந்து வீட்டை சல்லடைபோட்டு தேடியுள்ளனர்.

இதன்போது வீட்டினுள் இருந்த 2பவுண் சங்கிலி ஒன்றும் 30 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் திருடியுள்ளனர். அதன்பின்பும் நீண்ட நேரம் வீட்டினுள் திருடர்கள் தேடி வேறு எதுவும் கிடைக்காததை அடுத்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பின்னர் கோவிலுக்கு சென்ற வீட்டார் ஒரு மணியளவில்வீட்டுக்குத்திரும்பிய போதேவீட்டில் கொள்ளை இடம்பெற்றதனை அறிந்துள்ளனர்.

உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை மேற்படி திருட்டு இடம்பெற்ற வீட்டில் வசிக்கின்ற சிறுபிள்ளை ஒருவரினால் உண்டியல் ஒன்றில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த பணமும் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-87)

# வயோதிபரை மோதியது பஸ்

## தப்பிக்க முயன்ற சாரதி மடக்கிப்பிடிப்பு



(கோப்பாய்)

மானிப்பாய் வீதி உரும்பிராய் பகுதியில் பஸ் – துவிச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் வீதி வழியாக உரும்பிராய் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த, முல்லைத்தீவு – யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்று விசேட சேவையில் ஈடுப்பட்ட போதே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதியில் துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த வயோதிபரை குறித்த பேருந்து பின்னால் மோதியுள்ளது, இதனால் கீழே விழுந்த வயோதிபர் தலையில் காயமடைந்தார்.

எனினும் விபத்தினை ஏற்படுத்திய பேருந்து வேகமாக தப்பிச்செல்ல முற்பட்டுள்ள நிலையில் அப்பகுதியில் இருந்த இளைஞர்கள் பேருந்தினை துரத்திச் சென்று உரும்பிராய் சந்திக்கு அண்மையாக மடக்கிப் பிடித்துள்ளனர்.

பேருந்தின் சாரதியை இளைஞர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்தனர், இதன்போது இச்சாரதி தமக்கு விபத்து நடந்து தெரியாது என்றும், தான் விசேட சேவையாக வந்த பேருந்து என்றும் தெரிவித்தார்.

பின்னர் காயமடைந்த வயோதிபர் சமரசமாக போவதாக தெரிவித்ததை அடுத்து அந்த வயோதிபரை மருத்துவனைக்கு கூட்டிச் சென்று தாம் மருத்துவ வசதி செய்து கொடுப்பதாகவும், துவிச்சக்கரவண்டியை திருத்தம் செய்து தருவதாகவும் பேருந்தின் சாரதியால் தெரிவிக்கப்பட்டு வயோதிபர் மருத்துவனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (செ-87)

# அமெரிக்காவுக்கு பறந்த கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

**பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுத்துள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று நண்பகல் திடீரென அமெரிக்காவுக்கு சென்றுள் ளார். எதிர்வரும் 18ஆம் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட் டிருந்த நிலையில், கோத்தபாய அவசரமாக அமெரிக்க நோக்கி சென்றுள்ளமை பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.**

முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 179 பேர் பசிலின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை தொடர்பில், மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்காக வாக்குமூலம் ஒன்றினை பெற்றுகொள்வதற்காக அவர் ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

தற்போதைய அரசியல் மோதல்களில் தலையிடாமல் அமைதியாக இருக்குமாறு கோத்தபாய ராஜபக்ஷவின் ஆசோகர்கள் அவருக்கு ஆலோசனை வழங்கியதாக கொழும்பு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அதற்கமைய சிறிது காலம் நாட்டை விட்டு செல்லுமாறும் கோத்தபாயவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இந்நிலையில் நேற்று அமெரிக்காவுக்கு அவர் திடீரென பயணமாகியுள்ளார். (இ-5)

## ராணுவ வாகனம்மோதி தாயும் மகளும் மரணம் சாரதி கைது

திருகோணமலை பிரதான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் ஆட்டோவில் பயணித்த தாயும் மகளும் பலியாகியுள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சாம்பல்தீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த வாசுகி (வயது 59), அவரது மகளான சிவதாரணி (வயது 33) ஆகியோரே இவ்விபத்தில் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, அதே இடத்தைச் சேர்ந்த ஜே.அருள்ராஜ் (வயது 31), கே.ராஜேஸ்வரி (வயது 70) ஆகியோர் படுகாயமடைந்துள்ள நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆட்டோவுடன் திருகோணமலை 22ஆவது இராணுவப் படையணிக்குச் சொந்தமான டிபெண்டர் ரக வாகனம் மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இடம்பெற்ற இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்ட பொலிஸாருக்கு திருகோணமலை 22ஆவது இராணுவப் படையணிக்குச் சொந்தமான டிபெண்டர் ரக வாகனமே ஆட்டோவை மோதிவிட்டுச் தப்பிச் சென்றமை தெரியவந்துள்ளது.

இந்த விபத்தைத் தொடர்ந்து குறித்த வாகனத்தின் சாரதியான 29 வயதுடைய இராணுவ வீரரை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## புலிகள் எண்ணிக்கை உலகளவில் அதிகரிப்பு

உலகளவில் காடுகளில் வாழ்ந்துவரும் புலிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். பல தசாப்தங்களாக இந்த எண்ணிக்கை குறைந்து வந்த நிலையில் இப்போது அவை அதிகரித்துள்ளன. இயற்கைப் பாதுகாப்புக்கான உலக நிதியம் மற்றும் சர்வதேச புலிகள் அமைப்பு ஆகியவை இப்போது உலகளவில் 3900 புலிகள் வாழ்ந்து வருவதாக கணக்கிட்டு தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆறு ஆண்டுகளில் இருந்த அளவைவிட இப்போது காடுகளில் வாழும் புலிகளின் எண்ணிக்கை 700 ஆக உயர்ந்துள்ளன. இந்தியா, ரஷ்யா, நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளில புலிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளன என அந்த அமைப்புகளின் கணக்கெடுப்புக்கள் கூறு கின்றன.

எனினும் எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும் என அந்த ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வேட்டையாடப்படுதல், வாழ்விடம் அழிவடைதல், உடல் பாகங்களுக்காக சட்டவிரோதமாக கொலை செய்யப்படுவது போன்ற காரணங்களால் உலகளவில் புலிகளின் எண்ணிக்கை வேகமாக குறைந்துவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## விபத்தில் சிக்கிய ராணுவீரர் பலி

அம்பாறை, பாணாமை - உகந்தைமலை வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆட்டோ ஒன்று விபத்துக்குள்ளானதில் சாரதி பலியாகியுள்ளார்.

இராணுவ வீரரான பாணாமையைச் சேர்ந்த குணரத்ன சுனில் (வயது 30) என்பவரே இந்த விபத்தில் பலியாகியுள்ளார். (இ-5)

## மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரத்திற்கு தடை ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரம் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அதை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்துள்ளார்.

புதுவருடத்தை முன்னிட்டு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பலர் யாழ்.நகர்ப்பகுதிக்கு வருகை தருகின்றனர்.


அந்த வகையில் வியாபார நடவடிக்கைகளால் பொது மக்களுக்கு எந்த விதமான இடையூறுகளும் ஏற்படாத வகையில் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சில ஒழுங்கு முறைகளை செய்துள்ளோம்.


அந்த வகையில் யாழ் புல்லுக்குளத்துக்கு அருகே உள்ள பகுதியில் வெளி மாவட்ட வியாபாரிகள் மற்றும் உள்ளூர் வியாபாரிகளுக்கு இதுவரை 60 தற்காலிக கடைகள் வழங்கப்பட்டுள்ளன. 10 சதுர அடிக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம் அறவிடப்படுகிறது.

மேலும் நடைபாதை வியாபாரிகளுக்கும் அந்தப்பகுதியிலேயே சிறு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அப்பகுதியை தவிர்த்து வேறு பகுதிகளில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கொழும்புத் துறைமுகத்தில் ஜப்பானிய போர்க்கப்பல்கள்



(கொழும்பு)

ஜப்பானிய கடல்சார் தற்காப்புப் படையின் இரண்டு போர்க்கப்பல்கள் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தன. ஜேஎஸ் மகினாமி, ஜே.எஸ்சுசனாமி ஆகிய போர்க்கப்பல்களே கொழும்பு வந்துள்ளன.

நல்லெண்ணப் பயணமாக நேற்றுமுன்தினம் இந்தப் போர்க்கப்ப ல்கள் கொழும்புத் துறைமுகம் வந்த போது இலங்கை கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.

இதையடுத்து, மூன்றாவது பாதுகாப்பு அணியின் கட்டளை அதிகாரி கப்டன் தகாஷி யோஷியோகா மற்றும் இரண்டு போர்க்கப்பல்களின் கட்டளை அதிகாரிகளும், இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜே குணவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

வரும் 14ஆம் நாள் வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ள, இந்தப் போர்க்கப்பல்கள், இலங்கை கடற்படையினருடன் இணைந்து பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மை யில் ஜபபான் சென்றிருந்த போது, கடல் சார் ஒத்துழைப்பு விடயத்தில் இரண்டு நாடுகளினதும் பாதுகாப்பு பிரிவுகளுக்கும் இணைந்து செயற்பட இணக்கம் காணப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பனாமா முதலீடுகள் யாவும் சட்ட ரீதியானது-பொன்சேகா

(கொழும்பு)

பனாமாவிலுள்ள நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதி, சட்ட ரீதியானது எனவும் அது தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது எனவும் பனாமா மர்யா பொன்சேகா சட்ட நிறுவனத்தின் அதிகாரியான ரேமன் பொன்சேகா அறிவித்தல் விடுத்துள்ளார்.

இந்த நிதி தொடர்பில் காணப்படும் சட்டங்கள் இன்னும் நடைமுறையில் காணப்படுவதாகவும், இது தொடர்பில் பனாமா சட்டமா அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இலங்கையை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்கத் தயாராகிறது சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் எதிர்ப்பார்த்த பொருளாதார மீட்பு உதவி, இந்த மாதத்துக்குள் கிடைக்க வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணயநிதியம் இதனை தெரிவித்துள்ளது.


சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் கடந்த 31ஆம் திகதியில் இருந்து இலங்கையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந் தனர்.

இதன்போது அவர்கள் இலங்கையின் நிதித்துறை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்த னர்.

இதன்படி அரசாங்கத்தின் பொருளாதாரத்துக்கு 36 மாதகால விரிவாக்கப்பட்ட நிதி வசதியை சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை பொருளாதார மீட்புக்காக 1.5 பில்லியன் டொலர்கள் முதல் 2 பில்லியன் டொலர்கள் வரையான உதவியை சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து எதிர்ப்பார்த்துள்ளது.(இ-5)

# சன்ரைசர்ஸை வென்றது பெங்களூரு



ஐ.பி.எல். சீசன் 9 போட்டியில் சன்ரைசர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற சன்ரைசர்ஸ ஐதராபாத் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனையடுத்து பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக களமிறங்கிய கிறிஸ் கெய்ல், புவனேஷ்வர் குமார் பந்து வீச்சில் ஒரு ஓட்டத்துடன் வெளியேறி அதிர்ச்சி அளித்தார்.

தொடர்ந்து விராட் ஹோலியுடன் ஜோடி சேர்ந்த டி வில்லியர்ஸ் தமது அதிரடி ஆட்டத்தால் ஐதராபாத் அணியின் பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்தார்.

51 பந்துகளில் 75 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் புவனேஷ்வர் குமார் பந்து வீச்சில் ஹோலி வெளியேறினார். 42 பந்துகளில் 82 ஓட்டங்கள் எடுத்த டி வில்லியர்ஸ் முஸ்தஃபிசூர் பந்துவீச்சில் வெளியேறினார்.

20 ஓவர்கள் முடிவில் பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 227 ஓட்டங்கள் குவித்தது.

ஐதராபாத் அணி சார்பில் புவனேஷ் குமார், முஸ்தஃபுசூர் ரஹ்மான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

இதனையடுத்து 228 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 182 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் வோர்னர் 58 ஓட்டத்தினையும், அக்ஷய ரெட்டி 32 ஓட்டத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் வோட்சன், சாகல் தலா 2 விக் கெட்டினைக் கைப்பற்றினர்

போட்டியின் ஆட்ட நாயகனாக பெங்களூரு அணியின் டி வில்லியர்ஸ் தெரிவானார்.

இன்று புதன்கிழமை இரவு 8 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்த்து கொலகத்தா நைட் ரைடர்ஸ் அணி மோதவுள்ளது. (க)

## இன்றைய போட்டிகள்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன் கிழமை திக்கம் யூத் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவாலி சென் பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென் மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (க)

# காயத்திலிருந்து குணமடையாமல் மலிங்க ஐ.பி.எல் விளையாட முடியாது





காயத்திலிருந்து பூரண குணமடைந்து விட்டதை உறுதிப்படுத்தாமல், இலங்கை கிரிக்கெட் சபையின் அனுமதியைப் பெறாமல் லசித் மலிங்க ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட முடியாது என இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் கேட்போர கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசியக் கிண்ணத் தொடரில் முதல் போட்டியுடன் காயம் காரணமாக மலிங்க விலகிக் கொண்டார். ஆனால் உலகக் கிண்ணத் தொடரில் 15 ஆம் திகதிக்கு பின்னர் பங்கேற்க முடியும் என நம்பிக்கை தெரிவித்தார்.

இதனையடுத்து அவருடைய அனுமதியுடனேயே நாம் அணியில் சேர்த்துக்கொண்டோம். ம்லிங்க கூறவது போன்று வற்புறுத்தி அணியில் சேர்த்துகொள்ளவில்லை.


அவர் உலகக் கிண்ணத் தொடரில் ஒரு போட்டியில் கூட களமிறங்கவில்லை. ஏதாவது ஒரு போட்டியில் விளையாடி இருந்தால் கூட நாம் அரையிறுதிக்குள் நுழைந்திருப்போம். ஆனால் அவர் ஒன்றையும் செய்யவில்லை.

அஞ்சலோ மத்தியூஸ் காயத்துடனே களமிறங்கி இருந்தார். காயத்தின் மீது மருந்து தூசிகளை போட்டுக் கொண்டே விளையாடினார். அணியை வெற்றி பெறச் செய்ய கடுமையாக போராடினார். இவர் போன்ற வீரர்களே நாட்டுக்கு தேவை.

மேலும் மலிங்க திடீரென ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட முடியாது. தான் குணமடைந்ததை உறுதிப்படுத்தி அதை கிரிக்கெட் சபை அங்கீகரித்தால் மாத்திரமே விளையாட முடியும். அதைவிடுத்து எந்தவொரு போட்டிகளிலும் விளையாட முடியாது என்றார். (க)

# இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து வீரர் ஜேம்ஸ் டெய்லர்





இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் ஜேம்ஸ் டெய்லர் தீவிர இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளது ரசிகர்கள் அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

26 வயதேயான ஜேம்ஸ் டெய்லருக்கு கடந்த வாரம் உடல் நல குறைவு ஏற்பட்டது. இதனால் ஸ்கேன் எடுத்து பார்த்ததில் அவர் தீவிரமான இருதய நோயால் (ARVC- Arrhythmogenic Right Ventricular Arrhythmia) பாதிக்கப்படிருப்பது தெரியவந்துள்ளது.

7 டெஸ்டில் மட்டுமே விளையாடியுள்ள அவர் 2012ல் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். கடந்த வருடம் நடந்த டெஸ்ட் போட்டிகளில் கூட இடம்பெற்றிருந்தார்.

27 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ள டெய்லர் கடந்த வருடம் அயர்லாந்து சுற்றுப்பயணம் சென்ற இங்கிலாந்து அணிக்கு தலைவராக செயல்பட்டார்.

இந்நிலையில் தற்போது தீவிரமான இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள டெய்லர் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு அறிவித்துள்ளார்.

ஜேம்ஸ் டெய்லரின் இந்த நிலை இங்கிலாந்து கிரிக்கெட் சபை மற்றும் கிரிக்கெட் வீரர்களுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது பற்றி ஜேம்ஸ் டெய்லர் கூறுகையில், இது எனது வாழ்க்கையில் மிகவும் கடினமான வாரமாக இருந்தது. எனது உலகம் கீழ் நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஆனாலும் அதில் போராட தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இயக்குநர் ஆன்ரூ ஸ்ட்ராஸ் கூறுகையில், எதிர்பாராத விதமாக ஜேம்ஸ் டெய்லரின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருவது அதிர்ச்சியாகவும், வருத்தமாகவும் உள்ளது. கிரிக்கெட் சபை அவருக்கு உதவ தயாராக இருக்கிறது என்று கூறியுள்ளார். (க)

# தந்தையாகிறார் ஹர்பஜன் சிங்



இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங்கின் மனைவி கீதா பஸ்ரா கர்ப்பமாக இருப்பதால் விரைவில் அவர் தந்தையாக உள்ளார்.

கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங்- பாலிவுட் நடிகை கீதா பஸ்ரா இருவரும் கடந்த 5 ஆண்டுகளாக தீவிரமாக காதலித்து வந்தனர்.

இந்த நிலையில் இவர்களது திருமணம் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் பஞ்சாப் மாநிலத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது.

இந்நிலையில் ஐபிஎல் 9வது தொடரின் தொடக்க விழாவுக்கு ஹர்பஜன்சிங், தனது மனைவி கீதா பஸ்ராவுடன் வந்திருந்தார்.

எப்போதும் அழகான ஆடை, ஹை கீல்ஸ் செருப்பு என அசத்தும் கீதா பஸ்ரா, சாதாரணமாக ஒரு / தளர்ச்சியான ஒரு உடை அணிந்து கொண்டு வந்தார்.

மேலும், தனது வயிற்றையும் கைப்பையால் மறைத்துக் கொண்டிருந்தார். அவரது வயிறு லேசாக பெரிதாக இருந்தது. இதனால் விரைவில் தந்தையாகப் போகும் ஹர்பஜன் சிங்கிற்கு அங்கு வந்தவர்கள் வாழ்த்தும் தெரிவித்துள்ளனர். (க)

# இருபது-20 போட்டியில் 300 விக்கெட்டுக்கள் வீழ்த்தி டுவைன் பிராவோ சாதனை



ஐ.பி.எல் தொடரில் பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் பந்துவீச்சில் மிரட்டிய டுவைன் பிராவோ புதிய சாதனை படைத்துள்ளார்.

மொகாலியில் நேற்று முன்தினம் நடந்த ஐபிஎல் லீக் போட்டியில் குஜராத் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தியது.

இந்தப் போட்டியில் 4 ஓவர்களை வீசிய குஜராத் அணியின் பிராவோ 22 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அவர் பஞ்சாப் அணித்தலைவர் டேவிட் மில்லர் விக்கெட்டை எடுத்த போது ஒட்டுமொத்த இருபது-20 போட்டிகளில் 300 விக்கெட்டுகளை கைப்பற்றிய முதல் வீரர் என்ற சாதனையை படைத்தார்.

முன்னதாக அனைத்து வகையான இருபது-20 போட்டிகளிலும் சேர்த்து இலங்கை வேகப்பந்துவீச்சாளர் மலிங்க 299 விக்கெட்டுகள் (221 ஆட்டங்களில்) வீழ்த்தியதே சாதனையாக இருந்தது.

தற்போது அதை தகர்த்த டுவைன் பிராவோ 292 இருபது-20 போட்டிகளில் மொத்தம் 302 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். (க)

# துர்முகி வருஷப் பிறப்பு கருமங்கள்

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புதன் | | சந் |
| கேது | துர்முகி வருஷ ஜாதகம் | | |
| | | | குரு ராகு |
| | சனி, செவ் | லக்கினம் | |

## வாக்கிய பஞ்சாங்கம்

மன்மத வருஷம் பங்குனி மாதம் 31 ஆம் திகதி (13.04.2016) புதன்கிழமை முன்னிரவு 6 மணி 36 நிமிடம் பூர்வபக்க சப்தமித் திதியில் திருவாதிரை நான்காம் பாதத்தில் துலா இலக்கினத்தில் விருச்சிக நவாம்சத்தில் சூரிய காலவோரையில் இப்புதிய துர்முகி வருஷம் பிறக்கின்றது. அன்று பிற்பகல் 2 மணி 36 நிமிடம் முதல் அன்று முன்னிரவு 10 மணி 36 நிமிடம் வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் கடம்பமிலையும் காலில் வேப்பமிலையும் வைத்து ஸ்நானம் செய்து நல்ல பச்சை வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் பச்சைக்கரை வெள்ளைக்கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து மரகதம், வைரம் இழைத்த ஆபரணம் அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி, விக்னேஸ்வரன் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து இயன்ற தான தருமங்கள் செய்து குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி, அவர்களின் ஆசி பெற்று உறவினர், நண்பர்களுடன் அளவளாவி, அறுசுவை கலந்த உணவருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடி, தீபம், நிறைகுடம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து புதிய வருடப் பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரிய தவத்தால் பெற்ற மானிடப் பிறவியில் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்.

### சங்கிரமதோஷ நட்சத்திரங்கள்

மிருகசீரிடம் 3,4 ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 4ஆம் கால், அனுசம், கேட்டை, சதயம் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ்செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து தோஷ நிவர்த்தி செய்யக் கடவர்.

## திருக்கணித பஞ்சாங்கம்

நிகழும் மன்மத வருஷம் பங்குனிமாதம் 31 ஆம் திகதி (13.04.2016) புதன்கிழமை இரவு 7 மணி 48 நிமிடம் துர்முகி என்னும் பெயருடைய புத்தாண்டு உதயமாகின்றது. அன்று நட்சத்திரம் புனர்பூசம் முதலாம் பாதம், திதி பூர்வபட்ச சப்தமி. இது 60 வருஷ சுற்றுவட்டத்தில் 30ஆவது வருஷமாகும். அன்று மாலை 3 மணி 48 நிமிடம் முதல் இரவு 11 மணி 48 நிமிடம் வரை மேட சங்கிரமன புண்ணிய காலம் என்று சொல்லப்படும். வருஷம் பிறக்கும் போது உதயலக்கினம் துலாம் ஆகும்.

### சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

மிருகசீரிடம் 3,4 ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம், அனுசம், கேட்டை, பூரட்டாதி இவற்றிற் பிறந்தோர் மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ்செய்து தான தருமங்கள் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

## மருத்துநீர் தயாரித்தல்

தாழம்பூ, தாது,
மாதுளம்பூ, தாமரைப்பூ,
துளசி, வில்வம்,
அறுகு, பால்,
கோமயம், கோசலம்,
கோரோசணை, குங்குமப்பூ,
பச்சைக் கர்ப்பூரம்,
மஞ்சள், சுக்கு,
திப்பிலி

ஆகியவற்றை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

## துர்முகி வருஷ கைவிசேஷம்
### வாக்கிய பஞ்சாங்கம்

16.04.2016 சனிக்கிழமை இரவு 10.38 மணி முதல் 12.23 மணிவரை
16.04.2016 சனிக்கிழமை பின்னிரவு 2.35 மணி முதல் 4.04 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை பகல் 9.07 மணிமுதல் 9.35 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை பகல் 9.47 மணிமுதல் 11.46 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை இரவு 6.05 மணிமுதல் 7.25 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை இரவு 10.19 மணிமுதல் 12.15 மணிவரை

### திருக்கணித பஞ்சாங்கம்

16.04.2016 சனிக்கிழமை மாலை 6.10 மணி முதல் 7.30 மணிவரை
18.04.2016 திங்கட்கிழமை இரவு 10.16 மணிமுதல் 11.20 மணிவரை

## துர்முகி வருஷ (2016-2017) நட்சத்திர கந்தாய, ஆதாய பலன்கள்

| நட்சத்திரங்கள் | | சித்திரை-ஆடி | ஆவணி-கார்த்திகை | மார்கழி-பங்குனி |
|---|---|---|---|---|
| 01 | அச்சுவினி | 7 | 1 | 1 |
| 02 | பரணி | 2 | 2 | 4 |
| 03 | கார்த்திகை | 5 | 3 | 2 |
| 04 | ரோகிணி | 0 | 1 | 0 |
| 05 | மிருகசீரிடம் | 3 | 2 | 3 |
| 06 | திருவாதிரை | 6 | 0 | 3 |
| 07 | புநர்பூசம் | 1 | 1 | 4 |
| 08 | பூசம் | 4 | 2 | 2 |
| 09 | ஆயிலியம் | 7 | 0 | 0 |
| 10 | மகம் | 2 | 1 | 3 |
| 11 | பூரம் | 5 | 2 | 1 |
| 12 | உத்தரம் | 0 | 0 | 4 |
| 13 | அத்தம் | 3 | 1 | 2 |
| 14 | சித்திரை | 6 | 2 | 0 |
| 15 | சுவாதி | 1 | 0 | 3 |
| 16 | விசாகம் | 4 | 1 | 1 |
| 17 | அனுசம் | 7 | 2 | 4 |
| 18 | கேட்டை | 2 | 0 | 2 |
| 19 | மூலம் | 5 | 1 | 0 |
| 20 | பூராடம் | 0 | 2 | 3 |
| 21 | உத்தராடம் | 3 | 0 | 1 |
| 22 | திருவோணம் | 6 | 1 | 4 |
| 23 | அவிட்டம் | 1 | 2 | 2 |
| 24 | சதயம் | 4 | 0 | 0 |
| 25 | பூரட்டாதி | 7 | 1 | 3 |
| 26 | உத்தரட்டாதி | 2 | 2 | 1 |
| 27 | ரேவதி | 5 | 0 | 4 |

✦ ஒரு கந்தாயம் 4 மாதங்கள் கொண்டது.

✦ ஒரு கந்தாயத்தில் 0 ஏற்பட்டால் 4 மாதங்கள் நிம்மதிக் குறைவு ஏற்படலாம்

## இராசி பலன்

13.04.2016
(பங்குனி 31, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி பின்னிரவு 3.50 மணிவரை
திருவாதிரை முன்னிரவு 8.08 மணிவரை
சுபநேரம் 4.36-6.06 மணிவரை
இராகுகாலம் 12.06-1.36 மணிவரை
நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ
சுவாமிகள் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி சுக் | புத | | சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம், கேட்டை | | |
| | | | குரு ராகு |
| | சனி, செவ் | | |

**மீனம்** வாகன சுகமுண்டு, எதிர்பார்ப்புக்கள் கைகூடும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மேடம்** உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**இடபம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், அலங்காரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மகரம்** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உடல் நலன் சீராகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், போசன சுகமுண்டு.

**சிம்மம்** அந்நிய தேச பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**தனுசு** சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் சிலரைத் தேடிச் சென்று சந்திப்பீர்கள், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம், போசன சுகக்குறைவுண்டு, வரவைவிட செலவுகள் அதிகமாகும்.

**துலாம்** தடைகள் விலகி தனவரவுகள் எற்படலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.

# புத்தரிசி விழாவில்



அநுராதபுரம் ஜயசிறி மஹாபோதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புத்தரிசி விழாவில் ஜனாதிபதி அரி சியை பாத்திரத்தில் நிரப்பி நிகழ்வை ஆரம்பிப்பதைப்படத்தில் காணலாம். (இ-5)

# பேச்சுக்கே இடமில்லை

## சுவாமிநாதன் திட்டவட்டம்

(சென்னை)

வடக்கு, கிழக்கில் 65 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைக்கும் ஒப்பந்தம் ஆர்சிலர் மிட்டல் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும், இந்தப் பணியை வேறொரு நிறுவனத்திடம் ஒப்படைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்றும் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

"இந்த திட்டத்தின் முதற்கட்டத்துக்கு இலங்கை அமைச்சரவை கடந்த பெப்ரவரியில் அனுமதி அளித்துவிட்டது.

உருக்கினாலான இந்த பொருத்து வீடுகளை அமைக்கும் பணிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கபபட்டுள்ளன.

முழுமையான வசதிகளுடன் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் முதலாவது பாரிய திட்டம் இது.

இந்திய வீடமைப்புத் திட்டம் போன்ற முன்னைய வீடமைப்புத் திட்டங்களில், உரிமையாளர், தரம் குறைந்த கட்டப் பொருட்களைப் பயன்படுத்தியும், கடன் வாங்கியும் வீடுகளை அமைக்கும் நிலை காணப்பட்டது.இந்திய வீடமைப்புத் திட்டத்தில், கட்டப்பட்ட வீடுகள் ஒழுங்காக பூசப்பட வில்லை. ஜன்னல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட மரம் தரம் குறைவானது. இந்த வீடுகளில் பல குறைபாடுகள் உள்ளன. இந்திய அரசாங்கத்துக்கு எதிரான கருத்து அல்ல. அவர்கள் எமக்கு பெரிய உதவியை செய்துள்ளனர். ஆனால் இந்தியாவின் வீடுகள் முற்றிலும் வெற்றிகரமானவை அல்ல" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# சிரியாவில் போர் விமானங்களின் கடும் தாக்குதலில் சிக்கி 6 பேர் பலி

சிரியாவின் வடக்கே அமைந்துள்ள அலெப்பே பிரதேசத்தின் பல பகுதிகளில் சிரிய போர் விமானங்கள் மேற்கொண்ட கடுமையான தாக்குதல்கள் காரணமாக ஆறு பொதுமக்கள் பலியானதுடன் அதிகமானோர் காயமடைந்ததாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சிரியாவின் வடக்கில் பல்வேறு பகுதிகளை தாம் கைப்பற்றி விட்டதாக ஐ.எஸ். அமைப்பு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


நாளை தேர் உலா வரும்

யாழ். அத்தியடிப் பிள்ளையார்



வசந்த மண்டப பூசை காலை 8.00

எம்பெருமான் தேருக்கு எழுந்தருளல் 9.00

தேர்ப் பவனி ஆரம்பம் 9.30

-கோயில் நிர்வாகம்-



மீண்டும் ஸ்ரீதேவி வில்லிசைக்குழு



(10.07.2016 வரை)

உங்கள் ஆலய திருவிழாக்களில் அழைத்து மகிழுங்கள்

தொடர்பு-வில்லிசை சக்கரவர்த்தி

கலைமாமணி Dr.S.S.குருஜீ

T.P:-0757428011, 0767256024

நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்.

(3928)



Spark HYBRYD VEHICLES

HYBRID SERVICE

ஹைபிரிட் பிந்திய பராமரிப்பு சேவை மையம்

HYBRID AFTER CARE SERVICE CENTER

களனி / கொஹுவல

ஹைபிரிட் பேரணி யாழ்ப்பாணத்தில்

பேரணி நல்லூர் கோயிலில் 13-ம் திகதி காலை 7 மணியளவில் ஆரம்பித்து யாழ்.நகர் ஊடாக செல்லும்



*3 Years warranty
*3 years service Free
*3 free system checks checks
*After sale Service and parts
* 24 hour road side assistance
* Hotline Support
*Between warranty period transport services are provided free for the services.

HYBRID

HELPING YOU GO FURTHER.



With Ev Hybrid Maintenance, going green has never been simpler.We help you help the environment by requiarly checking the health of your car, employing people passionate about the nature and committed to keeping your green driving passions alive, Diagnostic Engineers at EV Hybrid Maintenance offer a range of quality services and expert advice including;

* EV& Hybrid system scanning and fault trouble shooting
*Hybrid Engine Tune-up
* Hybrid battery cooling system service
* ECVT,HMMF oil changing
*IMA Battery changing
*Home changing Station Installation
*Diagnostice service and repair
*Body shop and spare parts
*Customer choices for the colors option
*Paint work restoration
*System Scan check
*Drain Plug Gasket and more

www.sparkev.lk
HEAD OFFICE : #57, COTTA ROAD,COLOMBO 08
HOTLINE:0117 590 590 / 075 624 6345

(C-4290)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா:18செவ் 4 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L/கமம்
தொ.இ: B/5724

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம
கி.பா: 46சூரிசெவ் 5 இல
உயரம்: 5'6"
தகைமை/தொழில்O/L/சொந்ததொழில
தொ.இ: B/5726

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 34
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ்
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: B/5727

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 25
தகைமை/தொழில்:BSc/வங்கியாளார்
தொ.இ: B/5728

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 72
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/5748

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 31
உயரம்: 160cm
தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்
தொ.இ: G/5754

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 63செவ் 4 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:HNDIT
தொ.இ: G/5756

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 53
உயரம்: 157cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/5761

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# ஓயாத அலைகளால் உலகளவில் அடையாளப்படுத்தப்பட்டோம்

## சிறிதரன் எம்.பி. பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

ஓயாத அலைகளால்தான நாம் இந்த உலத்தில் உயர்த் திப் பார்க்கப்பட்டவர்கள். ஓயாத அலைகள் 1,2,3 என்று அடையாளப்படுத்தப்பட்டோம் என யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.சிறீ தரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் வரலாற்றின் மறைக் கப்பட்ட, மறுக்கப்பட்ட பக்கங் களை உள்ளடக்கி சுஜித்தன், நீதுஜன் எழுதிய "அலை அழித்த தமிழ்" நூல்வெளி யீட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கழமை யாழ்.இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் சிறப்பு விருந்தின ராக கலந்து கொண்டு உரை யாற்றும் போது அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரை யாற்றுகையில்,

யாழ்.மண்ணில் தற் போதைய சூழலில்நடைபெறு வரும் சம்பவங்களை பார்க் கும் போது இளைஞர்களை நோக்கி எல்லோருடைய புரு வங்களும் உயர்த்தப்படுகி றது. இளைஞர்கள் எல்லாவற் றையும் கைவிட்டு விட்டார் கள் இளைய தலைமுறை வேறு திசைக்கு செல்கிறது.

தமிழர்கள் இனி வாழக் கூடிய சூழ்நிலை இல்லை, இந்த இளைஞர்கள் எல்லாம் எங்கே செல்லப் போகிறார் கள் என்ற பல்வேறுபட்ட வினாக்களை கேட்கும் சமு தாயத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

இவ்வாறான சூழ் நிலை யில் இளைஞர்களால் எமது வரலாற்று படைப்புக்கள் வெளி யிடப்படுவது பெருமை கொள் ளக் கூடியதும் வரவேற்கத் தக்கதுமான விடயம் ஆகும்.

ஓயாத அலைகளால் தான நாம் இந்த உலகத்தில் உயர்த் திப் பார்க்கப்பட்டவாகள். ஓயாத அலைகள் 1,2,3 என்று இந்த உலகத்தில் அடையாளப்படுத் திப்பார்க்கப்பட்டோம்.

தமிழர்கள்தமது வாழ்வை, இருப்பிடத்தை தேடிக்கொண டிருக்கிறார்கள்.

ஆனால் எங்கும் முற்றுப் பெற்ற தாக இல்லை. எனவே தற்போது இவ்வாறான தேடல் முயற்சியில் இளைய தலை முறை சிந்திக்கிறது என்றால் எமது தலைமுறை வாழும் எங்கள் தமிழ் மொழி வாழும என்பதில் ஐயம் இல்லை.

எமது வரலாறு ஒரு கால வர்த்தமானங்களால் கொத் துண்டு பிளவுண்டு போயிருக் கிறது. ஆனால்அழிந்துபோகாது. அது வரலாற்றின் பாடமாக திரும்பி திரும்பி எங்கேயோ ஒருமூலையில்தன்னை அடை யாளப்படுத்தி நிமிர்ந்து நிற் கும்.

அந்த அடையாளம் தான் இவ்வாறான ஆக்கங்களின் ஆரம்பம்ஆகும். எமது இளைய தலைமுறை எமது அடை யாளத்தை தொட்டிருக்கும் காலம் இதுவாகும்.

இதனை தொடர்ந்து குடா ரப்புதரைஇறக்கம், ஓயாத அலை கள், முள்ளிவாய்கால் என் பவை பற்றி எழுத வேண்டும்.

ஆனால் அந்த படைப்புக் களை எவ்வாறு கொண்டு வருவது எனும் ஏக்கம் இளை ஞர்களிடத்தில் இருக்கலாம்.

ஆனால் ஒரு தேசிய விடு தலை இயக்கம் தரையாலும் கடலாலும் தரையிறக்கம் செய்த வரலாறு, அது தமிழர் களுக்குரிய வரலாறு, அது ஈழத்தின் வரலாறு, எழுதப் பட வேண்டியவை மறக்க முடியாதவை.

இவ்வாறான படைப்பு களை வெளிக்கொண்டு வரும் போது 60 ஆயிரத்துக்கு மேற் பட்டவர்கள் இந்த மண்ணுக் காக அர்ப்பணித்த தியாகத்தை அது தொட்டுச் செல்லும்.

எமது வரலாறு இத்துடன் நிற்க வில்லை. வரலாறு பரசவிக்கின்றவாகளை அடை யாளப்படுத்த வேண டியது எமது கடமை.

எமது வரலாற்றை எழு துங்கள்மாற்றம்என்ற சொல்லை தவிர அனைத்தும் மாறும். அந்த கால மாற்றம் முள் ளிவாய்க்காலுடன் முடிந்து போனதாக இல்லாமல் வர லாற்றை சரியாக பயன்படுத் துங்கள்.

வரலாறு என்பது ஒரு மனிதனை புதிய திசைக்கு கொண்டு செல்கிறது. அதன் பாதையில் நாங்கள் சரியாக நடக்கும் போது வரலாறு எம்மை சரியான பாதை யில் கொண்டு செல்லும்.

நாம் பிழையாக பயன்படு த்தினால் வரலாறு தான் விரும்பும் திசைக்கு கொண்டு செல்லும் வரலாறு விரும்பும் திசைக்கு போகப்போகிறோமா இல்லைவரலாற்றின்பாதையை சரியாக பயன்படுத்தி செல்லப் போகிறோமா என்பது மிக வும் முக்கியமானது.

எனவே ஈழத்து மண் ணினதும் தமிழர் வரலாற் றிலும் புதிய மாற் றத்தை தரும் மனிதர்களாக இளை ஞர்கள் எம் மண்ணில் மலர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# 300 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்திய குமாரசிங்க

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான, டெலிகொம் மொபிடெல் தலை வர் குமாரசிங்க சிறிசேன அரசாங்கத்தின் கேள்விப் பத்திர நடைமுறையை மீறி செயற்பட்டுள்ளதாக தகவல் கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக மொபி டெல் நிறுவனத்திற்கு 20 மில்லியன் டொலர் (300 கோடி) வரை நட்டம் ஏற் பட்டுள்ளதுடன், அவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்யப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மொபிடெல் காப்புறுதிக்கு குறைந்த கேள்விப்பத்தி ரத்தை யூனியன் இன்சூ ரன்ஸ் நிறுவனம் சமர்ப்பித் திருந்தது.

இது 140 அமெரிக்க டொலர் மில்லியனாகும். யூனியன் இன்சூரன்ஸ் நிறு வனம் சமர்ப்பித்திருந்த கேள் விப்பத்திரத்தையே இரண்டு கேள்விப்பத்திர வாரியம் மூலம் மற்றும் மதிப்பிடும் குழுவின் மதிப்பீட்டின் பின் னர் பணிப்பாளர் சபை அனு மதித்திருந்தது.

எனினும் குமாரசிங்க சிறிசேனவினால் குறித்த கேள்விப்பத்திரத்தை யூனி யன் காப்புறுதி நிறுவனத் திற்கு வழங்காமல் அதனை விட 20 மில்லியன் டொலர் அதிகமாக சமர்ப்பித்திருந்த ஸ்ரீலங்கன் இன்சூரன்ஸிற்கே வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் இன்சூரன்ஸ் முழுமையான அரசாங்க நிறுவனம் அல்ல அது அரை அரசாங்க நிறுவனமாகும்.

இதனால் மொபிடெல் நிறுவனத்திற்கு 300 கோடி நட்டத்தை ஏற்படுத்தியுள் ளார். (இ-5)

# சோடாவுக்குச் சென்றவர்கள் ஹாஸ் சிலிண்டரை. திருடினர்

நெல்லியடி நகரில் உள்ள கடையொன்றுக்கு, சோடா வாங்க சென்றவர்கள் ஹாஸ் சிலிண்டரையும் தூக்கிச் சென்ற சம்பவம், கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில், நகரில் உள்ள கடை ஒன்றிற்கு, சென்ற இருவர் சோடா கேட்டுள்ளனர். அதனை எடுத்து வர்த்தகர் கொடுத்த போது வேறு கம்பனி ஒன்றின் சோடா தருமாறு கேட்டுள்ளனர். அதனை மாற்றிக் கொடுத்த போது மற்றைய நபரைக் காணவில்லை. வர்த்தகர் வெளியில் வந்து பார்த்த போது அங்கு வைக்கப்பட்டிருந்த ஹாஸ் சிலிண்டர் ஒன்றைத்தூக்கிக் கொண்டு ஒருவர் ஓடுவதைக் கண்ணுற்று கூக்குரல் இட்ட போதும் அவர்கள் மோட்டார் சைக்கிளில் ஏறி ஓடித்தப்பி விட்டனர்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெல் லியடிப் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இ


## அஞ்சலி



தோற்றம் 16-12-1954

மறைவு 11-04-2016

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினரும்

கொழும்பு விவேகானந்த சபையின் தலைவருமான

**திரு.இரத்தினவடிவேல் சுரேந்திரன்**

அவர்களின் மறைவு இந்நாட்டு இந்து மக்களுக்கு பேரிழப்பு.

அன்னாரின் மறைவினால் துயரில் மூழ்கியிருக்கும்

அவரின் குடும்பத்தினரின் கவலையில் நாமும் பங்குகொண்டு

அவர்களுக்கு இந்நாட்டு இந்து மக்களின் சார்பில்

அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(சி-4297)

அகில இலங்கை இந்து மாமன்றம்

91/5, A.C.H.C. கட்டடம்.
சேர். சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை. கொழும்பு 02.
தொலைபேசி: 0112 434 990 தொலைநகல்: 0112 344 720
மின்னஞ்சல்: hinducongress@gmail.com



## மரண அறிவித்தல்



உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும் வாழ்வார்
யோவான் 11:25

**அருட்பணி மனுவல் ஞானப்பிரகாசம்**

பிறப்பு 17.11.1948

இறப்பு 11.04.2016

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் சிலாபம் மறை மாவட்டத்தை பணித்தளமாகவும் கொண்டு பணியாற்றிய அருட்பணி மனுவல் ஞானப்பிரகாசம் அவர்கள் கடந்த 11.04.2016 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான மனுவல்-ரெஜினா தம்பதிகளின் அன்பு மகனும் காலம் சென்ற அருட்சகோதரி மேரிரோஸ் அவர்களினதும் மனுவல் நட்சத்திரம், யேசுராசா மேரி யோசேப்பின் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலம் சென்ற செபமாலை மரியான் மரியசலோமையின் மருமகனும் காலஞ் சென்றவர்களான பங்கிராஸ், அந்தோனிப்பிள்ளை ஆகியோரினதும் சிங்க ராசா, யேசுராசா, மரியதாஸ், தேவதாஸ், மரியசேகரன் ஆகியோரின் மைத்து னரும் காலஞ்சென்ற அன்ரனி சூசை சந்தியாப்பிள்ளை, செபமாலைமுத்து, அன்ரன் பாலசிங்கம், அருட்பணி லீனஸ் மரியநாயகம் ஆகியோரின் மருமகனும் சைஜின்சாரா, நட்சத்திரம் லீனஸ்(லண்டன்) ஆகி யோரின் பெரியப்பாவும் ஜெரி ஜஸ்ரின் (பிரான்ஸ்), ஜெரி நொயல் (லண்டன்), ஸ்ரெலின் சாந்தி நொய்லின் (பிரான்ஸ்), ஜெரி கிறிஸ்ரீன், யஜீபன் சாந்திமெடோனா ஆகியோரின் மாமனாரும் ஸ்ரெலின் அமலியா, அர்வின் , அர்மிதா, ஜெரி ஜஸ்ரின்வரீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை (13.04.2016) நண்பகல் 12 மணி யளவில் ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாந்தி இல்லம்
முகாம் வீதி
ஊர்காவற்றுறை

(4201)

தகவல்
திரு/திருமதி யேசுராசா மேரியோசேப்பின்
குடும்பத்தினர்

### 14 நீர்ப்பாசனக் குளங்களின் கீழ்

# 250 ஏக்கரில் நெற்செய்கை

# 60 ஏக்கரில் உப உணவு செய்கை

### பாண்டியன் குளம் கமநல சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

**பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 14 நீர்ப்பாசனக்குளங்களின் கீழ் நடப்பாண்டில் சிறுபோக பயிர்ச் செய்கையாக 250 ஏக்கரில் நெற்பயிர்ச்செய்கையும் 60 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச்செய்கையுமாக மொத்தம் 310 ஏக்கரில் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் பாலசுந்தரம் பொன்னப்பெருமாள் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள சிராட்டிக்குளத்தில் 27 ஏக்கர், மூப்பன் குளத்தில் 6ஏக்கர், கொம்பறுத்த குளத்தில் 25 ஏக்கர், வன்னிவிளான் குளத்தில் 46 ஏக்கர், வண்டிகட்டுக்குளத்தில் 22 ஏக்கர், எரிவில்குளத்தில் 16 ஏக்கர், நட்டாங்கண்டல் குளத்தில் 5 ஏக்கர், வடகாடுகுளத்தில் 15ஏக்கர், கிடாய் பிடித்த குளத்தில் 39ஏக்கர், பாலைப் பாணிக்குளத்தில் 12ஏக்கர், தெகிலன்குளத்தில் 6ஏக்கர், கும்மாங்குளத்தில் 6ஏக்கர், பனங்காமம் குளத்தில் 25 ஏக்கருமாக மொத் தம் 250 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை கொல்லவிளான் குளத்தில் 60 ஏக்கர் உப உணவுப் பயிர்ச்செய்கையில் உழுந்து 30 ஏக்கரிலும் நிலக்கடலை 15ஏக்கரிலும் பயறு 15ஏக்கரிலும் பயிர்கள் பயிரிடப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2-3-15)

### பெரிய பன்றிவிரிச்சான் குளத்தின் புனரமைப்பு பணிகளில் இடம்பெற்ற மோசடிகள் வெளிக்கொணரப்பட வேண்டும்

### பிரதேச மக்கள் கோரிக்கை



மன்னார் பெரிய பன்றிவிரிச்சான் குளத்தின் புனரமைப்பு பணிகளில் கடந்த காலங்களில் இடம் பெற்ற மோசடிகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவிலுள்ள பெரியபன்றி விரிச்சான் கிராம விவசாயிகள் நெற் செய்கைக்கு தேவையான நீரை இந்த குளத்திலிருந்து பெறுகின்றனர்.

200 விவசாய குடும்பங்கள் சுமார் 600 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்கின்றனர். 1957 ஆம் ஆண்டுக்கு பின்னர் பாரியளவிலான புனரமைப்பு பணி கள் எவையும் முன்னெடுக்கப் படவில்லை என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2013 இல் ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்பு பணிகள் உரிய முறையில் இடம்பெறவில்லை எனவும் பல்வேறு ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் விவசாயிகள் கூறுகின்றார்கள். அத்துடன், அரசியல் செல்வாக்கு காரணமாக புனரமைப்பு ஒப்பந்தம் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

குளக்கட்டின் புனரமைப்புப் பணிகள் சுமார் 76 மில்லியன் ரூபா செலவில் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், இதற்கு முன்னர் இடம்பெற்ற ஊழல் மோசடிகளால் இந்த பணிகளும் இடை நடுவில் கைவிடப்படுமா என விவசாயிகள் அச்சம் வெளியிடுகின்றனர்.

கடந்த காலங்களில் தமது கிராமத்தின் பெயரில் செலவு செய்யபபட்ட பணத்திற்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை வெளிச்சத்திற்கு வர வேண்டும் என்பது இந்த பகுதி விவசாயிகளின் கோரிக்கையாகும். (2-3)

## கடைசி பங்குனித்திங்கள் திருவிழா நேற்று; மஞ்சம் இழுக்கும் நிகழ்வு இம்முறை இல்லை



உவர் நீரில் விளக்கெரியும் சிறப்பினை உடைய வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நேற்றுக் கடைசி பங்குனித் திங்கள் திருவிழா இடம்பெற்றது.

இதன்போது பூசைகள் மற்றும் நிகழ்வுகள் என்பன நடைபெற்றன.

கொளுத்தும் வெயிலை பொருட்படுத்தாது பக்தர்கள் ஆலயத்தில் ஒன்று கூடி நேர்த்திக் கடன் செலுத்தினர்.

வருடாவருடம் திருமஞ்சத்தில் அம்பாள் வீதி உலா வரும் காட்சி நடைபெறும் நிலையில் தற்போது ஆலயத்திற்கான கட்டட வேலைகள் நடைபெற்றுவருவதால் அம்பாள் வீதி உலாவரும்நிகழ்வு இம்முறை இடம்பெறவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இரவு 9 மணி வரை அடியார்கள் நேர்த்திக் கடன் செலுத்தி வந்தனர்.

இதேவேளை அடுத்த வருடம் பங்குனி மாதம் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு எண்ணி இருப்பதாக ஆலய பூசகர் தெரிவித்துள்ளார். (2-3-281)

## கூட்டுறவாளர்களின் மேதினம் இம்முறை கிளிநொச்சியில்

மே மாதம் முதலாம் திகதி மேதினப் பேரணியையும் மே தினக் கூட்டத்தையும் நடத்துவதற்கு கூட்டுறவாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

கடந்த 05.04.2016 இல் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த கூட்டுறவு அமைப்புக்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே கூட்டுறவாளர்களின் மேதினத்தை இம்முறை கிளி நொச்சியில் கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழி ற்சங்கம் பூரண ஆதரவைத் தெரிவித்திருப்பதுடன் மே தினப் பேரணி யிலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்வதெனத் தீர்மானித்துள் ளது.

கடந்த ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டுறவாளர்களின் மேதினப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் ஆயிரக் கணக்கான கூட்டுறவு ஊழியர்கள் மற்றும் கூட்டு றவாளர்கள் கலந்து கொண்டிருந் தனர்.

அதேபோன்று இம்முறையும் வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரையும் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள பேரணியிலும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் வடிவேல் சிவகுமார் அறிவித்துள்ளார். (2-3)

## 180 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் மன்னாரில் 6 கட்டடங்கள் திறந்து வைப்பு

(மன்னார்)



சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கத்தை முன் மாதிரியாகக் கொண்டு எயிட்ஸ் மற்றும் மலேரியா நோய்களை அழித்தொழிப்பதற்கான கருத்திட்ட உலக நிதியத்தின் நிதியுதவியுடன் மன்னார் மாவட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் நேற்று முன்தினம் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள் ளது.

மன்னார் மாவட்ட மக்களின் வைத்திய தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் சிலாபத்துறை பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, முசலி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நானாட்டான் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு, சிறுநாவற்குளம் பிராந்திய மலேரியா தடை இயக்கம், எருக்கலம்பிட்டி பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, பேசாலை பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றுக்கான புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கட்டடங்களும் சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக் கீட்டின் கீழ் மொத்தமாக 180 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட குறித்த 6 நிலையங்களும் அன்றையதினம் திறந்து வைக்கப்பட்டன.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் வழிகாட்டலின் கீழ், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பா.சத்தியலிங்கம் தலைமையில் குறித்த கட்டடங்கள் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிறிமுஸ் சிறாய்வா, வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள், வைத்திய அத்தியட்சகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மீள்குடியேறிய மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான வைத்தியத் தேவையை பூர்த்தி செய்வதை நோக்கமாக கொண்டு மேலதிக சுகாதார வைத்திய சேவை களை மேற்கொள்ளும் நடவடிக்கையை மன்னார் மாவட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (2-3)




## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கிளிநொச்சி-1)

கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தின் போது புதிய நிர்வாகசபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் வித்தியாலயத்தின் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளதால் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் அறிவித்துள்ளார். (2-3-277)

# முகமாலையில் மிதிவெடியகற்றும் பணிகளை விரைவுபடுத்த நவீன இயந்திரங்களை பயன்படுத்த அரசாங்கம் அனுமதி

## ஹலோரஸ்ற் திட்டப்பணிப்பாளர் டேமியன் தெரிவிப்பு

முகமாலை இந்திராபுரம் பகுதியில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபடும் ஹலோரஸ்ற் நிறுவனத்தினர் மிதிவெடியகற்றும் பணியில் புதிய இயந்திரங்களை ஈடுபடுத்தி வருகின்றனர்.

மேற்படி இயந்திரத்தை முகமாலைப் பகுதியில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபடுத்துவதற்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்ததையடுத்து இந்த வருடத்தில் ஆரம்பம் முதல் மேற்படி இயந்திரம் இப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

நிலத்தில் ஒரு அடி ஆழத்திற்கு மண்ணை வெட்டி எடுக்கும் இயந்திரம் படிமுறை செயற்பாட்டினூடாக மிதிவெடிகளையும் குண்டுகளையும் பிரித்து எடுக்கின்றது. பின்னர் அவை வெடிக்க வைக்கப்படுகின்றன.

இவ்வாறு மிதிவெடிகள், குண்டுகள் பிரித்தெடுக்கப்பட்ட மண் மீண்டும் வெட்டி எடுக்கப்பட்ட அதே இடத்தில் போடப்படுகின்றது.


இதேவேளை மேற்படி மிதிவெடி அகற்றும் பணியில் முகமாலைப் பகுதியில் டாஷ்(Dash) நிறுவனமும் ஈடுபட்டு வருகிறது.

கடந்த 13 வருடங்களாக இலங்கையில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் ஹலோரஸ்ற் நிறுவனம் இரண்டு இடத்திற்கும் அதிகமான மிதிவெடிகளை அகற்றியுள்ளது.

முகமாலைப் பகுதியில் இதுவரை சுமார் 22 ஆயிரம் மிதிவெடிகளையும் 400 வரையான அமுக்க வெடிகளையும் 60 ஆயிரம் தோட்டாக்களையும் 3 ஆயிரம வெடிக்காத வெடிபொருட்களையும் மீட்டுள்ளது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை முகமாலைப் பகுதிக்கு விஜயம் செய்த ஹலோரஸ்ற் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் டேமியன் இத்தாவில் முகமாலை இந்திராபுரம் பகுதிகளில் இடம்பெற்றுவரும் மிதிவெடியகற்றும் பணிகளைப் பார்வையிட்டார்.

பிரதேச மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் இணைந்து கொண்டதுடன் குடிசன அடர்த்தி மிக்க பகுதிகளை அடையாளம் காட்டினார்.




மிதிவெடிகளை அகற்றும் நவீன இயந்திரம்

இதன் மூலம் குறித்த பகுதிகளில் விரைவாக மிதிவெடியகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படுவதற்கு வாய்ப்பாக அமையும் என சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை ஏ-9 பிரதான வீதியின் தெற்குப் பகுதியில் சுமார் 200 மீற்றர் தூரம் வரை முதற்கட்டமாக மீள்குடியமர்வுக்கான காணி பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்படும் எனவும் இதற்கான பணிகள் இடம்பெற்று வருவதாகவும் திட்டப்பணிப்பாளர் டேமியன் தெரிவித்தார்.

இதேவேளை ஏ-9 வீதியின் வடக்குப் பகுதியான இத்தாவில் பகுதியில் ஏற்கனவே 200 மீற்றர் தூரத்திற்கு மிதிவெடிகள் அகற்றப்பட்டு மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)





முல்லைத்தீவு மாவட்டத்தின் பனிக்கன்குளம் அருள்மிகு ஞான வைரவர் ஆலய சங்கா பிஷேக நிகழ்வுகள் நேற்று முன் தினம் இடம்பெற்றன.

இதன்போது ஞானவைரவப் பெருமான் உள்வீதி, வெளி வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

(படங்கள்:பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவசமாக சீமெந்துப் பக்கெற்றுக்கள் வழங்கல்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவச சீமெந்து பக்கெற்றுக்கள் வழங்கும் நிகழ்வு மன்னாரிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவின் பணிப்பில், கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீனின் நெறிப்படுத்தலின் கீழ் குடும்பங்களுக்கு சீமெந்து பக்கெற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டததில் தெரிவு செய்யப்பட்டுள்ள மேற்படி குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் முதல் சீமெந்து பக்கெற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மூர் வீதி மற்றும் தாழ்வுபாடு ஆகிய கிராமங்களில் சீமெந்து பக்கெற்றுக்கள் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது, மன்னார் தேசிய வீட மைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஆர்.சுவர்னராஜா, ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட முகாமையாளர் ரஞ்சித் பெர்னாண்டோ, கட்சியின் மாவட்ட அமைப்பாளர் அப்துல் சமியூ முஹம்மது பஸ்மி, கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் பெர்னாண்டோ கூஞ்ஞ மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களின் பூரண ஒத்துழைப்புடன் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இலவசமாக சீமெந்து பக்கெற்றுக்கள் வழங்கி வைக்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (2)

# கரைதுறைப்பற்று பிர.செயலக் பிரிவில் 15 கிராம சேவையாளர் வெற்றிடங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள 46 கிராம அலுவலர் பிரிவுகளில் இடப்பெயர்வின் பின்னர் 13 ஆயிரத்து 331 குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 806 அங்கத்தவர்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் 15 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நிரந்தர கிராம அலுவலர் நியமிக்கப்படாது இருப்பதால் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது கிராமங்களுக்கான பதில் கிராம அலுவலர்களைத் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேடி அலைந்து திரிவதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பரந்த நிலப்பரப்பளவைக் கொண்டுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நிரந்தரமாக கிராம அலுவலர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

தற்போதுள்ள 31 கிராம அலுவலர்களில் மேலும் ஒரு கிராம அலுவலர் மருத்துவ விடுமுறையில் செல்லவுள்ளார்.

இவருடன் சேர்த்து மொத்தம் 16 கிராம அலுவலர் வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் ஏணைய கிராம அலுவலர்களே பதில் கடமையாற்றி வருகின்றனர்.

மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதார நலத்திட்டங்கள் உட்பட பல்வேறு ஆவணங்களை கிராம சேவையாளர்கள் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் தமக்கான பதில் கிராம அலுவலர்களைத் தேடி அலைந்து திரிவதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இவ்விடயத்தை கவனத்தில் கொண்டு தமக்கான நிரந்தர கிராம அலுவலரை நியமித்து தரவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-3-15)




# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த லொறி பொதுமக்களால் சுற்றிவளைப்பு



## 119 இற்கு அழைத்து சாரதி கைது

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள புளியம் பொக்கணை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு பணியில் ஈடுபட்டிருந்த லொறியை பொதுமக்கள் சுற்றி வளைத்து 119 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு விடுத்தனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்ற தருமபுரம் பொலிஸார் சாரதியை கைது செய்ததுடன் லொறியையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். சட்டவிரோதமான முறையில் குறித்த லொறிக்கு மணலை ஏற்றிப் பறித்துக் கொண்டிருந்த உழவு இயந்திரங்கள் பொது மக்களின் வருகையை அடுத்து தப்பிச் சென்றன. இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் புளியம் பொக்கணை பகுதியில் நடைபெற்றது.

அண்மை நாட்களாக தனியார் வயற் காணிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் பாதிப்படைந்த மக்கள் குறித்த லொறியை சுற்றி வளைத்தனர். கைது செய்யப்பட்ட லொறியின் சாரதி தற்போது கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (2-3-277)

# துர்முகி புதுவருட சிறப்பு மலர்-2016



## சித்திரைப் புத்தாண்டு வாழ்த்து

புதிய வருடமாகிய துர்முகி வருடத்தில் துட்ட குணங்களைக் களைத்து தூய்மை மனத்தை யாவரும் பெற வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளை மனமொழி மெய்களால் பிரார்த்தித்து யாவருக்கும் எல்லா வளமும் வாழ்வும் கிடைக்க வேண்டும் என வாழ்த்தி ஆசி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

சித்திரையில் சிரித்திடுவோம் சிந்தனையை வளர்த்திடுவோம்

அத்தனைபேர் மனங்களிலும் அன்பு வரச் செய்திடுவோம்

சத்தியத்தைக் கடைப்பிடிப்போம் சன்மார்க்க வழி செல்வோம்

சித்திரையைச் சிறப்பாக்க சேர்ந்து நிற்போம் வாருங்கள்

**பிரம்மஶ்ரீ.சோ.கேதீஸ்வர சர்மா**
**ஶ்ரீ பத்தினாச்சி அம்மன்,ஆலய ஸ்தானிகர்**
**பாணன்குள நாச்சியம்மன் ஆலயகுரு,**
**சர்வதேச இந்து குருமார் ஒன்றிய செயலாளர்.**

## தமிழ், சிங்கள புதுவருட வாழ்த்துகள்

மேற்படி எம்பெருமான் செல்வச்சந்நிதி வேல் பெருமான் அடியார்களுக்கும் தமிழ், சிங்களப் புதுவருடத்தினை கொண்டாடும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் பிறக்கும் சித்திரைப்புத்தாண்டு அமைதியையும் சமாதானத்தையும் சிறப்பையும் செல்வச்செழிப்பையும் வழங்கி அருள்பாலிப்பதோடு நிர்க்கதியில் உள்ள மீள்குடியேறாத எம்சக மக்களுக்கு இப்புதிய ஆண்டில் புதிய கல்வீடுகளை சொந்த ஊர்களில் பெற்று சந்தோசமாக குடியேறி நல்வாழ்வை வாழ்வதற்கு செல்வச்சந்நிதி வேல்பெருமான் அருளாசிகளை வழங்கி அருள்பாலிப்பதுடன் நாட்டில் இன,மத பேதங்களை களைந்து மக்கள் மனம்குளிர நல்லாட்சி சிறப்பாக நடைபெற வாழ்த்துக்களையும் அருளாசிகளையும் எந்நிதியும் தரும் செல்வச்சந்நிதி வேல்பெருமான் வழங்கி அருளாட்சி செய்வாராக.

***சந்நிதிவேலவன் பணியில்***
***சிவ.செல்வசிங்கம் ஐயர்,***
***பரிபாலன சபை,***
***செல்வச்சந்நிதி ஆலயம்,***
***தொண்டைமானாறு.***



## இனிய தமிழ்ப் புத்தாண்டே விடுதலை தந்திடு

பிறக்கின்ற இத தமிழ்ப் புத்தாண்டு தமிழ் மக்களது விடுதலையை உறுதிப்படுத்திட வேண்டும்.

கடந்து விட்ட எமது வரலாற்றின் நடந்து வந்த பாதைகளை கனவுகளோடும், களம் பல தந்த என்றுமே மாறாத வடுக்களோடும் என்றும் பயணத்திடும் உத்தமர்களின் தியாகம் வென்றிடவும், நாம் நம்பி வாக்களித்து இன்று வரையில் எதிர்பார்த்திருக்கும் நல்லாட்சி மெய்ப்பட்டிடவும்,ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக சிநதிய உதிரத்திற்கு உறுதியான் அரசியல் தீர்வு கிடைத்திடவும், பேரினவாதத்தின் இரும்பு சுவர்களுக்குள் இறுகப்பூட்டப்பட்டுள்ள விடுதலை விரும்பிகள் விடுபட்டிடவும், முட்கம்பிகளால் இறுக்கபட்டுள்ள எம்மவர் மருதநிலங்கள் விடுபடடிடவும், எல்லையிடப்பட்டு தடுக்கப்பட்டுள்ள எங்கள நெய்தல் நிலங்கள் எம்மவர்களின் கரங்களுக்குள் வந்திடவும், எரிக்கப்பட்ட எங்கள் முல்லைகள் செழித்திடவும், எங்கள் குறிஞ்சி நிலம் மீண்டும் எம் தலைநகராக மிளிர்ந்திடவும், காணாமல் ஆக்கப்பட்ட எங்கள உறவுகளை தேடி நித்தமும் கண்ணீர் சிந்திடும் துயர் மிக்க உள்ளங்கள் ஆறுதல் அடைந்திடவும், எங்கள் காவிய நாயகர்களை தடையின்றி நினைவுகூர்ந்திட வழி பிறந்திடவும் இந நன்னாளில் இறைவனைப் பிரார்த்திப்பதோடு, நாம் தமிழர் என்ற உறவோடு ஓயாது எம் பாதங்கள் இலடசியம் நோக்கி நகர இந் நாளில் ஒன்றிணைந்து சபதம் எடுத்திடுவோம்.

என்றும் தமிழ் அன்னையின் புதல்வியாய்,

**திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன்,**
**முன்னாள் தவிசாளர்,**
**வலி.மேற்கு பிரதேச சபை.**

## வந்தருள்வாய் புத்தாண்டே

காலைக் கதிரவன் கண்விழிக்க
சோலைக் குயில்கள் பூபாளமிசைக்க
சேலைகட்டிய மாதர் முற்றத்தில்
கோலமிட்டு அழகு பார்த்து
மாலைகட்டித் தோரணம் போட்டு
வேலைகள் முடித்துப்பசும்
பாலை எடுத்துப்பொங்கல் செய்து
உறவுகளோடு உண்டு மகிழ்வர்
சிந்தை இனிக்கும் சித்திரைப் புத்தாண்டே
சொந்தங்களோடு சேர்ந்து நின்று
வந்தாரை வரவேற்று உபசரித்து
சந்தோசமாக வாழ்வதற்குச்
சொந்த இடங்களில் குடியேற முடியாது
அந்தரித்தலையும்
நற்தமிழர் படுந்துயர்துடைக்க
வந்தருள்வாய் சித்திரைத்தாயே.

**த.அப்புத்துரை**
**மட்டுவில் தெற்கு.**

## புத்தாண்டே புதுவழி கொண்டுவா!

வண்டமிழர் வாழ்வு வளம் பெறவும்
வளர் பயிர்கள் செழித்தே விளைந்திடவும்
எண்டிசையும் வாழ்கின்ற எம்தமிழர் வாழ்வினிலே
ஏற்றம் மிகுந்தே மாற்றம் நிகழ்ந்திடவும்
தொண்டர்தம் பணிகள் குறைவின்றித் தொடர்ந்திடவும்
பண்பட்ட சமுதாய விழுமியங்கள் நிலைத்திடவும்
மண்ணமைதி பெற்றே நல்லுறவுகள் மலர்ந்திடவும்
பிறந்திடும் புத்தாண்டே புதுவழி கொண்டுவா!

***அபீர்ராஜன்***
***ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்***

## துர்முகி ஆண்டே எம்துயர் துடைக்க வருக!

சிந்தனையில்எந்நாளும்சிறப்பானநல்லெண்ணங்களுடன்
சீர்திருத்தஞ் செய்ய துர்முகி ஆண்டே வருக!
உந்தனை வரவேற்றிட நாம் உவகையே கொள்கின்றோம்
துர்முகி ஆண்டே எம்துயர் துடைக்க வருக!
கந்தனைக் கரங்குவித்தே காலமெல்லாம் களித்திருக்க
துர்முகி ஆண்டே எம்துயர் துடைத்திட வருக!
வந்தனை செய்தே உனை வாழ்த்தி வரவேற்கின்றோம்
துர்முகி ஆண்டே நம் துயர் துடைக்க வருகவே!

**சிவநெறிக்கலாநிதி**
**இராசையா ஶ்ரீதரன்.**

## துர்முகிப் புத்தாண்டே தமிழர் தம் துயரங்கள் போக்கிட வருக!

புத்தாண்டுகள் பல பல கண்டோம்.
ஜய வருடமது வந்து சென்றது ஜயம் ஏதும் எமக்கில்லை
மன்மதப் புத்தாண்டும் மலர்ந்து வந்தது
பலனில்லை எம்மவர்க்கு
மலருகின்ற துர்முகிப் புத்தாண்டே
மங்களங்கள் தருவாயா?
புதிய நம்பிக்கையுடன் உம்மை வரவேற்கிறோம்
புதிய விடிவொன்றை எம்மக்களுக்கு தந்துவிடு
மலர்ந்து வா, மக்கள் மனங்களில் நல்
மாற்றத்தைக் கொண்டுவா?
புத்தாண்டு தமிழர்தம் வாழ்வோடு ஒன்றிய
பண்டைய கலாசாரப் பண்பாட்டுக் கொண்டாட்டம்
மருத்துநீர் தலையில் தேய்த்து,தோய்ந்து
புத்தாடை அணிந்து குடும்ப உறவுகளுடன்
ஆலயம் செல்லுதலும்
புத்தாண்டுதனில் புதுப்புது வகைப்
பலகாரங்கள் உண்டு மகிழ்தலும்
புத்தாண்டில் தந்தை,தாய்,குரு பெரியோரை
மதித்து வணங்குதலும்
புத்தாண்டில்கைவிஷேடம்பெறும்களிப்பும்ஒருபுறம்
புத்தாண்டில் மக்கள் எல்லோரும் வாழ்வில்
நிம்மதியாக–வாழ்ந்திட
மனித நேயம் காப்போம்
பொல்லாத காலம் போனதென,நல்லகாலம்
பிறந்ததென வாழ்வோம்.
துர்முகிப் புத்தாண்டே தமிழர்தம் –வாழ்வில்
துயரங்கள் போக்கிட வருக.

**நயினை விசு–இராசநாயகம்.**

## தீர்வுகள் தந்திடுவாள்!

தர்மம் தழைத்திடத் தக்கவை தந்திடச்
சர்வமும் நலமாய் ஓங்கிடத்–துர்முகி
பிறந்தனள்! தீர்வுகள் தந்தே வாழ்வது
சிறந்திடச் செய்திடுவாள் அவளே!

**நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்**



## அனைவரது வாழ்விலும், நலமும் வளமும், பெருகட்டும்

மன்மத வருடம் விடைபெற்று இன்று புதிய துர்முகி வருடம் பிறக்கின்றது. மன்மத வருடத்தில் நாம் எதிர்பார்த்த விடயங்கள் எதுவும் நிறைவேறாமல் கானல் நீராகப் போய்விட்டது.

இந்த ஆண்டு எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.பொறாமையைக் கைவிடவேண்டும். தேங்காயைக் கூட பொறுமையாக உடைத்தால் தான் நம் கணக்குள்ளேயே இருக்கும். சிதறுகாய் அடிப்பது போல் உடைத்தால் காய் சிதறுவது போல்,பொறுமையாக யோசித்து செய்யாத காரியத்தின் பயன்களும் சிதறுகாய் போல சிதறித்தான் போகும்.

தெய்வ சிந்தனைகளைத் தவிர்த்து விட்டு, சகல உயிர்களின் மேல் அன்பு செலுத்தி,தன்னால் இயன்ற தான, தர்மங்களை செய்து வருங்கால வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்ள வேண்டும்.அத்தகைய வளமான வாழ்வு அனைவருக்கும் அமைய இத் தமிழ்ப்புத்தாண்டு நாளில் அனைவரையும் ஆசிர்வதிக்கின்றோம்.

" லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
" இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"
" ஶ்ரீசுபஸ்வரம்"

***சிவஶ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் JP,***
***இந்துமதகுரு பீடாதிபதி,பிரதமகுரு***
***வல்வை ஶ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,***
***வல்வெட்டித்துறை***

## பண்பாடு சிறக்கட்டும்

துர்முகி வருடமும் பிறந்தது. வன்செயல் இன்றி வாழ்வோம். போதைகள் அழிந்து நல்ல பாதைகள் சமைப்போம். பாலியலில் வீழ்ந்து பாழ்பட்டுப்போகும் பாவையரை பாதுகாத்து பண்பாடு பேணுவோம். மதுவிலே மயங்கி கொடுமை செய்யும் மாந்தரை நல்வழிப்படுத்துவோம். புதுவருடம் பிறந்தது என்றே புதுமைகள் செய்வோம். வறுமையை நீக்கி வளம் பெறச் செய்வோம். அறத்தை காத்து ஆருயிர் ஓம்புவோம். ஆன்மீக வழி சென்று அரன் அருள்பெறுவோம்.

சித்தர்கள் வழியை சிந்தை கொண்டே சிறந்த வாழ்வு சமைப்போம். எத்தர்களை எடுத்து எறிந்து எழுச்சியுடன் வாழ்வோம். ஏழைகளுக்கு உதவி உள்ளம் மகிழ்வோம். என்றும் உண்மையுடன் உழைப்போம். எல்லோரும் வாழவே எண்ணிக்கருமம செய்வோம். அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள் நல்லாசிகள் உரித்தாகட்டும்

**சா.சோமதேவசர்மா**
**அரசசேகரிப் பிள்ளையார் கோவில்**
**நீர்வேலி.**



## தமிழர்க்கு தீர்வு கிடைக்கும் ஆண்டாக பிறக்கின்ற புத்தாண்டு மலரட்டும்!

பிறக்கின்ற துர்முகி வருட தமிழர்கள் இந்த மண்ணில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்கின்ற ஆண்டாக - தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வையும், நீடித்த சமாதானத்தையும் - வழங்குகின்ற ஆண்டாக அமையவேண்டும்.

நாட்டில் ஏற்பட்ட பாரிய யுத்தத்தால் எமது இனம் பல்வேறு துன்ப, துயரங்களை அனுபவித்துள்ளது.

கடந்த 3 தசாப்தங்களாக நாம் இந்த மண்ணில் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற நிலைமை மாறி, சம அந்தஸ்துடன் எமது இனம் வாழவேண்டும். பூரண சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகவே பல இழப்புக்களையும், தியாக ங்களையும் விலையாகக் கொடுத்துள்ளோம்.

பிறக்கின்ற இந்தப் புத்தாண்டு எமக்கு ஓர் நிரந்தரத் தீர்வை - நிலையான அமைதியை - வழங்குகின்ற ஆண்டாக அமையவேண்டும். எமது தலைவிதியை - எமது மக்களின் அபிலாசைகளை - எடுத்துரைக்கின்ற தீர்வுத் திட்டம் எமது தலைமைகளால் சமர்ப்பிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்தத் திட்டத்தை பெரும்பான்மைச் சமூகம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இடம்பெயர்ந்து 2 தசாப்தங்களாக அகதி என்ற பெயரில் அநாதரவாக ஜீவனோபாயமின்றி புகலிடமின்றி அலையும் எமது உடன் சொந்தங்களின் காணிகளில் அந்நிய சக்திகள் தொழில்களை மேற்கொண்டு வருமானமீட்டுகின்றனர். அவர்களின் காணிகள் நிரந்தரமாக விடுவிக்கப்பட வேண்டும்.

**தி.பிரகாஷ்.**
**முன்னாள் தவிசாளர்**
**வலி.தெற்கு பிரதேசசபை**

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## கொவ்வை

**Botanical Name-** Coccinea grandis
**Family-** Cucurbitaceae
**Sinh-** Kowakka



பெருஞ்செடியான ஏறுகொடித் தாவரமாகும். மரம், வேலி மேல் படர்ந்திருக்கும். தரையிலும் சிறிது தூரம் படரும். சில அடிக்கொடியின் குறுக்களவு சுமார் 5–10 செ.மீ. வரை இருக்கும். இக் கொடியின் மேற்புறம் சிறிது வெண்மையாகவும் சொரசொரப்பாகவும் இருக்கும். மேல்நோக்கிச் செல்லும் அதிகமான கிளைக்கொடிகள் யாவும் நல்ல பசுமையாக இருக்கும். சிறிது தடிப்பும் மேற்புறத்தில் வளவளப்பும் நல்ல கரும்பச்சை நிறமுமுள்ள இலைகள் பெரும்பாலும் விருத்த வடிவும் மிக மென்மையாயும் இருக்கும். வெண்மை நிறப் பூக்கள் பெரிதாக இருக்கும். கரும் பச்சைக்காய் 2 செ.மீ. குறுக்களவும் 6.செ.மீ. நீளமும் உள்ளதாக உருண்டு திரண்டிருக்கும். சிவப்பு நிறப் பழங்கள். பழத்தோல் மிக மென்மையானது. பழச்சதை இனிப்புச் சுவையுடையது. விதைகள் அதிகமுண்டு, பல்லாண்டு காலம் உயிர்வாழும்.

100 கிராம் கொவ்வைக் காயிலுள்ள சத்துக்கள்

புரதம்–1.2 கிராம், கொழுப்பு–0.1கிராம், நார்ப்பொருள்–1.6 கிராம், கல்சியம்–40 மி.கி,பொஸ்பரஸ்–30 மி.கி, ரைபோபிளேவின்–0.08 மி.கி,நியாசின்–0.7 மி.கி, உயிர்ச்சத்து சி–15 மி.கி, போலிக்கமிலம்–59 மை.கி, கரோட்டீன்–156 மை.கி.

இலை, காய்களை சமைத்துண்ணலாம். 50 கிராம் இலையோடு 75 கிராம் முளைக்கீரை அல்லது அறக்கீரை சேர்த்து சமைத்துண்ணலாம். இதனால் கண் குளிர்ச்சியடையும், உடலுக்கு குளிர்ச்சி ஏற்படும், இரத்த விருத்தி உண்டாகும், தோல் நோய்களை வரவிடாமல் தடுக்கும், தோலை மிருதுவாக பராமரிக்கும்.

கொவ்வை இலைகளை வெந்நீரிலிட்டு 15 நிமிடம் ஊறவைத்து 30-60 மில்லி வடித்து அருந்தலாம். அல்லது கொவ்வை இலைகளை நிழலில் உலர்த்தி பொடித்து 1-2 கிராம் அளவு வெந்நீரில் சாப்பிட கண் குளிர்ச்சியடைந்து உடல் வெப்பத்தையும் தணித்து நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச் செய்யும்.

இதன் இளங்காய்களை வாயிலிட்டு மென்று சாப்பிட்டுவர நாக்குப் புண்கள் நீங்கும். வாய்ப்புண், சுவையின்மையும் தீரும். மேற்கூறிய நிலைமைகட்கு கொவ்வை வேர்க்கிழங்குகளை சுத்தம் செய்து குறுக்காக சிறிது சிறிதாக துண்டாக்கி மிளகுத்தூளில் தொட்டுச் சாப்பிடலாம்.

இதன் வேர்க்கிழங்குகளை உலர்த்தி பொடித்து 30 கிராம் அளவு வெந்நீருடன் எடுக்க மலத்தை இளக்கும்.

இதன் இலைச்சாற்றுடன் அதேயளவு நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி நீர் சுண்டும் பதத்தில் வடித்து சொறி, சிரங்குகளுக்கு பூசலாம்.

கொவ்வை வேர்க்கிழங்கின் சாறு–15–30 மில்லி அளவு கொடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

கொவ்வை இலைகளை வேப்பெண்ணெயில் வதக்கி வீக்கத்தின் மேல் வைத்துக் கட்டினால் வீக்கம் கரையும்.

கொவ்வை இலைகளை இடித்துச் சாறு எடுத்து 2 தேக்கரண்டியளவு 100 மில்லி தயிரில் கலந்து குடிக்க சீதபேதி கட்டுப்படும்.

கொவ்வைக்காய்ப் பொடி

கொவ்வைக்காய்– 1/4 கிலோ, மஞ்சள்பொடி–3 தேக்கரண்டி, உப்பு–தேவையானளவு, புளித்த மோர்–காய்கள் ஊறும் அளவு, மிளகுத்தூள்–15 கிராம், பூண்டு–2 அல்லது 3, உளுத்தம் பருப்பு– 50 கிராம், எலுமிச்சம்பழம் –4

ஒரு சாடியில் கொவ்வைக் காய்களை சிறு துண்டுகளாக்கி அரிந்து போடவும். புளித்த மோரை ஊற்றவும். உப்புத்தூளும் மஞ்சள் தூளும் போட்டு 2 நாட்கள் ஊறவிடவும். எலுமிச்சம்பழத்தைப் பிழிந்து ஊற்றவும். 2 இரவு ஊறவிட்டு மறுநாள் காயப்போடவும். மறுபடி மறுபடி மோரில் ஊறவிட்டு காயவைத்து எடுக்கவும். காயவைத்த காய்களுடன் மிளகு, சீரகம் (பொழி) சேர்த்து வெயிலில் 2 நாட்கள் வைத்து நன்றாக உலர்ந்ததும் மிக்சியில் பொடித்து வைத்துக் கொள்ளவும். ஒரு தேக்கரண்டியளவு பொடியை சாதத்தில் கலந்துண்ண இரத்தவிருத்தி, உடற்பலம் உண்டாகும். உடல் உஷ்ணத்தை தணித்து சீரணத்தை சீராக்கும். உடலுக்கு குளிர்ச்சியையும் கொடுக்கும் நீரிழிவு நோயாளர்களும் பயன்படுத்தலாம்.

கொவ்வைக்காய்களை கறி, பொரியல் செய்தும் பயன்படுத்தலாம். இதனால் பித்த தோஷங்கள் நீங்கும். இதன் காய்கள் கைப்பு சுவையுடையவை. தினம் காலை நேரத்தில் பொரியலாகவோ கூட்டாகவோ காயவைத்து பொரித்த வற்றலாகவோ கூட்டாகவோ காய வைத்து பொரித்த வற்றலாகவோ சாப்பிட்டுவர இரத்தத்தில் கொழுப்பை அதிகரிக்காமல் கட்டுப்படுத்தும். சிறுநீர் எரிச்சல் போன்றவற்றையும் கட்டுப்படுத்தும்.

கொவ்வைக்காய் வற்றல்

கொவ்வைக்காய்களை பறித்து அலசி மெலிதாக வட்டமாக அரியவும். ஒருநாள் வெயிலில் காயப்போடவும். அன்றிரவு மோரில் உப்பு, மஞ்சள்பொடி, மிளகுத்தூள் போட்டு நன்கு கலக்கி காய்களை ஊறப் போடவும். 2 நாட்கள் ஊறியதும் எடுத்து மீண்டும் மோர் விட்டு கிளறிவிடவும்.

இதுபோல் மோர் சுண்டும்வரை உலர்த்தி ஈரமின்றிக் காய்ந்ததும் எடுத்துப் பொதியிட்டு வைத்துக் கொள்ளவும். இவ்வற்றலை வற்றல் குழம்பு, சாதம், மோர்ச்சோறு போன்ற எல்லாவற்றுடனும் பயன்படுத்தலாம். நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்த உணவு மூலிகையாகும்.

ஆனால் நல்லெண்ணெய் பயன்படுத்தவும். கைப்பானது உணவுகளும் உடலில் கலங்களில் ஏற்படும் தேய்மானங்களையும் புதுப்பிக்கும் ஆற்றலுள்ளது.

கொவ்வைக் காய்களை கத்தரிப்பிஞ்சுக் காய்களுடன் சேர்த்து கப்பித் தேங்காய்ப் பாலில் (3ஆம் பால்) வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு சிறிதளவு (வறுத்து சேர்க்கவும்) சேர்த்து சமைத்துண்ண இரத்தத்திலுள்ள அதிகரித்த கொழுப்பைக் குறைக்கும் ஆற்றலுள்ளது.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# உயிர்காக்கும் உதவியாளர்களைப் பாதுகாக்க சட்டரீதியான வழிகாட்டல்கள் மிகவும் அவசியம்

## பொதுமக்கள் வீரதீர அறக்கட்டளை நிறுவனம்

## உயர் நீதிமன்றில் அடிப்படை மனிதவுரிமை மனுத் தாக்கல்

விபத்துக்களின் போது பாதிக்கப்படும் நபர்களை மீட்க முன்வருகின்ற உதவியாளர்களை பாதுகாப்பதற்கு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றினால் அடிப்படை மனிதவுரிமைகள் மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்துக்களில சிக்குண்டவர்களை பாதுகாக்கும் நபர்களை பாதுகாப்பதற்கு முறைப்படுத்தப்பட்ட விதிகள் அவசிய தேவையாகவுள்ளது.

2009ஆம் ஆண்டு 4ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட பொதுமக்கள் வீரதீர அறக்கட்டளை நிறுவனம் இந்தியாவிலுள்ளதைப் போன்று விபத்தில் சிக்குண்டவர்களை மீட்பவர்களையும் அவர்களை கவனிப்பவர்களையும் பாதுகாப்பதற்கான வழிகாட்டல்களின் தேவைப்பாடுகளை சுட்டிக்காட்டியுள்ளதுடன் இந்த வழிகாட்டல்கள் பொலிஸ், வைத்தியசாலை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. பொதுமக்கள் வீரதீர அறக்கட்டளை நிறுவனம் 1993ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வருகிறது. அத்துடன் உயிராபத்துமிக்க நேரங்களில் ஏனையவர்களின உயிரைப் பாதுகாப்பவர்களை அடையாளம் கண்டு விருது வழங்கிவருகிறது.

அறக்கட்டளை நிறுவனத்தின் சார்பாக நிறுவனத்தின் ஸ்தாபகரும் தற்போதைய தலைவருமான கசுன்.பி.சந்திரரத்ன நிறுவனத்தின் சார்பாக அடிப்படை மனிதவுரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

விபத்துக்களில் அகப்படுபவர்களைக் காப்பாற்றுவதற்கு முன்வரும் உதவியாளர்களை பல்வேறுபட்ட அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

விபத்துக்கள் இடம்பெற்ற பின்னர் அப்பகுதியூடாகச் செல்பவர்கள் அவர்களுக்கு உதவுவதால் ஏற்படும் பிரச்சினைகளால் உதவுவதற்கு முன்வராது செல்கின்றனர்.

குறிப்பாக பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டியிருத்தல், நீதிமன்றிற்கு பல நாட்கள் செல்ல வேண்டியிருத்தல், நீதிமன்றத்தில் நியாயப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியிருத்தல் போன்ற பல காரணங்களினால் பலர் உதவுவதற்கு முன்வருவதில்லை. இதனால் சில வேளைகளில் உயிரிழப்புக்கள் கூட நிகழ்கின்றன.

இவ்வாறு ஆகக்குறைந்தது 319 இற்கும் அதிகமான உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருப்பது ஆய்வுகளில் தெரியவந்திருக்கிறது. இவ்வாறான உயிரிழப்புக்களைத் தவிர்ப்பதற்கு சட்டரீதியான விதிமுறைகள் எதிர்காலத்தில் மிகவும் அவசியமாகவுள்ளன.

மருத்துவ சிகிச்சை வழங்க மறுத்தல் அல்லது உரிய நேரத்தில் சிகிச்சை வழங்காமை போன்ற காரணங்களினாலும் விபத்துக்களில் சிக்குண்டவர்கள் இறந்திருக்கிறார்கள்.

வீதி விபத்துக்களின்போது உதவ முன்வருபவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்து இந்தியாவின் உச்சநீதிமன்றம் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டலில் போக்குவரத்து அமைச்சு, பெருந்தெருக்கள் அமைச்சு என்பன விபத்துக்களின்போது உதவ முன்வருபவர்களை அல்லது உதவியாளர்களை பாதுகாப்பதற்கு 15 வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

இதன்பிரகாரம் உதவியாளர்கள் சிவில் அல்லது கிரிமினல் விவகாரங்களில் பொறுப்பாளிகளாக இருத்தல் கூடாது. இவ்வாறானவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் ஏனையவர்களையும் ஊக்குவிக்க தூண்டப்படுகிறார்கள்.

விபத்துக்களில் காயமடைந்தவர்கள் வீதியில் காணப்படுகின்ற போது அது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கும் பொருட்டு அல்லது அவசர சேவைகளுக்கு தகவல் கொடுப்பதற்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துபவரின் பெயர் விபரங்கள் மற்றும் தனிப்பட்ட விபரங்களை வழங்குமாறு நிர்ப்பந்திக்கக்கூடாது என அதில் வலியுறுத்தப்படுகிறது.

இத்தகைய விதிமுறைகள் அரசியல் யாப்பின் 12 (1) இல் நிர்வாகச் சட்டங்கள் எனும் தலைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதனை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் உரிய வகையிலான திட்டங்களை முன்னெடுக்கத் தவறினால் அது யாப்பு விதிமுறைகளை மீறுவதாக அமையும் என்ற தனது கருத்தினையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி அடிப்படை மனிதவுரிமை மனுவில் பொலிஸ்மா அதிபர், சுகாதார அமைச்சின் செயலாளர், சட்டமாதிபர் திணைக்களம், உயர் கல்வி மற்றும் நீதி அமைச்சுக்களின் செயலாளர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயர்நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு இது தொடர்பான அறிவித்தலை வழங்க வேண்டும் என மனுதாரர் கோரியுள்ளார். அத்துடன் இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க அவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

இதேபோன்றே இந்தியாவிலும் உச்ச நீதிமன்றம் சம்பந்தப்பட்டவர்களை இதற்கான வழிகாட்டல் வழங்குமாறு பணித்திருந்தது. இது தொடர்பான 11 சட்டங்கள் உருவாக்கப்படும் வரை பிரதிவாதிகள் வழிகாட்டல்களை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனுதாரர் கோரியுள்ளார். (3)

# பொலிஸ் துப்பாக்கிச் சூட்டால் விபரீதம்

# மின்கம்பி அறுந்து விழுந்ததில் 11 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!

(சென்னை)

**இந்தியாவின் அஸாமில் போராட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மின்கம்பி அறுந்து விழுந்ததில் அங்கிருந்த 11 பேர் மின்சாரம் தாக்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.**

அஸாம் மாநிலம், தீன்சுகியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இரட்டைக் கொலைச் சம்பவங்கள் நடந்தன. இதற்கு காரணமான 5 இளைஞர்களை பொலிஸார் கடந்த ஞாயிற்றுக் கிழமை கைது செய்தனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட நபர்களை தங்களிடம் ஒப்படைக்கக் கோரி பங்கீரி பொலிஸ் நிலையத்துக்கு முன்பு அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமானோர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களில் சிலர் பொலிஸாரை நோக்கி கற்களை வீசித் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கும் வகையில், பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.



அப்போது எதிர்பாராதவிதமாக அப்பகுதியில் மேலே உள்ள உயர் அழுத்த மின்கம்பி மீது துப்பாக்கித் தோட்டா பட்டது.

இதில், அந்த மின்கம்பி அறுந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது விழுந்தது.

இந்த விபத்தில் மின்சாரம் தாக்கி 9 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். ஏனைய இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டதால் அங்கு துணை இராணுவப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதி மக்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**மோடி இரங்கல்**

இதனிடையே, இச்சம்பவத்துக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது டுவிட்டர் பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது, மின்கம்பி அறுந்து விழுந்ததில் 11 பேர் உயிரிழந்த சம்பவம் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## சவுதி மன்னர் சல்மானுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம்



(றியால்)

சவுதி மன்னர் சல்மான், அரபு மற்றும் சர்வதேச மட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய மறக்க முடியாத உலகளாவிய முக்கிய புள்ளி என்ற வகையிலும், அரபு, இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுககு பாரிய சேவைகள் ஆற்றியவர் என்ற வகையிலும் கெய்ரோ பல்கலைக் கழகம் அவருக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கியுள்ளது.

கல்நிதி பட்டத்தை பெற்றுக் கொண்ட பிறகு உரையாற்றிய மன்னர் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டதுடன், குறித்த பட்டம் தனக்கும், தனது நாட்டுக்கும், முழு சவுதி மக்களுக்கும் கிடைத்த கௌரவம் என குறிப்பிட்டார்.

அதேவேளை குறித்த பல்கலைக் கழகம் முழு உலகிலும் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் பலரை உருவாக்கி உள்ளதாகவும் அவர் பாராட்டினார். (இ-5)

## கேரள கோயில் தீ விபத்து நிர்வாகிகள் 5 பேர் சரண்

கேரள கோயில் திரு விழாவின்போது ஏற்பட்ட பட்டாசுத் தீ விபத்து தொடர்பாக கோயில் நிர்வாகிகள் 5 பேர் பொலிஸாரிடம் சரணடைந்தனர்.

கேரள மாநிலம், கொல்லம் அருகே உள்ள புற்றிங்கல் தேவி கோயில் திருவிழாவையொட்டி நடத்தப்பட்ட வாணவேடிக்கை நிகழ்ச்சியின்போது ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 110 பேராக உயர்ந்தது. பலர் காயமடைந்தனர்.

இவ்விபத்து தொடர்பாக கோயில நிர்வாகிகள் 6 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட நிலையில், கோயில் தலைவர், செயலாளர் உட்பட 5 பேர் கேரள குற்றப்பிரிவு பொலிஸார் முன் சரண் அடைந்தனர். (இ)

## ஏமனில் போர் நிறுத்தம் அமுல்

ஏமனில் அரசுப் படையினருக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்தது.

ஐ.நா. மேற்பார்வையில் இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டதைத் தொடர்ந்து, இந்தப் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது.

இதுகுறித்து, ஜனாதிபதி மன்சூர் ஹாதிக்கு ஆதரவான படைகளுக் கான தலைமைத் தளபதி முகமது அலி அல்-மக்தாஷி கூறியதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை நளளிரவு 12 மணி முதல் (இந்திய நேரப்படி நள்ளிரவு 2.30 மணி) போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வருகிறது.

ஹூதி கிளர்ச்சியாளர்கள் இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறாதவரை, நாங்கள் அதனை மதித்து நடப்போம் என்றார் அவர்.

ஷியா பிரிவைச் சேர்ந்த ஹூதி கிளர்ச்சியாளர்கள், ஏமன் தலைநகர் சனா உள்ளிட்ட கணிசமான பகுதிகளை கடந்த 2014-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கைப்பற்றினர்.

அவர்களுக்கு ஷியா பிரிவினரைப்பெரும்பான்மையாகக்கொண்ட ஈரான் ஆதரவு அளித்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஹூதி கிளர்ச்சியாளர்களுடன், முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவுக்கு ஆதரவான ஏமன் இராணுவப் பிரிவினரும், தற்போதைய ஜனாதிபதி மன்சூர் ஹாதிக்கு ஆதரவான படையினருடன் சண்டையிட்டு வருகின்றனர்.

இந்தச் சூழலில், ஏமனின் இரண்டாவது பெரிய நகரான ஏடனை நோக்கி ஹூதி படையினர் முன்னேறியதைத் தொடர்ந்து, ஜனாதிபதி ஹாதி சவுதி அரேபியாவில் தஞ்சமடைந்தார்.

அதையடுத்து, சன்னி பிரிவினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட சவுதி அரேபியா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகக் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் வான்வழித் தாக்குதல் நிகழ்த்தி வருகின்றன.

சவுதி கூட்டுப் படைகளின் உதவியுடன், மன்சூர் ஹாதி ஆதரவுப் படையினர் ஹூதி கிளர்ச்சியாளர்களை எதிர்த்து சண்டையிட்டு வருகின்றனர்.

இந்த உள்நாட்டுப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். 24 இலட்சம். பேர் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறினர்.

இந்தச் சூழலில், ஏமன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஐ.நா. மேற்பார்வையில் இந்த மாதம் 18 ஆம் திகதி பேச்சு வார்த்தை தொடங்கவுள்ளது. அதற்கு முன்னதாக போர் நிறுத்தம் மேற்கொள்ள இரு தரப்பினரும் சம்மதித்தனர்.

மீறல்:- போர் நிறுத்தத்தின் முதல் நாளான திங்கட்கிழமை கிளர்ச்சியாளர்களால் முற்றுகையிடப்பட்டுள்ள தயீஸ் நகரில் அந்த ஒப்பந்தம் மீறப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த நகரில் நிகழ்த்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் 5 பேர் காயமடைந்ததாகவும் அந்தப் பகுதியில் வசிப்போர் தெரிவித்தனர். (இ-5)

## நோர்வே கடற்படைக் கப்பலால் 295 குடியேற்றவாசிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர்




சிசிலி மற்றும் கிரேக்கத்திற்கு இடையில் உள்ள அயோனியன் கடலில் தவித்த 295 குடியேற்ற வாசிகளை, நோர்வேக்கு சொந்தமான கப்பல் ஒன்று காப்பாற்றியுள்ளது.

குறித்த நடவடிக்கை, கடந்த வெள்ளியன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. காப்பாற்றப்பட்ட குடியேற்ற வாசிகளில், பெரும்பாலானவர்கள் சோமாலியா, சூடான் மற்றும் எகிப்தில் இருந்து வந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த குடியேற்றவாசிகளில், 143 பேர் ஆண்கள் எனவும், 63 பேர் பெண்கள் எனவும், 88 பேர் குழந்தைகள் எனவும் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து ஏறக்குறைய 16ஆயிரம் பேர், வடக்கு ஆபிரிக்காவில் இருந்து இத்தாலி நோக்கி இடம்பெயர்ந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. குறித்த எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 6 ஆயிரத்தால் அதிகரித்துள்ளது என இத்தாலியின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (இ-5)

# ஐ.எஸ்ஸுக்கு எதிரான போர் தீவிரப்படுத்தப்படும் ஜி-7 வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் உறுதி




அமைதிப் பூங்காவில் மலரஞ்சலி செலுத்திய ஜி-7 நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள்.

(டெஹ்ரான்)

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு எதிராக, அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் நடத்தி வரும் போரை தீவிரப்படுத்துவதற்கு ஜி-7 நாடுகள் உறுதிபூண்டுள்ளன.

பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்றுள்ள அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் ஜி-7 நாடுகள் என்ற கூட்டமைப்பாக இயங்கி வருகின்றன. ஜி-7 உச்சி மாநாடு வரும் மே மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், ஜி-7 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், ஹிரோஷிமாவில் நேற்று முன்தினம் கூடி ஆலோசனை நடத்தினர். 2 நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டுக்குப் பிறகு, கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில், "உலகின் பாதுகாப்புக்கு உடனடி அச்சுறுத்தலாக தீவிரவாதம் உள்ளது. இதனை எதிர் கொள்ள சர்வதேச ஒத்துழைப்பும் ஒருங்கிணைந்த பதில்செயற்பாடும் தேவைப்படுகிறது.

ஈராக், சிரியாவில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரை தீவிரப்படுத்தவும் வேகப்படுத்தவும் நாங்கள் முழுமையான ஆதரவைத் தெரிவிக்கிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அணு ஆயுதம்**

2 ஆவது உலகப் போரின் போது அமெரிக்காவின் அணுகுண்டு தாக்குதலால் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஹிரோஷிமா நகரில் அமைந்துள்ள, அணு குண்டு நினைவிடமான அமைதிப் பூங்காவில் அமெரிக்க வெளியுறவு அமைசசர் ஜோன் கெரி உட்பட ஜி-7 வெளியுறவு அமைச்சர்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அதன்பிறகு வெளியிட்ட கூட்டறிக்கையில் அணுகுண்டு இல்லாத உலகை உருவாக்குவோம் என அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

சர்வதேச அளவில் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தும் வகையில், அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க நாங்கள் மீண்டும் உறுதியேற்கிறோம். சிரியா, உக்ரைன் போன்ற நாடுகளில் நிலவும் சூழ்நிலை இந்த விவகாரத்தை மேலும் சிக்கலாக்குகிறது.

குறிப்பாக வட கொரியாவின தொடர் அத்துமீறல்கள் அணு ஆயுதம் இல்லாத உலகை எட்டும் இலக்குக்கு மிகவும் சவாலாக உள்ளன என கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கெரியின் பயணம**

ஹிரோஷிமாவின் பேரழிவுக்கு அமெரிக்காதான் காரணம். ஆகவே, கெரி அமைதிப் பூங்காவுக்கு சென்றது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. அமைதிப் பூங்காவில் கெரி அஞ்சலி செலுத்தினார்.

"இந்த நினைவிடத்தின் சக்தி குறித்து ஒவ்வொருவரும் பார்க்கவும், உணரவும் வேண்டும் என அந்த அருங்காட்சியகத்தின் வரவேற்பு புத்தகத்தில் எழுதியுள்ளார். மேலும் போர் என்பது கடைசிக்கட்ட தேர்வாக இருக்க வேண்டும், முதல் தெரிவாக இருக்கக்கூடாது" எனவும் அவர் எழுதினார்.

அமெரிக்காவின் எந்தவொரு ஜனாதிபதியும் ஆட்சியிலிருக்கும்போது இந்த பூங்காவுக்கு வந்ததில்லை. 65 ஆண்டுகளுக்குப் பிறகே அமெரிக்க தூதர் முதல் முறையாக இங்கு நடைபெற்ற நினைவு நிகழ்ச்சியில் பங்கேற்றார். (இ-5)




## 'நினைத்ததை விடப் பயங்கரமானது' ஷிகா வைரஸ் குறித்து அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஷிகா வைரஸ் 'நினைத்ததை விட பயங்கரமானது' என்றும் அமெரிக்காவில் இந்த வைரசின் பாதிப்பானது கணிக்கப்பட்டதை விட அதிகமாக இருக்கலாம் என்றும் அந்நாட்டு பொது சுகாதார மைய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையில் அமெரிக்க நோய்கட்டுப்பாடு மறறும்தடுப்பு மையத்தின் டாக்டர் அனே சுஷாட் பேசுகையில், "பிறக்கும் குழந்தைகள் குறைபாடுடன் பிறப்பதற்கு வைரசுக்கு தொடர்புள்ளது.

முன்பு கணிக்கப்பட்டதை விட ஷிகா வைரஸ் பரப்பும் கொசுக்கள் அமெரிக்காவில் அதிக மாகாணங்களில் பரவியிருக்கலாம். அமெரிக்காவில் குறைபாடுடன் குழந்தைகள் பிறந்து உள்ளதற்கு ஷிகா வைரஸ் தொடர்பு உள்ளது.

இதுவரையில் வைரஸ் தொடர்பாக நமக்கு தெரிய வந்துள்ள தகவலின்படி நினைத்ததை விட பயங்கரமானது என்பதை காட்டுகிறது," என்று கூறியுள்ளார்.

இவ்வருட தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, வைரசை எதிர்கொள்ள உடனடி நிதியாக 1.8 பில்லியல் டொலர் நிதியை ஒதுக்க அமெரிக்க காங்கிரசிடம் கேட்டுக் கொண்டார். 'ஷிகா' வைரஸ் தடுப்பு விவகாரத்தில் போதுமான பணிகள் செயயப்பட்டுள்ளது. கொசுகளுக்கு எதிரான இந்த போராட்டத்தில் தடுப்பு மருந்தை கண்டுபிடிப்பதற்கும் மற்றும் சிகிச்சை அளிப்பதற்கும் அமெரிக்காவிற்கு அதிகமான பணத்தேவை (1.9 பில்லியன் டொலர் மதிப்பு) உள்ளது. பீதி அடைய வேண்டிய தேவையில்லை, எப்படி தாயின் வயிற்றில் இருககும் குழந்தையின் மூளையை "ஷிகா" வைரஸ் அழிக்கிறது என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு விட்டது.

'ஷிகா' வைரஸ் பெரியவர்களுக்கும் அரிதான நரம்பியல் பிரச்சினையும் ஏற்படுத்துகிறது என்று டாக்டர் அந்தோணி பவுசி கூறியுள்ளார். (இ-5)

## 100 கோடி பவுண் செலவில் பிறந்த நாள் கொண்டாட்டம்



(லண்டன்)

பிரித்தானிய மகாராணியின் 90 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டங்களுக்காக அந்நாட்டு மக்கள் செலவிடும் தொகை சுமார் 100 கோடி பவுண்களை (இலங்கை ரூபாவில் 20,008 கோடி) தாண்டும் என ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

மகாராணியின் பிறந்த நாள் கொண்டாட்டம் தொடர்பாக, நாடு முழுவதிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மகாராணியின் பிறந்த நாள் விழாவுக்காக சராசரியாக ஒவ்வொரு பிரித்தானிய பிரஜையும் 42.98 பவுண்செலவிடத் திட்டமிட்டுள்ளனர். அதிலும், குறிப்பாக ஆண்கள் பெண்களைக் காட்டிலும் கூடுதலாக 20 பவுண செலவிட உத்தேசித்துள்ளனர்.

இதன்படி பிறந்த நாள் விழா கொண்டாட்டங்களுக்காக சுமார் 100 கோடி பவுண் செலவிட உள்ளதாக ஆய்வில் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## சோமாலியாவில் தீவிரவாத குழுவுடன் தொடர்புபட்ட ஊடகவியலாளருக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

சோமாலியாவில் அல் ஷபாப் தீவிரவாதிகளுக்கு சக ஊடகவியலாளர்கள் ஐவரைக் கொல்வதற்கு உதவிய ஊடகவியலாளர் ஒருவருக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை துப்பாக்கியால் சுட்டு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஊடகவியலாளராக விளங்கிய ஹஸன் ஹனாபிக்கு கடந்த மாதம் தலைநகர் மொகாடிஸ"விலுள்ள இராணுவ நீதிமன்றமொன்று மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

அவர் 2007 ஆம் ஆண்டுக்கும் 2011 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அந்த ஊடகவியலாளர்களை படுகொலை செய்வதற்கு தீவிரவாத குழு விற்கு உதவியதாக கூறப்படுகிறது.

அன்டாலஸ் வானொலியில் கடமையாற்றிய பின்னர் அவர், மேற்படி தீவிரவாத குழுவில் இணைந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

2007 ஆம் ஆண்டிலிருந்து சோமாலியாவில் 25 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (இ-5)

## மலேசியாவில் அனல் காற்று காரணமாக அதிகளவான பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

மலேசியாவில் கடுமையான அனல் காற்று காரணமாக அந்த நாட்டின் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மூடப்பட்டன.

இதுகுறித்து அரசு செய்தி நிறுவனமான பெர்னாமா தெரிவிப்பதாவது.

மலேசியாவில் 72 மணி நேரத்துக்கும் மேலாக வெப்பம் 98.6 டிகிரி பாரன் ஹீட்டைத் தாண்டி வீசி வருகிறது.

இதையடுத்து, அந்த நாட்டின் பெர்லிஸ் மாகாணத்தில் 250 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை மூடுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

சுமார் ஒரு இலட்சம் மாணவர்களின் உடல் நலனைக் காப்பதற்காக அந்த முடிவு எடுககப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

கடுமையான வெயில் காரணமாக விளைச்சல் குறைந்ததால், மலேசியாவில் காய்கறி விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வெப்ப சலனம் காரணமாக, பல்வேறு நாடுகளில் அதிக வெப்ப நிலை நிலவி வருகிறது. இதனால அந்த நாடுகளில் உணவு உற்பத்தி பாதிக்கப்படுவதோடு, கடுமையான தண்ணீர் பற்றாக்குறையும் நிலவி வருகிறது.

இந்த ஆண்டின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில, உலக வெப்பம் இதுவரை இல்லாத அளவு அதிகரித்ததாகத் தெரிவித்துள்ள வானியல் நிபுணர்கள், அதன காரணமாக உலகின் பல நாடுகளில் கடுமையான பருவநிலை மாற்றம் ஏறபடும் என்று எச்சரித்துள்ளனர். (இ-5)

# 76 ஆவது ஆண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய 76 ஆவது ஆண்டு விழாவின் 2 ஆம் நாள் நிகழ்வுகள் நாளை வியாழக கிழமையும் மாலை 6 மணிக்கு நிலைய முன்றலில் ச.மோகன தாசன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறித ரன் பிரதம விருந்தினராகவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் பா.கஜ தீபன், சனசமூக நிலைய அபி விருத்தி உத்தியோகத்தர் திருமதி நோபேட் யூலியன் ஜெயமாலினி, சுழிபுரம் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி குண வதி சண்முகலிங்கம், யாழ்ப்பா ணம், அராலி முருகமூர்த்தி வித் தியாசாலை அதிபர் என். முரு கானந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் நிலைய பாலர் பாட சாலை நிகழ்வுகள், நிலைய சிறார் களின் கலை நிகழ்வுகள் நிலை யத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் நிகழ்வு கள, திருமதி ஜெ.சௌமியா, திருமதி நி.பிரதீபா ஆகியோரின் மாணவி கள் வழங் கும் நடன நிகழ்வுகள், நிலைய அங்கத்தவர்கள் வழங்கும் க.நாக ரஞ்சினியின் நெறியாள்கை யில் "நூலில் ஆடும் பொம்மைகள்" நாடகமும் கலை நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன.

மேலும் மனித வாழ்க்கையில் திருமணம் "ஒரு திருப்பு முனையா" அல்லது "சலிப்பு முனையா" என னும் தலைப்பில் சிறப்புப் பட்டி மன்றமும் நடைபெறும். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை 12.04.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.72 | 146.52 |
| பவுண்ட் | பிரிட்டன் | 202.43 | 209.67 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 161.83 | 168.30 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 148.54 | 154.75 |
| டொலர் | கனடா | 109.85 | 114.45 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 107.64 | 112.70 |
| டொலர் | சிங்கப்பூர் | 105.73 | 109.78 |
| ரூபா | இந்தியா | 2.1681 | ------- |
| யுவான் | சீனா | 22.2542 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6672 |
| குவைத் | டினார் | 477.9143 |
| ஓமான் | ரியால் | 373.7614 |
| கட்டார் | ரியால் | 39.5161 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3708 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1783 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 40 | 80 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 75 | 90 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 90 | 120 | 100 | 100 |
| தக்காளி | 140 | 100 | 100 | 160 | 40-60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 60 | 40 | 50 |
| கோவா | 60 | 60 | 50 | 80 | 80 | 50 |
| கரட் | 130 | 100 | 100 | 140 | 80-200 | 100 |
| பூசணி | 50 | 30 | 15 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 30 | 30 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 30 | 40 | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 60 | 100 | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 75 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 90 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 40 | 100 | 80 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 70 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 80 | 100 | 100 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 140 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | 70 | 120 | 80 | 60 |
| கறிமிளகாய் | 140 | 100 | 70 | 120 | 200 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 350 | 500 | 400 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 120 | 160 | 120 | 150 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 50 | 60 | 60 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 20 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 320 | 200 | 300 | 400 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 30-40 | 50 | 40 |
| இராசவள்ளி | 140 | 200 | 140 | 120 | 140 | 140 |
| வெங்காயப்பூ | 260 | 100 | – | – | – | – |
| முள்ளங்கி | 80 | 40 | 50 | 80 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 10 | 15 |
| ஈரப்பலா | 80 | – | – | – | – | – |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படை திரும்பியது 154

...இந்திய-இலங்கை ஒப் பந்தத்தின் அடிப்படையில் வடகிழக்கு தமிழ் மாநில த்துக்குத் தேர் தல் நடத் தப்பட்டு முதல் மந்திரியாக வரதராஜ பெருமாள் 1988 ஆம் ஆண்டு டிசெம்பர் 9 ஆம் திகதி பதவி ஏற்றார்.

**வாபஸ்**

இலங்கையின் ஜனா திபதியாகப் பிரேமதாசா 1989 ஜனவரி 2ஆம் திகதி பதவி ஏற்றார்.

1989 ஆம் ஆண்டு ஜுலை 29 ஆம் திகதிக்குள் இந்திய படை வாபஸ் ஆகவேண் டும் என்று பிரேமதாசா கெடு விதித்தார். அதைத் தொடர்ந்து அப்போது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி, பிரேமதாசாவுடன் நடத்திய பேச்சினைத் தொட ர்ந்து 1989 ஜுலை மாதம் 28 ஆம் திகதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

இந்தப் புதிய ஒப்பந்தத் தின் படி அமைதிப்படை படிப்படியாக வாபஸ் பெறு வது என்று முடிவாகியது.

அதன்படி ஜுலை 29 ஆம் திகதி வாபஸ் ஆகி முதலில் 600 வீரர்கள் கப்பல் மூலம் சென்னை சென்றார் கள். அதன்பிறகு படிப் படியாக இராணுவம் வாபஸ் பெறப்பட்டது.

1990 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிக்குள் இந்திய அமைதிப்படை முழுவது மாக வாபஸ் பெறப்படும் என்று மத்தியில் புதிதாகப் பதவிக்கு வந்த வி.பி.சிங் அரசு அறிவித்தது.

**கடைசி பிரிவு**

அதன்படி யாழ்ப்பாண த்தில் இருந்து இந்திய அமைதிப்படையினரின் கடைசி பிரிவு (2000 வீரர்கள்) கப் பல் மூலம் 1990 மார்ச் 21 ஆம் திகதி சென்னை சென்றனர்.

திருகோணமலையில் மட்டுமே 2 ஆயிரம் வீரர்கள் இருந்தனர். அவர்கள் 24.3. 1990 அன்று காலை கப்ப லில் இந்தியாவுக்குப் புறப் பட்டார்கள்.

கெடு விதிக்கப்பட்ட தற்கு 7 நாட்களுக்கு முன் பாகவே இந்திய அமைதி ப்படை இலங்கையில் இரு ந்து முழுவதுமாக வாபஸ் பெறப்பட்டது.

**சென்னையில் வரவேற்பு**

இலங்கையிலிருந்து அமைதி ப்படையினருடன் புறப் பட்ட கப்பல் 25.3.1990 அன்று பிற்பகலில் சென்னை வந்து சேர்ந்தது.

கடைசியாக வந்த இந் திய அமைதிப் படையினரு க்குச் சென்னை துறை முகத்தில் வரவேற்பு அளிக் கப்பட்டது.

இதையொட்டி துறை முகத்தில் மாலை 4 மணிக்கு நடந்த விழாவில் ஆளுநர் அலெக்சாண்டர், மத்திய இராணுவ இலாகா ராஜாங்க அமைச்சர் ராஜா ரமண்ணா ஆகியோர் கலந்து கொண் டனர். இருவரும் வீரர்கள் வந்த கப்பலில் ஏறிச் சென்று அவர்களிடம் கை குலுக்கினார்கள். பிறகு கப்பலில் இருந்து இறங்கி வந்த வீரர்களை வரவேற் றனர்.

விழாவில் மத்திய அமை ச்சர் ராஜா ரமண்ணா பேசிய தாவது,

**சிறப்பான சேவை**

மீண்டும் தாயகம் திரும் பியுள்ள உங்களை எனது சார்பிலும் இந்திய மக்கள் சார்பிலும் இந்திய அரசின் சார்பிலும் வரவேற்கிறேன்.

இதுபோன்ற சந்தர்ப் பங்களில் சரித்திர புகழ் பெற்ற பணிகளைச் செய் வதில் உயிர் நீத்த வீரர்க ளுக்கு முதலில் என் அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்போதும் அவர்களை நன்றியுடன் நினைவு கூருவோம்.

முற்றிலும் புதிய சூழ் நிலையில் உங்களுக்குப் பழக்கப்படாத இடத்துக்கு (இலங்கை) சென்று நாட்டு க்காக உங்கள் கடமைகளை ஆற்றிவிட்டு இப்போது திரும்பி இருக்கிறீர்கள்.

அங்கு நீங்கள் இரா ணுவக் கடமை மட்டு மல்லாமல் பெரிய பணி களைச் சிரமங்களுக்கி டையே செய்து முடித்து விட்டு வந்து இருக்கி றீர்கள்.

உங்கள் சேவையால் பக்கத்து நாடுகளுடன் உறவு வலுப்பெறும் என்று நம்புகிறேன்.

அவர்கள் உதவி கேட் டதன் பேரில் அங்கு சென்று அந்தப் பணியை மிகவும் திருப்தியுடன் செய்து முடித்து கடமை யாற்றி திரும்பிய உங்க ளுக்கு நாடு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மத்திய அமைச்சர் ராஜா ரமண்ணா பேசினார்.

**ஆளுநர் பேச்சு**

விழாவில் ஆளுநர் பி. சி.அலெக்சாண்டர் பேசிய தாவது,

இந்திய அமைதிப்படை இந்தியாவின் கௌரவத் தையும் புகழையும் நிலை நாட்டி வந்திருக்கிறது. 1953 ஆம் ஆண்டு கொரிய யுத்தத்தில் இருந்து 1988 மாலைதீவு இராணுவ நட வடிக்கை வரை இந்திய வீரர்களின் அரிய சேவை பாராட்டும் படியாக இருந் தது.



இந்திய அமைதிப்படையினர், கப்பலில் சென்னைத் துறைமுகத்தில் இறங்கியபோது எடுத்த படம்


(தொடரும்)

# விக்னேஸ்வரனுக்கு இடமளித்தால் மீண்டும் ஆயுதப் புரட்சி ஏற்படும்

## பதறுகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

**வடக்கு மாகாண சபையும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் இலங்கையில் பலமான பிரிவினை வாதக் கொள்கையை மேற்கொண்டு வருகின்றனர். இனிமேலும் இடம் கொடுத்தால் நாட்டில் மீண்டும் ஆயுதப் புரட்சி ஏற்படும் என தேசிய சுந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி. எச்சரித்துள்ளார்.**



புலிகளுடனும் புலம்பெயர் புலி அமைப்புக்களுடனும் இணைந்து தேர்தலில் வெற்றிபெற்றவர்களுக்கு எப்போதும் புலிகளால் எந்த அச்சுறுத்தலும் இல்லை. அந்த வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேகா ஆகியோரின் உயிருக்கு எப்போதும் அச்சுறுத்தல் இல்லை. ஆனால் புலிகளுக்கு எதிராகச் செயற்படும் மகிந்த ராஜபக்ஷவிற்கே இன்று உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பொது எதிரணியினரால் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தொடர்பில் இன்று அரசாங்கம் வேடிக்கையாக கருத்துகளை தெரிவித்து வருகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை நீக்க வேண்டும் என்ற கருத்துக்களையே தெரிவித்து வருகின்றார்.

ஆனால் உலகத்தில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த தலைவர்கள் எவரும் இன்று முன்னாள் தலைவர்கள் என்ற நிலையில் வாழவில்லை.

ரஷ்ய ஜனாதிபதி புடின் அவ்வாறு இருந்தாலும் இன்றும் அவர் ஜனாதிபதி என்ற முழுமையான பாதுகாப்பில் இருக்கின்றார்.

ஆனால் முன்னாள் தலைவர் என்று இருக்கும் ஒருவர் மகிந்த ராஜபக்ஷ மட்டுமேயாகும். அவ்வாறு இருக்கையில் அவருக்கு இன்றும் பல அச்சுறுத்தல்கள் உள்ளன.

ஆனால் ஜனாதிபதி,பிரதமர் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் நாட்டில் எந்தவித அச்சுறுத்தலும் இல்லை என கூறுகின்றனர்.

அவ்வாறு கூறும் அனைவரும் இம்முறை ஜனாதிபதி தேர்தலின் போது புலிகளுடனும் புலம்பெயர் புலி அமைப்புகளுடனும் இணைந்தே தேர்தலில் வெற்றி பெற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடமாகாண சபையினரும் எப்போதும் புலிகளுடன் கைகோர்த்து அரசியல் செய்பவர்கள்.

இன்று அவர்களின் கொள்கையால் நாட்டில் பிரிவினை வாதம் பலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அவ்வாறன நிலையில் புலிகளை ஆதரித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேகா ஆகியோரின் உயிருக்கு எப்போதும் அச்சுறுத்தல் இல்லை. ஆனால் மகிந்த ராஜபக்ஷ இலக்கு வைக்கப்பட்டுள்ளார்.

புலிகளை அழித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்திய மகிந்த ராஜபக்ஷ மக்களின் முழுமையான ஆதரவில் ஆட்சியமைத்தவர்.

அவர் நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயங்கள், அச்சுறுத்தல் என்னவென நன்கு அறிந்துள்ளார்.

ஆனால் இன்று ஆட்சிக்கு வந்தவர்களுக்கு அந்த சம்பவங்கள் தெரியாது.

ஆரம்பத்தில் இருந்தே புலிகளுடன் உடன்படிக்கை செய்து நாட்டில் புலிகளை பலப்படுத்தி புலிகளுடன் நட்புறவை வைத்திருந்தவர்கள்.

அவ்வாறு இருக்கையில் அவர்களுக்கு தேசிய பாதுகாப்பு என்னவென்பது தெரியாது.

இன்று வடக்கில் நடக்கும் சம்பவங்கள், அரசியல் நடவடிக்கைகள் என்னவென்பது மககளுக்கு நன்றாகவே தெரிகின்றது.

வடக்கில் புலிகளின் ஆதிக்கம் தலைதூக்கியுள்ளது. வடமாகாண சபையும் முதல்வரும் நாட்டில் பலமான பிரிவினைவாத கொள்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இனிமேல் இவர்களுக்கு இடம்கொடுத்தால் நாட்டில் மீண்டும் ஒரு ஆயுதப் புரட்சி ஏற்படும்.

மக்கள் அதை தடுத்து நிறுத்த எம்முடன் கைகோர்க்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-5)

# நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதே பிரதமரின் சீனப்பயணத்தின் நோக்கம்

## அமைச்சர் சஜித் விளக்கம்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவிற்கு மேற்கொண்ட விஜயமானது வெளிபடைத்தன்மை மற்றும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நோக்கமாக அமைந்திருந்தது என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரசியல் மயானத்திற்குள் தள்ளிவிடப்பட்டிருந்த அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையத்தை இயங்கச் செய்வதற்கும் இவ்விஜயம் உந்து சக்தியாக அமைந்தது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெலிஓயாவில் நடைபெற்ற "இசுறுபுர" கிராம வீடமைப்பு திட்டத்தை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறியுள்ளார்.

பிரதமர் அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயமானது வெற்றிகரமான இராஜதந்திர விஜயமாகும். கடந்த காலங்களில் அரச தலைவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் பிரயோசனமற்ற பயணங்களாகவே அமைந்திருந்தன.

இவ் விஜயம் ஒவ்வொரு தருணமும் நாட்டின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டே முன்னெடுக்கப்பட்டது. சீனாவிடமிருந்து பல கோடி ரூபா எமக்கு நிதியுதவி கிடைத்தது.

கடந்த காலங்களில் புராதனச் சின்னங்களாக காட்சியளித்த பாரிய அபிவிருத்தி திட்டங்களை மக்களுக்கு பயனளிக்கும் விதத்தில் மீள ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் மூலம் வருமானத்தை பெறும் விதத்திலான திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சீனாவின் முதலீட்டாளர்களை சந்தித்து பிரதமர் நடத்திய கலந்துரையாடல்கள் மூலம் பெரும் தொகையான முதலீட்டாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு இங்கு முதலீடுகளை மேற்கொள்ள தயாராகியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# இன்று ஒரு தகவல்

## உடல் உழைப்பும் உள்ள உழைப்பும்

ஒரு பெரும் பாறையைக் காட்டி இதை உருத் தெரியாமல் செய்ய வேண்டும். நீயாக இருந்தால் என்ன செய்வாய்? என்று இரு மாணவர்களிடம் தனித் தனியே கேட்டார் ஓர் ஆசிரியர்.

முதல் மாணவன் சொன்னான்;எனக்கு ஒரு கடப்பாறையும் சுத்தியலும் சிறிது வெடி மருந்தும் தாருங்கள் நான் இந்தப் பாறையைச் சுக்கு நூறாக ஆக்கித் தரை மட்டத்தை உயர்த்தி விடுகிறேன்.

அடுத்த மாணவன் சொன்னான்;எனக்கு ஒரு மண்வெட்டி தாருங்கள்.பாறைக்கு ஏற்ற குழியொன்றை மிக அருகில் தோண்டி அதில் அந்தப் பாறையைத் தள்ளி விட்டு மண்ணால் மூடிவிடுகிறேன் என்றான்.

இரண்டாவது மாணவனின் அறிவுபூர்வமான பதிலைக் கேட்டு வியந்து போனார் ஆசிரியர்.

நம்மில் பெரும்பாலானோர் முதலாவது மாணவனைப் போன்ற நிலையில் இருக்கிறோம்.

அதாவது மிகக் கடுமையாக உழைக்கிற பேர்வழி என்று முறையற்ற–தேவையற்ற–புத்திசாலித்தனமற்ற உழைப்பை மேற்கொள்ளலாம்.

நன்கு உழைக்க வேண்டும் என்பதில் யாருக்குமே எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் அதன் பின்னணியில் மனத்தின் உழைப்பும் ஒத்துழைப்பும் இருக்க வேண்டும்.

ஒரு ரூபாயின் உதவியைக் கொண்டு தொலைபேசியில் முடிக்க வேண்டிய ஒரு விடயத்தை லொங்கு , லொங்கு என்று அலைந்து திரிந்து முடிப்பது புத்திசாலித்தனமாகுமா? இப்படி உள்ளத்துக்கு வேலை கொடுக்காமல் உடலுக்கு வேலை கொடுத்து ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்வதோடு நேரத்தை வீணாக்குபவர்கள் மிகப் பலர்.

நாள் பூராவும் ,அலுப்பு,சலிப்பின்றி வேலை செய்து நான்கே ரூபாய் சம்பாதிப்பவர்கள் ஒருபுறம் இருக்க,தன்னுடைய புத்திசாலித்தனமான ஒரு முடிவின் மூலம் பல இலட்சம் ரூபாய்களை சில மணி நேரத்தில் சம்பாதிக்கும் மனிதர்களும் நாட்டில் இருக்கத்தானே செய்கிறார்கள்? இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு பல இலட்சங்களைச் சம்பாதிக்க எங்களால் எப்படி இயலும்? எங்கள் சக்தியும் தகுதியும் சிறு வட்டத்திற்குள்ளேயே அல்லவா அடங்கியிருகிறது என்பது பலரது வாதம்.

ஏற்றுக் கொள்ள வேண்டிய வாதம் தான். ஆனால் அந்த வட்டத்தையும் நாம் மூளைக்கு வேலை கொடுப்பதன் மூலம் மெல்ல மெல்ல மகத்தான வட்டமாக ஆக்கிக் கொண்டு விட முடியும்.

ஒரே வகையான வேலையைப் பல பேர் செய்து கொண்டிருக்க ஒருவரை மட்டும் தேர்ந்தெடுத்து பதவி உயர்வை ஒரு முதலாளி வழுங்குகிறார் என்றால், ஒன்று– அவர் நெஞ்சத்தில் இடம் பிடித்தவராக இருக்க வேண்டும். அல்லது மற்றவர்களை விட தேர்ந்தெடுக்கப்பட்டவர் மூளைக்கு வேலை கொடுப்பவராக இருக்க வேண்டும்.

முதலாளி நெஞ்சத்தில் இடம் பிடித்த செயல் சுடமன உழைப்பின் ஒரு பகுதியே என்பது எவரும் மறுக்க முடியாத வாதம்.

முடுக்கி விட்ட பொம்மைகளாகவும் தட்டிவிட்ட இயந்திரங்களாகவும் செயற்படுவதை விட்டுவிட்டு மூளைக்கு வேலை கொடுக்க வேண்டும்.

உடல் ஒத்துழைப்போடு உள்ளத்தின் ஒத்துழைப்பும் ஒவ்வொரு செயலிலும் இழையோட வேண்டும். இந்த ஈடுபாடு இல்லாதவரை முன்னேற்றத்தைக் காண முடியாது.

இத்தகைய உண்மைகளை உணராமல் நான் கடுமையாக உழைக்கிறேன்;இருந்தும் என்னால் முன்னேற முடியவில்லை என்று விரக்தி அடைவதோ,

உழைப்பின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழுப்பதோ எந்த விதத்திலும் –விவேகமான செயல் ஆகாது!

**லேனா தமிழ்வாணன்**




# ஜூரிக்கு பாடம் புகட்டிய அபி!

...ஒரு நாள் குளத்துக்குள் விளை யாட்டுப் போட்டி நடத்தினார்கள். நீச்சல், டைவ், ஆட்டம்பாட்டம் என்று போட்டிகள் களை கட்டின. இந்த வருஷம் புதிதாக அழகிபபோட்டியும் அறிவித்திருந தார்கள். எல்லாவற்றிலும் கலந்து கொண டது மட்டுமல்லாமல் போட்டியிலும் ஜூரி மீன்தான் முதல் பரிசு வாங்கியது.

அதைப் பாராட்டி 'தண்ணிவத்தா குளம் தங்க மீன்' என்ற பட்டம் வேற கொடுத தார்கள். ஜூரி யைப் பிடிக்க முடியுமா? கை நிறைய பரிசுகளோட தவளைகளிடம் வந்தது.



"என்ன பாக்குறீங்க? என்னை ஜெயிக்க உங்க கூட்டத்துல யாருக்காவது திறமை இருக்கா..." என்று சொல்லி ஹா... ஹா... ஹான்னு சத் தம்போட்டு சிரித்தது.

கூட்டத்தில் இருந்த அபி தவளையைப் பார த்து, "ஏதோ வீர வசன மெல்லாம் பேசுனியாமே. உன் வீர மெல்லாம் இப்போ எங்க போச்சு?" என்று ஏளனமாகக் கேட்டது. அதோடு விட வில்லை.

"இப்பவும் ஒண்ணும் கெட்டுப்போகல. ஏதாவது ஒரு போட்டியில என்னை ஜெயிச சாக்கூட இந்தப் பரிசையெல்லாம் உனக்கே கொடுத திடுறேன். என்ன போட்டின்னு நீயேகூட சொல்லலாம்" ன்னு அபியை வம்புக்கு இழுத்தது ஜூரி.

அபிக்குக் கோபம் வந்தாலும், வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், ஜூரியோ விடுவதாக இல லை. கேலியும் கிண்டலும் அதிகமானது. "என்ன, போட டிக்குத் தயாரா..?" என்று அபியைப் பார்த்து சீண டிக்கொண்டே இருந்தது.

ஒரு கட்டத்தில் திடீரென்று, "போட்டிக்கு நான் தயார்" என்று அபி சொன னதும், ஜூரி மட்டுமல்ல, அங்கே இருந்த எல்லாருமே அபியை ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

"என்னால முடியுற ஒண ணு, உன்னால முடியாது" - அபி தவளை, ஜூரி மீனைப் பார்த்து சொன்னது.

"என்னால முடியாதது எதுவுமே இல்லை" - ஜூரி கர்வமாகப் பேசி யது.

"எங்கே என்கூட வா பார்ப்போம்" என்று சொலலிக்கொண்டே குளத்துக்கு மேலே கரைக்கு வந்து அமரந்துகொண்டது அபி.

ஜூரி மீனும் கரைக்கு மேலே வந்தது. ஆனால், மூச்சு முட்டியதால் அத னால் தாக்குபிடிக்க முடிய வில்லை. உயிரைக் காப் பாற்றிக கொள்ளத் தோல் வியை ஒப்புக்கொண்டது. உடனே தண்ணீருக்குள் குதித்து விட்டது.

"ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு தனித்தன்மையும், திறமையும் இருக்கும். யாரும் யாருககும் குறைநதவர்கள் இல்லைங்கிறதை புரிஞ சுக்கிட்டேன். என்னை மன்னிச்சிடு" என்று அபியைப் பார்த்துச் சொன்னது ஜூரி.

அப்புறமென்ன? அத ற்குப் பிறகு எல்லோரும் நண்பர்களாக சந்தோ ஷமாக இருந்தார்கள் என்பதைத் தனியாகச் சொல்ல வேணடுமா?

(முற்றும்)




- 1111 - ஐந்தாம் ஹென்றி புனித ரோம் பேரரசின் மன்னனாக முடி சூடினான்.
- 1605 - ரஷ்யாவின் சார் மன்னன் பொரிஸ் குடுனோவ் மரணமானான். இரண்டாம் ஃபியோ தர்சார் மன்னனானான்.
- 1829 - பிரித்தானிய நாடாளுமன்றம் உரோமன் கத்தோலிக்கர்களுக்கு மதவுரிமை அளித்தது.
- 1930 - மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத திற்கு ஆதரவாக தென்னிந்தியாவில் ராஜாஜி தலைமையில் பாத யாத்திரை தொடங்கப் பட்டது.
- 1939 - இந்தியாவில் இந்திய செம்படை என்ற இராணுவ அமைப்பு பிரித்தானியர்களுக்கு எதிரான ஆயுதப்போராட்ட அமைப்பு ஆரம்பிக் கப்பட்டது.
- 1941 - ஜப்பானுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அணிசேரா உடன்பாடு எட்ப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் கார் டெலகான் என்ற இடத்தில் ஆயிரம் போர் மற்றும் அரசியல் கைதிகள் நாசிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1954 - காமராசர் சென்னை மாநிலத்தின் முதல்வ ரானார்.
- 1970 - அப்பல்லோ 13 விண்கலத்தில் ஒட்சிசன் தாங்கி வெடித்தது.
- 1975 - லெபனானில் 27 பாலஸ்தீனர்கள் கொல லப்பட்டதை அடுத்து அங்கு உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1979 - இலங்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1997 - டைகர் வூட்ஸ் கோல்ஃப் மாஸ்ரர்ஸ் வென்ற இளம் வீரரானார்.
- 2012- வட கொரியா ஏவிய ஊனா-3 என்ற ஏவூர்தி வானில் வெடித்துச் சிதறியது.

பிறப்புகள்

- 1743 - தோமஸ் ஜெபர்சன், மூன்றாவது அமெரிக்க ஜனாதிபதி (இ. 1826)
- 1906 - சாமுவேல் பெக்கெட், நோபல் பரிசு பெற்ற ஜரிஷ் எழுத்தாளர் (இ. 1989)
- 1930 - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தமிழ்த திரைப்படப் பாடலாசிரியர் (இ. 1959)
- 1934 - டேம் ஜேன் குட்டால், சிம்பன்சி பற்றி ஆராய் ந்த ஆங்கிலேயப் பெண்மணி
- 1939 - சீமுஸ் ஹீனி, நோபல் பரிசு பெற்ற ஜரிஷ் எழுத் தாளர்
- 1941 - மைக்கல் பிரௌன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்.
- 1949 - கிறித்தபர் ஃகிச்சின்சு, அமெரிக்க எழுத்தாளர், ஊடகவியலாளர்
- **1963 - காரி காஸ்பரோவ், ரஷ்ய சதுரங்க ஆட்டக் காரர்.**
- 1979 - பேரன் டேவிஸ், அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்.

இறப்புகள்

- 1605-பொரிஸ் குதுனொவ், ரஷ்யப் பேரரசன் (பி. 1551)

### காரி காஸ்பரோவ், ரஷ்ய சதுரங்க ஆட்டக்காரர்.



ரஷ்யாவின் முதற்தர சதுரங்க ஆட்ட வீரரும் முன்னாள் உலக சதுரங்க ஆட்ட வீரரும், எழுத்தாளரும், அரசியல்வாதியும் ஆவார். 2008ம் ஆண்டுக்கான ரஷ்ய அதிபர் தேர்தலில் ஒரு வேட்பாளரும் ஆவார்.


காஸ்பரொவ் வயதில் குறைந்த உலக சதுரங்க ஆட்ட வீரராக (சாம்பியன்) 1985இல் தெரிவானார். 1993 வரை இவர் பன்னாட்டு சதுரங்கக் கூட்டமைப்பு (ஃபீடே) உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தை இவர் வைத்திருந்தார். 1993 இல் ஃபீடே உடனான முரண்பாட்டினை அடுத்து அவ்வமைப்பிலிருந்து விலகி Professional Chess Association என்ற அமைப்பை ஆரம்பித்தார். 200ஆம் ஆண்டு வரையில் விளாடிமிர் கிராம்னிக்குடன் விளையாடித் தோற்கும் வரையில் காஸ்பரொவ் "மரபுவழி" உலக சதுரங்க வீரர் ("Classical" World Chess Championship) பட்டத்தை தனக்கே தக்க வைத்திருந்தார். பெப்ரவரி 10, 1996 இல் ஐபிஎம்மின் "Bg; GSh" கணினி இவரை ஆறு ஆட்டத் தொடரில் முதற்தடவையாக ஒரு ஆட்டத்தில் வென்று சாதனை படைத்தது. ஆனாலும் மற்றைய ஐந்து ஆட்டங்களில் மூன்றில் வென்றும் இரண்டில் சமன் செய்தும் காஸ்பரொவ் ஆட்டத்தை வென்றார். மே 1997 இல் Bg; GShவுடன் இடம்பெற்ற இன்னுமொரு ஆறு-ஆட்டத் தொடர்ப்போட்டியில் Bg; GSh 3.5-2.5 என்ற கணக்கில் காஸ்ப ரொவை வென்றது. இதுவே கணினி ஒன்று முதற்தடவையாக மனிதருடன் இடம்பெற்ற போட்டித் தொடரை வென்றது இதுவே முதற்தடவையாகும்.

# சீனாவைக் கடுமையாக எதிர்த்தவர்கள் இன்று அதன் காலடியில் விழுந்துள்ளனர்

## பொது எதிரணி விசனம்

(கொழும்பு)

**சீனாவின் பொருளாதாரக் கொள்கையையும் வேலைத்திட்டங்களையும் எதிர்த்தவர்களுக்கு இன்று சீனாவின் காலடியில் விழவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சீனாவை எதிர்த்தும் அவர்களை நிராகரித்தும் தம்மால் எந்தவித பொருளாதார நடவடிக்கைகளையும் கையாள முடியாது என்பதை இன்று அரசாங்கம் விளங்கிக் கொண்டுள்ளது என மகிந்த ஆதரவு அணியினர் தெரிவித்தனர்.**



எமது ஆட்சியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட வேலைத்திட்டங்களை குறைகூறியவர்கள் இன்று அதே வேலைத்திட்டங்களை ஆரம்பித்ததன் மூலமாக மகிந்த ராஜபக்ஷ சரியான திட்டங்களையே முனனெடுத்தார் என்பது நிரூபித்துள்ளனர் எனவும் மகிந்த அணியினர் குறிப்பிட்டனர்.

பொது எதிரணியால் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே பொது எதிரணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது அப்போதைய எதிரணியாக இருந்தவர்களுக்கு மகிந்த மட்டுமல்ல சீனாவும் எதிரியாகவே தெரிந்தது. நாம் சீனாவுடன் செய்து கொண்ட பொருளாதார உடனபடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் அனைத்தும் நாட்டை சீரழிக்கும் வகையிலேயே தெரிந்தது. அதேபோல் சீனாவின் காலனித்துவ நாடாக இலங்கை மாறுவதாகவும், சீனாவின் பொருளாதார கொள்கை எமது நாட்டின் தேசிய பொருளாதார கொள்கையை அழித்துவிடும் எனவும் கூறினார்கள். ஆனால் இன்று இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சீனாவும் சீனாவின் வேலைத் திட்டங்களும் நல்லதாக தெரிகின்றன. குறிப்பாக நாம் ஆரம்பித்த கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தை மோசமானதாக தெரிவித்தவர்கள் இன்று அதே வேலைத்திட்டத்தை முன்னெடுக்கின்றனர். அதேபோல் அம்பாந்தோட்டையில் சீனாவின் தொழிற்சாலை வலயம் அமைக்கவும் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆகவே அன்று சீனாவை எதிர்த்தவர்களுக்கு இன்று மீண்டும் சீனாவின் காலடியில் விழவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. சீனாவை எதிர்த்தும் அவர்களை நிராகரித்தும் எம்மால் எந்தவித பொருளாதார நடவடிக்கைகளையும் கையாள முடியாது என்பதை இன்று அரசாங்கம் விளங்கிக்கொண்டுள்ளது. ஆகவே எமது ஆட்சியில் ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட வேலைத் திட்டங்களை குறை கூறியவர்கள இன்று அதே வேலைத் திட்டங்களை ஆரம்பித்ததன் மூலமாக மகிந்த ராஜபக்ஷவை சரியென நிருபித்துள்ளனர். ஆகவே இந்த ஆட்சி மாற்றம் எவ்வாறு வந்தது என்பதும் மக்களுக்கு தெரிந்துள்ளது.

அதேபோல் ஜி 7 மாநாடுகளில் கலந்துகொள்ள ஜனாதிபதி பயணமாகின்றார். அதன் பின்னர் மீண்டும் நாட்டில் இடைக்கால பொருளாதார கொள்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது. ஆகவே இப்போது அந்த பொருளாதார கொள்கையையும் முன்வைத்தால் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் முன்வைக்கும் மூன்றாவது பொருளாதார கொள்கையாகும். ஆகவே இந்த அரசாங்கம் தனது பொருளாதார கொள்கையில் நிலையான தன்மையில் இல்லை என்பது தெரிகின்றது.

மக்களுக் கும நாட்டுக்கும் ஏற்ற ஆட்சியை இவர்களால் முன்வைக்க முடியவில்லை. அதை அரசாங்கம் அடிக்கடி நிருபித்துவருகின்றது என அவா மேலும் தெரிவித்தார். (இ-5)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

காரைநகர் சைவ மகா சபைக்கு புதிய நிர்வாகம் ஒன்றினை தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு சபையின் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது

புதிதாக அங்கத்துவம் பெறவர்கள் சபைத் தெரிவிலோ வாக்கெடுப்பிலோ கலந்து கொள்ளமுடியும்.எனவே அங்கத்தவராக இணைந்து கொள்ள விரும்புவோர் காரைநகர் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடமோ புனருத்தாரண சபையின் அங்கத்தவர்களிடமோ படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும்.


காரைநகர் பிரதேசத்தை நிரந்தரமாக, தற்காலிக வதிவிடமாகக் கொண்ட அனைவரும் அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியும். பழைய அங்கத்தவர்களும் தமது அங்கத்துவத்தை புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

மேலும்,காரைநகர் பிரதேசத்திலுள்ள ஆலய பரிபாலனசபைகள்,அறநெறிப் பாடசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் சைவஅமைப்புக்கள் அனைத்தினதும் பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்திற்கு தவறாது கலந்து கொள்ளுமாறும் நிர்வாக சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 691

Search for people, places and things Nagendram Home

அனு அனுஜன்




புரிந்தால் கொஞ்சம் சிந்தியுங்கள்!


தர்மா



ஜெனார்த்தன்



ரகுதரன்



வளங்களை சரியாகப் பயன்படுத்துவோம்.

விதுஷன்




நிஷாந்தன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சம்பூர் அனல்மின் நிலையம்!

# மக்களைவிட மின்சாரம் மேலானதா?




உலக நாடுகள் அனைத்தும் நிலக்கரி மூலம் பெறப்படும் மின் சக்தியிலிருந்து படிப்படியாக விடுபட்டு மீள உருவாக்கக்கூடிய சக்தி மூலங்களான சூரிய ஒளி, மற்றும் காற்று மூலம் மின்சாரம் பெறக்கூடிய பொறிமுறைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா, ஜேர்மன், சீனா போன்ற நாடுகள் நிலக்கரி அனல் மின்நிலையங்களை படிப்படியாக மூடி வருகின்றன. அண்மையில் மெக்சிக்கோ அரசாங்கம் 2.1 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் 1720 மெகாவோட் (MW) மின்சாரத்தினை காற்று மற்றும் சூரிய ஒளியிலிருந்து பெறுவதற்கான முதலாவது முதலீட்டு வாய்ப்பினை தனியார் துறைக்கு வழங்கியுள்ளதுடன் இதே வகையான மற்றுமொரு முதலீட்டு வாய்ப்பு இம் மாதத்தில் தனியார் துறைக்கு வழங்கப்படவிருக்கின்றது.

சம்பூரில் நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தினை உருவாக்க முனையும் இந்தியா கூட அண்மையில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை சீனாவிடமிருந்து கடனாகப் பெற்று சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறும் திட்டத்தில் முதலீடு செய்யவுள்ளதுடன் மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் பூங்காக்களை உருவாக்கத் திட்டமிடுகின்றது.

ஆனால் நிலக்கரி மூலம் 500 மெகாவோட் மின்சாரத்தினை உற்பத்தி செய்யக்கூடிய சம்பூர் அனல் மின்சார நிலையத்தினை சூழல் மீது மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டிய திருகோணமலையில் உருவாக்குவதற்கு இலங்கை மீது இந்தியா தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகித்துக் கொண்டிருக்கின்றது. இது இந்தியாவின் இரட்டை வேடத்தினை நன்கு வெளிப்படுத்துகின்றது.

### நுரைச்சோலையில நடப்பதென்ன?

நுரைச்சோலை அனல் மின்நிலையம் அமைக்கப்படுவதற்கு ஆரம்பம் முதலே அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரவித்துள்ளனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். மக்களின் எதிர்ப்பினையும் மீறி அனல் மின்நிலையம் கட்டப்பட்ட போது அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல், இலவச மின்சார விநியோகம், பாடசாலைக்கு கட்டடம் அமைத்துத் தருதல், வீதி அமைத்துத் தருதல், மீன்பிடிக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் திட்டங்களை வகுத்தல் போன்ற பல உத்தரவாதங்கள் நுரைச்சோலை பகுதி மக்களுக்கு அதிகாரிகளால்வ்ழங்கப்பட்டன. ஆனால நடைமுறையில் இவை எவையுமே இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நுரைச்சோலை அனல் மின்நிலையம் தொடர்பான சூழல் தாக்க பகுப்பாய்வு அறிக்கையில் நிலக்கரி மற்றும் சாம்பல் கிராமங்களை நோக்கி பரவாமல் தடுப்பதற்கு பெரிய மரங்கள் நடப்படவேண்டும் எனக் குறிபபிடப்பட்டுள்ளது. ஆனால பல வருடங்கள் கடந்தும் மரங்கள் எவையும் இன்று வரை நடப்படவில்லை. காற்று கடலிலிருந்து தரைப் பகுதியினை நோக்கி வீசும் போது நிலக்கரியும் சாம்பலும் நிலப்பகுதியினை நோக்கி விசிறப்படுவதால் மக்களின் வாழ்வாதாரமும் ஆரோக்கியமும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுக் கொணடிருக்கின்றன.

இதுமட்டுமன்றி நிலக்கரியினை எரிக்கும் போது உருவாகும் சாம்பல் சீமெந்து உற்பத்தி ஆலைகளுக்கு விற்கப்படும் என்று சூழல் தாக்க பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து உருவாகும் சாம்பல் சீமெந்து உற்பத்திக்கு பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருப்பதாகக் கூறி சீமெந்து ஆலைகள் சாம்பலினை வாங்க மறுத்து விட்டனவாம். இதனாலேயே சாம்பல் அனல் மின் நிலையத்திற்கு அருகேயுள்ள பிரதேசத்தில் கொட்டப்படுகின்றது.

மேலும் சல்பர் வாயு, நைதரசன் வாயு, தூசுப் படிவுகள் போன்றவற்றின் தாக்கததினை கண்காணிப்பதற்காக கற்பிட்டியில் ஒரு கண்காணிப்பு நலையத்தினையும் புத்தளம நகரத்தினை அண்டிய பகுதிகளில் இரண்டு கண்காணிப்பு நிலையங்களையும் அமைக்க வேண்டும் எனவும் சூழல் தாக்க பகுப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் அவ்வாறான நிலையங்கள் எதுவும் இன்றுவரை அமைக்கப்படவில்லை என்பதனை நம்பகமான தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது. இதன் மூலம் சூழல் தாக்க பகுப்பாய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் நடைமுறையில் கடைப்பிடிக்கப் படவில்லை என்பது நிரூபணமாகின்றது.

### சம்பூர் நிலக்கரி அனல் மின் நிலையம் ஏன் பேரழிவினை ஏற்படுத்தப் போகின்றது?

இத்திட்டம் தொடர்பான சூழல் பாதிப்பு பகுப்பாய்வில் சம்பூரில் ஒரு கோயிலும் இரண்டு கடற்படை முகாம்களும் இருப்பதாகவே கூறப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் மக்கள் வாழ்வதாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் 25.03.2016 அன்று சம்பூரில் முழுமையான மீள்குடியேற்றம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டு மக்கள் இப்போதுதான் குடியேறிக் கொணடிருக்கின்றார்கள். சூழல் பாதிப்பு பகுப்பாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவ முகாம்களில் ஒன்று சம்பூர் மகா வித்தியாலயத்திலேயே அமைக்கப்பட்டிருந்தது. தற்போது அம்முகாம் அகற்றப்பட்டு 28.03.2016 தொடக்கம் சம்பூர் மகாவித்தியாலயம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்நிலைமையில் சம்பூர் நிலக்கரி அனல் மின்நிலையம் தொடர்பாக முன்பு மேற்கொள்ளப்பட்ட சூழல் பாதிப்பு பகுப்பாய்வு, செலவு நலன் பகுப்பாய்வு மற்றும் சமூகப் பாதிப்பு பகுப்பாய்வு என்பவை அடிப்படையில் தவறாகப் போய விட்டன. ஆகவே இவ்வாய்வுகளை மீண்டும் செய்ய வேண்டியது அரசாங்கத்தினதும் அதிகாரிகளினதும் சட்ட ரீதியான கடமையாகும்.

சம்பூர் மற்றும் மூதூர் பிரதேசங்களில் ஒக்டோபர் மாதத்திற்கும் மார்ச் மாதத்திற்கும் இடைப்பட்ட காலப் பகுதியானது நெற்பயிர்கள் பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாராகிக் கொண்டிருக்கும் காலப்பகுதியாகும். இக் காலப் பகுதியிலேயே கடலிலிருந்து காற்று தரைப்பகுதியினை நோக்கி வீசுகின்றது. இவ்வாறு காற்று நிலப்பகுதியினை நோக்கி வீசும் போது சாம்பலும் நிலக்கரித் துகள்களும் நுரைச் சோலையில் நடப்பது போல் காற்றினால் அள்ளுண்டு செல்லப்படுமானால் சம்பூர், சேனையூர், கட்டைபறிச்சான், பள்ளிக் குடியிருப்பு, தோப்பூர், மூதூர், கிளிவெட்டி போன்ற பிரதேசங்களில் காணப்படும் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்படப் போகின்றன. நுரைசசோலையில் நடப்பது போன்று கப்பல்களிலிருந்து இறக்கபபடும் போது நிலக் கரி கடலில் சிந்தப்படுமானால் செழிபபான கொட்டியாரக் குடாவின் மீன்பிடி பாதிக்கப்படப் போகின்றது. இதனால் ஆயிரக் கணக்கான தமிழ் மற்றும் முஸ்லிம் மீனவர்க ளின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகப் போகின்றது.

அனல்மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் சுடுநீர் திருகோணமலைத் துறைமுக வாயிலில் அமைந்துள்ள செல் வளைகுடாப் பகுதியில் வெளியேற்றப்படப் போவதாக ஆரம்பத் தகவல்கள் தெரிவித்தன. இப்பகுதியில் இறால், நண்டு, கணவாய் போன்ற கடலுயிரினங்கள் அபரிமிதமாகக் காணப் படுகின்றன. இதைச் சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டிய பின்னர் சம்பூருக்குச் சென்ற சக்தி மற்றும் மீளுருவாக்கம் செய்யக்கூடிய சக்திவள அமைச்சர் சியம்பலாப்பிட்டிய அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் சுடுநீர் கொக்கட்டிப் பிரதேசத்தினூடாக குழாய்கள் மூலம் எடுத் துச் செலலப்பட்டு கடலுக்குள் செலுததப்படும் என கூறியுள்ளார்.

அவர் அடையாளம் கண்டுள்ள பிரதேசம் உலகில் மிகவும் கவனிப்பாக பேணப் படும பவளப் பாறைகள் நிறைந்த இடமாகும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# பசிலுக்கு அதிகளவான பாதுகாப்பு!

# சிக்கலில் மாட்டினார் கோத்தபாய



(கொழும்பு)

**மகிந்த அரசாங்க ஆட்சிக்காலத்தின போது முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டமை குறித்து, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.**

பாரிய நிதி மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவினால் விசாரணை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகுமாறு கோத்தபாயவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

முப்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 179 பேர பசிலின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பசிலின் மனைவியின் பாதுகாப்பிற்காக பெண் கடற்படை உத்தியோகத்தர்கள் மூன்று பேர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பசிலியின் வீட்டை சுத்தம் செய்யும் பணிகளும் பாதுகாப்புத் தரப்பினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அமைச்சர் ஒருவருக்கு இவ்வளவு பாதுகாப்பு வழங்கப்பட்டமை பாரிய பிரச்சினையாகும். அமைச்சர் ஒருவரின் அதிகாரங்களை முழுமையாக மீறி படையினரையும் பொலிஸாரையும் எந்தவிதமான அடிப்படையும் இன்றி கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணை நடத்தவே கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டுள்ளார். (இ-5)

## பதில் பொலிஸ்மா அதிபராக விக்கிரமசிங்க நியமனம்



(கொழும்பு)

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எம். விக்கிரமசிங்க பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை பொலிஸ்மா அதிபராக இருந்த என்.கே. இளங்கோன் ஓய்வு பெற்றதையடுத்தே ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

## போட்சிட்டி நிர்மாணத்துக்கான தடைகள் அகற்றப்பட்டுள்ளதாக சீனா அறிவிப்பு

(கொழும்பு)

போட்சிட்டி துறைமுக நகர அபிவிருத்தி தொடர்பில் தீர்க்கப்படாதிருந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. எனவே போட்சிட்டி நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்க முடியும என்று சீனா தெரிவித்துள்ளது.

சீனாவின் வெளியுறவு பேச்சாளர் லூ காங் இது தொடர்பில் செய்தியாளர்களுடன் கருத்துக்களை பகிர்ந்துள்ளார்.

இரண்டு தரப்புக்களும் பேச்சு வார்த்தைகளின் மூலம் இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சீனாவும் இலங்கையும் எப்போதும் இரண்டு தரப்புக்கும் சாதகமான திட்டங்களையே முன்னெடுத்து வந்துள்ளன.

இந்நிலையில் இலங்கை பிரதமரின் சீன விஜயத்தின் போது இரண்டு தரப்பு ஒத்துழைப்பு குறித்து ஆழமான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன என்றும் பேச்சாளர் தெரிவித்தார். (இ-5)

# தலைமன்னார் - இராமேஸ்வரம் பாலம் தொடர்பில் விரைவில் உடன்பாடு-நிதின்



(கொழும்பு)

தலைமன்னாரையும் இராமேஸ்வரத்தையும் இணைக்கும் பாலத்தை அமைப்பது தொடர்பாக, இந்தியாவும் இலங்கையும் விரைவில் உடன்பாடு ஒன்றுக்கு வரும் என இந்தியாவின் வீதிப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், கப்பல்துறை அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன் தினம் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சங்கத்தில் கருத்து வெளியிட்ட அவர், இந்த திட்டம் குறித்து தற்போது கலந்துரையாடப்பட்டு வருகிறது. ஆனால் இன்னமும் இறுதியாகவில்லை.

இந்த விடயம் குறித்து இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை தரப்பும் இந்த விடயத்தில் ஆர்வத்துடன் உள்ளது என்று தெரிவித்தார்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பான விவகாரம் குறித்து இலங்கை நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதற்கு கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி பதிலளித்த இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த திட்டம் தொடர்பாக இந்தியாவுடன் எந்தப் பேச்சுக்களும் நடத்தப்படவில்லை என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பட்டாசு விபத்துக்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கவும்

## சந்திராணி பண்டார வலியுறுத்து



(கொழும்பு)

பட்டாசுகளினால் ஏற்படக்கூடிய விபத்துக்களிலிருந்து சிறுவர்,சிறுமியர்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு மகளிர் விவகார மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் சந்திராணி பண்டார கோரியுள்ளார்.

பெற்றோர்கள் மற்றும் வயது வந்தவர்களிடம் அவர் இந்த பகிரங்க கோரிக்கையை விடுத்துள்ளார்.

தமிழ் சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது பட்டாசு காரணமாக ஏற்படக்கூடிய விபத்துக்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊடகமொன்றின் ஊடாக அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

எல்லா ஆண்டுகளிலும் பட்டாசு விபத்துக்களினால் சிறுவர்களின் கண்கள், கைகள், கால்கள் போன்ற உறுப்புக்களுக்கு பல்வேறு காயங்கள் ஏற்பட்டு நிரந்தர பாதிப்புக்களும் சில நேரங்களில் ஏற்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் குறித்து பெரியவர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# செய்தித்துளிகள்

## எச்சரிக்கைப் பதாகைகளை வீதியில் வைத்த பொலிஸார்

பண்டாரவளை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் விபத்துக்களை குறைக்கும் நோக்கில் விபத்துக்கள் குறித்த அபாய எச்சரிக்கை பதாகைகள் வீதியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இடத்திலேயே வாகனம் ஒன்று பாதையை விட்டு விலகி விபத்துள்ளாகியிருப்பதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த விபத்தானது, பண்டாரவளை எல்லதோட்டை என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

தனது வீட்டில் மின்சாரம் தடைப்பட்ட வேளையில் மின்மானி பெட்டியை பரிசோதனை செய்ய முயற்சித்த நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கினிகத்தேனை பிரதேச பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் ஏ.நுவான் சந்துரங்க (வயது-34) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (இ-5)

## பழைய மாணவர் பொதுக்கூட்டம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அழகரத்தினம் மண்டபத்தில் நடைபெறும்.(இ-5)

## வருடப்பிறப்பு உற்சவம்

யாழ்.வண்வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் துர்முகி வருடப்பிறப்பு உற்சவத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி துர்முகி வருடப்பிறப்பு நேரமாகிய 6.36 மணிக்கு மூல மூர்த்தி பூஜையும் வசந்த மண்டப பூஜையும் நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வருவார். (இ

## பூரண யோகியின் அனுபவ உரை

சுவிட்சர்லாந்து பூரண ஆச்சிரமம், ஸ்தாபகர் பூரண யோகியின் மனித மேம்பாடும் இயற்கைச் சக்தியும் பற்றிய அனுபவ உரையானது ஊரெழு பலாலி வீதி என்.கே. மண்டபத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (இ

## சிறுகதை தொகுப்பு வெளியீடு

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் குந்தவை வீரகத்திப் பிள்ளை ராஜரெட்ணம் சடாச்சரதேவியின் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு நாளை வியாழக்கிழமை 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ செல்வச் சந்நிதி செல்லையா ஐயர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு வடமாகாண பொது சேவை ஆணைக்குழுத் தலைவர் ஆர். தியாகலிங்கம் தலைமை தாங்கவுள்ளார். மேலும் மலர் வெளியீட்டினைத் தொடர்ந்து கவி அரங்கமும் நடன நாட்டிய கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (இ-5)

## புதியவர்களும் இணையலாம்

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையில் அங்கத்தவராக இருப்பவர்கள் 2016 ஆம் ஆண்டு அங்கத்துவத்தை 2016.05.05 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பிரதேச செயலர் பிரிவில் பணத்தினை செலுத்தி உறுதிப் படுத்துவதுடன் புதியவர்களும் விண்ணப்பங்களை பெற்று இணையுமாறு கேட்டுக் கொள்கிறேன் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (இ

## நட்சத்திர ஹோட்டலாக சிறைச்சாலை மாற்றம்

கண்டி - போகம்பரை சிறைச்சாலையானது நட்சத்திர ஹோட்டலாக மாற்றப்படும் என நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் கண்டி நகரானது சுற்றுலாப் பயணிகளை கவரும் முக்கிய நகரமாகும். சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலேயே குறித்த நட்சத்திர ஹோட்டல் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார். (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

## 138 எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடித்த ராஜகுமாரி அமோக வெற்றி

1946 இல் பின்னணிபாடும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. எம்.ஜி. ஆர். வாழ்க்கையிலும் திருப்பம் ஏற்பட்டது.

1947ஆம் ஆண்டு இந்தியாவின் வரலாற்றில் எப்படி முக்கியமானதோ அது போல் எம்.ஜி. ஆரின் வாழ்க்கையிலும் முக்கியமானது.

1947 ஒகஸ்ட் 15 ஆம் திகதி இந்தியா சுதந்திரம் அடைந்தது.

அதற்கு 4 மாதங்களுக்கு முன்பாக அதாவது ஏப்ரல் 11 ஆம் திகதி எம்.ஜி. ஆர். முதல் முதலாக நடித்த ராஜகுமாரி படம் வெளியாயிற்று.

எம்.ஜி.ஆர். நடித்த முதல் திரைப்படமான சதி லீலாவதி 1936இல் வெளியானது. அதற்கு 11 ஆண்டுகளுக்குப் பிறகு தான் கதாநாயகன் ஆனார்.

அவர் கதாநாயகன் ஆனது எப்படி என்று பார்ப்போம்.

### டைரக்டர் ஏ.எஸ்.ஏ.சாமி

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.எஸ்.ஏ.சாமி இலங்கையில் வாழ்ந்தவர். அவர் பில்ஹணன் என்ற நாடகத்தை எழுதினார். இந்த நாடகத்தை திருச்சி வானொலி நிலையத்துக்கு அனுப்பினார்.

இதை ஒலிபரப்புவதற்கு ஏற்றுக் கொண்ட திருச்சி வானொலி நிலையம் அதை 1944 ஒகஸ்ட் 29 ஆம் திகதி ஒலிபரப்பியது. கதாநாயகன் பில்ஹனாக நடித்தவர் அன்றைய சுப்பர் ஸ்டார் எம்.கே.தியாகராஜ பாகவதர்! அவர் நடித்த ஒரே ரேடியோ நாடகம் இதுதான்.

பாகவதர் பங்கு கொண்ட காரணத்தால் இந்த ரேடியோ நாடகத்தை தமிழகமே ஆவலுடன் கேட்டது. அப்படிக் கேட்டவர்களில் ஒருவர் நாடக மேதை டி.கே. சண்முகம். அவர் அதை மேடை நாடகமாக்க விரும்பினார்.



அவர் உடனே ஏ.எஸ்.ஏ.சாமியுடன் தொடர்பு கொண்டு பில்ஹணன் ரேடியோ நாடகத்தை மேடைக்கு ஏற்றவாறு மாற்றித்தருமாறு கேட்டுக் கொண்டார். அவரும் தக்கபடி மாற்றித்தந்தார். பில்ஹணன் மேடையில் அரங்கேறியது. கதாநாயகன் டி.கே. சண்முகம் கதாநாயகி எம்.எஸ்.திரவுபதி.

### சினிமா

இந்தக்கால கட்டத்தில் ஜெமினி மாடர்ன் தியேட்டர்ஸ் போல ஜுபிடர் பிக்சர்ஸ் நிறுவனமும் படத்தொழிலில் முன்னணியில் இருந்தது. எம்.சோம சுந்தரம், எஸ்.கே. மொகிதீன் ஆகிய இருவரும் இதன் அதிபர்கள்.

பில்ஹணன் நாடகத்தை ஜுபிடர் சோமு பார்த்தார். அதைப் படமாக்க முடிவு செய்தார். ஏ.எஸ்.சாமியை அழைத்து ஜுபிடரின் 6 படங்களுக்கு வசனம் எழுத ஒப்பந்தம் செய்து கொண்டார்.

அந்த ஒப்பந்தத்தின்படி வால்மீகி, ஸ்ரீமுருகன் ஆகிய படங்களுக்கு சாமி வசனம் எழுதினார்.

ஸ்ரீமுருகன் படத்தில் கதாநாயகனாக (முருகனாக) ஹொன்னப்ப பாகவதர் நடித்தார். பரமசிவன் வேடத்தில் எம்.ஜி.ஆர். தோன்றினார். அவரும் பார்வதியாக நடித்த கே.மாலதியும் இப் படத்தில் ஆடிய சிவ-பார்வதி தாண்டவம் ரசிகர்களைக் கவர்ந்தது.

எம்.ஜி.ஆரும் ஏ.எஸ்.ஏ.சாமியும் நண்பர்கள் ஆனார்கள்.

### ராஜகுமாரி

அடுத்தபடியாக ராஜகுமாரி என்ற படத்தைத் தயாரிக்க ஜுபிடர் முடிவு செய்தது.

கதை-வசனத்துடன் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்கும்படி ஏ.எஸ்.ஏ.சாமியிடம் ஜுபிடர் சோமு கூறினார். அதற்கு மகிழ்ச்சியுடன் சம்மதித்தார் சாமி.

இந்தப்படத்தின் கதாநாயகனாக பி.யு. சின்னப்பாவையும் கதாநாயகியாக டி.ஆர். ராஜகுமாரியையும் ஒப்பந்தம் செய்ய ஜுபிடர் நிறுவனம் நினைத்தது.

(தொடரும்)

# சம்பூர் அனல்மின் ...

(18ஆம் பக்கம் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

எவ்வித சூழல் பாதிப்பு பற்றிய பகுப்பாய்வுமின்றி இவ்விடம் திடீரென எவ்வாறு தெரிவு செய்யப்பட்டது என்பது வேடிக்கையாக உள்ளது.

### தமிழரசுக்கட்சித் தலைமையின் நிலைப்பாடும் விளக்கமும் சரியானதா?

சம்பூர் நிலக்கரி அனல மின்நிலையம் தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன் தவறான நிலைப்பாட்டிலேயே உள்ளார்.

சம்பூர் மக்கள் குடியேறுவார்கள். ஆனால் அனல்மின் நிலையம் வந்தே தீரும எனவும் இந்தியா வராவிட்டால் சீனா வந்து விடும் எனவும் ஆரம்பத்திலிருந்தே அவர் கூறிக்கொண்டிருந்தார்.

ஆனால் சம்பூர் மற்றும் மூதூர் பிரதேச மக்களைப் பொறுதத வரையில் இந்நிலைப்பாடு மிகவும் தவறானதாகும்.

25.03.2016 அன்று சம்பூர் மகா வித்தியாலயத்தினை மக்களிடம் மீள வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன் நுரைச்சோலை அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் தான் இன்று அம்மின் நிலையத்தில் வேலை பார்ப்பதுடன் மிகவும் சந்தோசமாகவும் வாழ்கின்றார்கள் எனக் கூறியிருந்தார்.

இது முற்றிலும் உண்மைக்கும் புறம்பானதாகும்.

நாம் நேரில் சென்று பார்த்து உறுதிப்படுத்திய தகவல்களின்படி அப்பிரதேசத்தினைச் சேர்ந்த இருவர் மட்டும் அனல் மின் நிலையத்தில் வாகனச்சாரதிகளாக பணியாற்றுவதை அறிய முடிந்ததுடன் மக்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதையும் அறியக் கூடியதாக இருந்தது.

மற்றுமொரு தமிழரசுக் கட்சித் தலைவரான மாவை சேனாதிராசா ஒரு தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தமிழ் மக்கள் ஒரு அரசியல் தீர்வினை பெற்றுக் கொள்வதற்கு இந்தியாவின் உதவி தேவையான படியால் இந்திய உதவியுடன் அமையப் போகும் சம்பூர் நிலக்கரி அனல் மின்நிலையத்தினை தாங்கள் எதிர்க்க முடியாது எனக் கூறுகின்றார்.

இவ்வாறான விடயங்களை யதார்த்தமான முறையில் ஆராயாமல் கற்பனையில் நினைக்கும் தீர்வுத்திட்டத்திற்காக பத்து வருடமாக அகதி வாழ்க்கையினை அனுபவித்து விட்டு தற்போது தான் தமது வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்ப முனையும் மக்களை அவர்கள் பிரதிநிதிகள் எனக்கூறிக் கொண்டு அதல பாதாளதத்தில் தள்ளிவிட முனைவது தமிழரசுக்கட்சி தலைமைக்கு உகந்த விடயமாக இருக்கப் போவதில்லை.

### நாட்டுக்கும் மக்களுக்கும் உள்ள மாற்று வழி என்ன?

முதலில் இலங்கை மின்சார சபையும் மீளுருவாக்கம் செய்யக்கூடிய சக்தி வள அமைச்சு என பெயர் வைத்துக்கொண்டு உலகிலேயே அழுக்கான மூலமாகக் காணப்படும் மலிவானது என்னும் ஒரே காரணத்திற்காக சூழல் பாதிப்புக்களையும் வெளிவாரி விளைவுகளையும் கவனத்தில் கொள்ளாமல் நிலக்கரியினை எரித்து மின்சாரம் பெற முற்படும் அமைச்சும் இலங்கை மின்சார சபையும் மக்களுக்குப் பொய் கூறுவதனை நிறுத்த வேண்டும்.

நண்டகாலத்தில் சூரிய ஒளி மற்றும் காற்று போன்றவற்றின் மூலம் மின்சாரம் பெறும் வழிமுறைகள் பரவலாக அமுல் படுத்தப்பட வேணடும்.

சூழலை பேணிப் பாதுகாத்துக் கொண்டு எவ்வாறு பொருளாதார அபிவிருத்தியினை அடைவது என்பதனை மிகவும் சிறிய நாடான பூட்டானிடம் இலங்கை அறிந்து கொள்வது நல்லது.

சூழல்பாதுகாப்பினை மிக முக்கியமானதாகக் கருதும் அந்த நாட்டின் அரசியலமைப்பின்படி நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 60 வீதம் காடுகளாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நடைமுறையில் அந்நாடு 72 வீத நிலப்பரப்பில் காடுகளைக் கொண்டுள்ளது.

கலாநிதி
கோ.அமிாதலிங்கம
கொழும்பு
பல்கலைக்கழகம்

தீபம் அதன் அடிப்புறத்திற்கு ஒளி தருவதில்லை.
– துருக்கியப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவையை பேரலை என முதல்வர் கூறியது ஏன்?

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டு நான்கு மாதங்கள் மட்டுமே நிறைவேறியிருக்கும் வேளையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட முன்மொழிவின் இறுதி வடிவத்தை பேரவை நிறைவு செய்துள்ளது.

பேரவை ஆரம்பிக்கப்பட்டு ஒன்றரை மாதங்களுக்குள் தீர்வுத்திட்ட முன்வரைபு ஒன்றைத் தயாரித்து அதனை வெளியிட்டதுடன் அத் தீர்வுத்திட்ட வரைபை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று பொதுமக்களின் கருத்துக்களைப் பதிவு செய்து கொண்டமை ஈழத்தமிழ் மண்ணில் இதுகாறும் நடக்காத நிகழ்வு எனலாம்.

பொதுமக்களின் கருத்துகளைப் பதிவு செய்து கொண்ட தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் துறை நிபுணர் குழுவானது மக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி தீர்வுத்திட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அதனை பேரவைக்குச் சமர்ப்பித்தது.

இந்த நிகழ்வு கடந்த 10ஆம் திகதி யாழ்ப்பாண பொதுநூலகத்தில் இடம்பெற்றது. தீர்வுத்திட்டத்தின் இறுதி முன்மொழிவு தொடர்பில் ஆராய்ந்த பேரவையும் தனது கருத்துக்களைப் பதிவு செய்து தீர்வுத்திட்ட முன்மொழிவை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

இதன்போது தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும் வடக்கின் முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் அங்கு உரையாற்றுகையில், தமிழ் மக்கள் விழித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கு அடையாளமே தமிழ் மக்கள் பேரவை என்ற பேரலை தான்.

இது சுனாமி போன்ற அலை அல்ல. தமிழ் மக்கள் பேரவை என்ற பேரலை உதயமாகியுள்ளதால் எமது மக்கள் உண்மையை உணரத் தொடங்குவார்கள்; எமது பாரம்பரியங்கள் பற்றி அறியத் தொடங்குவார்கள்; எமது இலட்சியங்களை பாதுகாக்க முன்வருவார்கள்; ஒற்றுமைக்கு வித்திடுவார்கள்.

இந்தப் புனித கைங்கரியத்தில் தமது நேரகாலங்களை, பணத்தை, பல்வித சுகங்களை தியாகம் செய்து எமக்கென தீர்வு ஒன்றினை அடையாளப் படுத்திய தீர்வுத்திட்ட உப குழுவினர் பாராட்டப்பட வேண்டியவர் என்றும் குறிப்பிட்டார்.

இங்குதான் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் பேரவையை பேரலை என்று கூறியதற்கான காரணம் உள்ளடங்கியுள்ளது.

தமிழ் மக்கள் பேரவை ஒரு அரசியல் கட்சி அல்ல. அது ஒரு மக்கள் இயக்கம்; மக்கள் ஒன்றுபட்டுவிட்டால் அவர் இங்கு குறிப்பிட்ட அனைத்து சாத்தியமாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழ் மக்கள் பேரவையை வலுவாக ஆதரிக்கின்றனர்.

தமிழ் மக்கள் பேரவையானது பேரலையாக அவ்வப்போது எழுந்து தீயவர்களுக்கு நஞ்சையும் நல்லவருக்கு அமிர்தத்தையும் அள்ளிக் கொடுக்கும்.

அந்தப் பேரலை கடல் அலை போல் ஓய்வதில்லை அதன் பணி தொடர்ந்து கொண்டே இருக்கும் இதைத்தான் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் பேரவையை பேரலை என்று விழித்துக் கூறினார்.

அவர் முன்னின்று நடத்தும் அமைப்பு அல்லவா! பேரவை. நிச்சயம் அது தமிழர்களுக்கு விடிவைத் தரும் என்று நம்பலாம்.

# உலக பொருளாதாரத்தில் சீனா அசைக்க முடியாத சக்தி!

## இலங்கை மண்டியிட இதுவே காரணம் – ஹெகலிய

(கொழும்பு)

உலக பொருளாதாரத்தில் சீனா அசைக்க முடியாத சக்தியாக உருவாகிவருகின்ற யதார்த்தமே அரசாங்கத்தை சீனாவின் காலடியில் விழ வைத்ததுள்ளதென முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்பாராளுமன்ற உறுப்பினருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். கொழும்பு துறைமுக நகர்த திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் சீனாவுக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேறகண்டவாறு குறிப்பிட்டார். அவர் இந்த விடயம் குறிந்துமேலும்குறிப்பிடுகையில்,

கொழும்பு துறைமுக நகர்த திட்டத்தை நிறுத்துவதாகவும் இலங்கை சீனாவின் கொலணியாக மாறியுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கூறியதை நாங்கள் இன்னும் மறக்கவில்லை.

எமது முன்னைய அரசாங்கம் சீனாவுடன் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்தபோது எதிர்க்கட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி கடும் விமர்சனங்களை முன்வைத்தது.

ஆனால்இன்று நிலைமை மாறிவிட்டது. சீனாவை கடுமையாக விமர்சித்த ஐக்கிய தேசிய கட்சி இன்று அதன் காலடியில் விழுந்துள்ளது. இதற்கு என்ன காரணம் என்பதனை நாம் ஆராய வேண்டும்.

அதாவது உலக பொருளாதாரத்தில் சீனா அசைக்க முடியாத சக்தியாக உருவாகிவருகின்றது என்ற யதார்த்தமே அரசாங்கத்தை சீனாவின் காலடியில் விழ வைத்தது. இதுதான்யதாரத்தமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

## போக்குவரத்து அதிகார நியதிச்சட்டம் வடக்கு மாகாண சபையால் அங்கீகாரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார நியதிச் சட்டம் வடமாகாண சபையினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 49-வது அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு குழுநிலை விவாதம் இடம்பெற்றது.

குழுநிலை வாதத்தின் போது பெண்களுக்கான போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் நகரப்பகுதிகளிலுள்ள முச்சக்கரவண்டிகள் வெளி நாட்டில் இருந்து வருபவர்களிடமும் வெளிமாவட்டங் களில் இருந்து வரும் பயணிகளிடமும் அதிகமான பணம் அறவிடுகின்றார்கள். அதனை கவனத்தில்கொண்டு அதற்கேற்றவாறு சட்டத்தினை அமுல்படுத்த வேண்டுமென்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், யாழ். மத்திய பஸ் நிலையத்தில் வெளிமாவட்டங்களிற்கு செல்லும் பேருந்துக்காக பெண்கள் காத்துக்கொண்டிருக்கும் நேரங்களில் பல விதமான பிரச்சினைகளை எதிர் நோககி வருகின்றார்கள்.

குறிப்பாக பேருந்து சாரதிகள் மட்டுமன்றி, பொது ஆண்களும் மது அருந்தி விட்டு பெண்கள் முன்பாக தவறான வார்த்தைப்பிரயோகங்களை பயன்படுத்துவதுடன் அநாகரிகமான முறையில் நடந்து கொள்கின்றார்கள்.

எனவே யாழ். மத்திய நிலையத்தில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்ற கருத்துக்களும் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனால் முன்வைக்கப்பட்டன.

கருத்துக்கள் முழுமையாக ஆராயப்பட்டு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் சபையில் முன்மொழிய, எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.தவநாதன் வழிமொழிந்தார்.

அனைத்து உறுப்பினர்களும் இதனை ஏகமனதான ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வீதிப் பயணிகள் போக்குவரத்து நியதிச்சட்டம் ஓரிருவாரங்களில் வடமாகாண ஆளுநரின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தற்கொலை அங்கி; 8 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பகுதியில் இருந்து மீட்கப்பட்ட தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருட்கள் தொடர்பில் இதுவரை 8 சந்தேச நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

ஏற்கெனவே கைது செய்யப்பட்ட ஐவரிடம் நடத்திய விசாரணைகளை அடுத்து மூன்று பேர் கடந்த மூன்று தினங்களில் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

முன்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுடன் தொடர்புகளைப் பேணிவந்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

எவ்வாறாயினும் இது குறித்த மேலதிக வசாரணைகளை பயங்கரவாத விசாரணைப் பிரிவு தொடர்ந்தும் நடத்தி வருகின்றது. (செ-4)

## பனாமா நாட்டில் வைப்பிலிட்டுள்ள இலங்கையர் குறித்து விசாரிக்கப்படும்

### உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பானமா நாட்டு நிதி நிறு வனங்களில் பணம் வைப்பிலிட்டுள்ள இலங்கையர் கள் தொடர்பாக தற்போதைய அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கையர்களின் பெயர் விபரங்கள் வெளியிடபபட்டதன் பின்னர் அது சம் பநதமான விசாரணைகளை முன்னெடுக்க உளளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

பொல்கஹவலை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்ர் இவ்வாறு தெறிவித்தார். (இ-5)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ் வருடத்திற்கான கலாபூ ஷண விருதிற்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் விண்ணப்ப முடிவுத் திகதி 05.05. 2016 ஆகும். இவ் விண்ணப் பங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவிடம் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

## பருத்தித்துறை பிரதேச சபையால் அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டது

பருத்தித்துறை பிரதேச சபையினரால் வியாபாரிகள், விவசாயிகள், குத்தகைகாரருக்கான அறிவித்தல் காட்சிப்படுத தப்பட்டுள்ளது.

விவசாய உற்பத்திப்பொருட கள் தவிர்ந்த ஏனைய விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு கழிவு விதிக்கக்கூடாது. வாழைக்குலைகளுக்கு மட்டும் தண்டிற்கு கழிவு விதிக்கப்படும். உற்பத்திப் பொருட்களின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். வியாபாரிகளால் வேறு சந்தைகளில் கொள்வனவு செய்து விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு வரி செலுத்தத் தேவையில்லை.

விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 47 வீதம் மட்டுமே வரி அறிவிடப்பட வேணடும. விற்பனை செய்ய விரும்பின் அதற்கான இடத்தினை ஒதுக்கிக் கொடுத்து இடத்திற்கான வரியை மட்டும் செலுத்த வேண்டும். விலை நிர்ணயத்திற்காக எவரும் தரகுப் பணம் செலுத்தத் தேவையில்லை போன்ற விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஏதேனும் முறைப்பாடுகள இருப்பின் பருத்தித்துறை பிரதேச சபையின் செயலாளருக்கு அறிவிக்க முடியும என்க் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தூய்மை காப்போம்



✦ இளமையான மூங்கிலை எளிதில் வளைக்க முடியும். அது போல, இளம்வயதிலேயே மனதை கடவுள் பக்கம் திருப்பி விடுங்கள்.

✦ மனித மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. உலகவிஷயத்தில் ஈடுபட்டு சிதறி நாலாபுறமும் ஓடினால் ஒன்று சேர்ப்பது எளிதல்ல.

✦ பேசுவது யாருக்கும் எளிமையானது. ஆனால், அதைப் பின்பற்றி நடப்பது மிகவும் கடினமானது.

✦ மனமே கடவுள் குடியிருக்கும் வீடு. எப்போதும் அதன் தூய்மை காப்பது அவசியம்.

✦ தன்னைத் தானே ஒருவன் திறமைசாலி என்று கருதிக் கொள்வது மூடத்தனமான செயல்.

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம்-2016

## கே.சி.சி.சி.மேற்பிரிவு இறுதிப்போட்டிக்கு தெரிவு



கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்க ழகம் வருடாவருடம் நடத்தி வரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட் டியின் முதலாவது கால் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கே.சி.சி.சி. அணி ஓல்ட் கோல்ஸ் அணியை 29 ஓட்டங்களால் வெற்றி பெற்று மேற்பிரிவு இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 28.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 224 ஓட்டங்களை பெற் றது.

சத்யன் -15, ஜெயரூபன்-18, ராகுலன்-92, உத்தமன்-25, ஆதித்தன்-22 ஓட்டங்களைப் பெற்றனர்.

சோபிநாத் -01, நிரோஜன்-02, ஸ்ரீகுகன்-02, நிலக்ஷன்-02, திலீபன் -03 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்கோட்ஸ் அணி 28.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 195 ஓட்டங்களை பெற்றனர்.

மதுஸன்-63, பிரசோபனன்-18, நிரோஜன்-34, விபீஸ்-26, சீராளன்-12 ஓட்டங்களை பெற்றனர். சத்யன்-02, சிலோஜன்-02, ராகுலன்-01, சாம்பவன்-02, உத்தமன்-03 இலக்குகளை கைப்பற்றினர்.

கால் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணி 2 ஆவது காலிறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற மானிப்பாய் பாரிஸ் அணியுடன் 17.04.16 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மேற்பிரிவு இறுதிப் போட்டியில் கலந்து கொள்வர். (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை காற்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் நடப்பு வருடத்துக்கான வல்லவன் கிண்ணத்திற்கான காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தேவன்பிட்டி சென் சேவியர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

## இறுதிக்குள் நுழைந்தது சென்.மேரிஸ் அணி

"புதிய விடியல்" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சனிக்கிழமை நடைபெற்ற உதைபந்தாட்ட அரையிறுதிப்போட்டியில் ஞானமுருகன் அணி தோல்வியடைந்தது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 2-1 என்ற கோல்கணக்கில் சென். மேரிஸ் அணி வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது. (கு)

# தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டி

## கிளிநொச்சியிலிருந்து 53பேர் தெரிவாகினர்



இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட இளையோர் சதுரங்கப் போட்டிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஐம்பத்து மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி போட்டியின் மாவட்ட மட்டத் தெரிவுப்போட்டிகள் முதல் முறையாக கிளிநொச்சியில் கடந்த 9, 10 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஆதரவுடன் இப் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் இருநூறு வரை யான வீரர்கள் பங்கு கொண்டமை சிறப்பம்சமாகும்.


இப்போட்டிகள் 8 வயதின் கீழ், 10 வயதின் கீழ், 12 வயதின் கீழ், 14 வயதின் கீழ், 16 வயதின் கீழ், 18 வயதின் கீழ் என்ற வயதுப்பிரிவுகளில் ஆண், பெண் பிரிவுகளாக நடைபெற்றன. இப்போட்டிகளின் பிரதம நடுவராக இலங்கை சதுரங்கச் சம்மேளன நடுவர் சஜீவ சுகததாச, கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்க நடுவர்களும் கடமை யாற்றினர்.

இப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களும், குறித்த புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களும் என ஐம்பத்து மூன்று பேர் தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

தேசிய மட்டப் போட்டிகள் எதிர் வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக இலங்கை சதுரங்கச் சம்மேளனம் அறிவித்துள்ளது. (க-277)

# வலைப்பந்தாட்ட போட்டி


## நல்லூர் தெற்கு வெற்றி



97 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் உள்ளூர் வலைப்பந்தாட்ட போட்டியில் அரியாலை திருமகள் சனசமூக நிலையம் நல்லூர் தெற்கு அணியிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தது.

முதல் பாதியில் 11:9 என முன்னிலை வகித்தாலும் நல்லூர் தெற்கு வீராங்கனைகளின் சிறந்த ஆட்டத் தின் மூலம் ஆட்ட முடிவில் 20:20 என சமநிலையடைய மேலதிக் நேரத்தில் நல்லூர் தெற்கு 25:22 என வெற்றி பெற்றது. (கு)





பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மின்னொளியில் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்றது. இப்போட்டியில் சம்பியனான நல்லூர் பிரதேச செயலக அணியினரையும் 2 ஆம் இடத்தினை பெற்ற யாழ்ப்பாண பிரதேச செயலக அணியினரையும் படத்தில் காணலாம்.

## விடுதலை...

பிணையில் விடுவிக்கப்பட்ட இவர் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரை பிணையில் விடுதலை செய்வதற்கு கையொப்பமிட்ட நபரை காணவில்லை என்றே இவரை கைது செய்ததாக தெரிவிக்கப்படுகிறது. (செ-4)

## கடற்படை வச...

பிரிவுக்குட்பட்ட பகுதி கடந்த 26 வருடங்களாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது.

பாதுகாப்பு செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி கடந்த முறை யாழ் மாவட்டத்துக்கு வந்திரந்த போது காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடலில் குறித்த பகுதியை விடுவிப்பதற்கு கடற்படையினரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அப்பகுதியில் இருந்த பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் நேற்றைய தினம் பி.ப. 1.30 மணியளவில் கடற்படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இப்பகுதியில் உள்ள செம்பொன்வாய்க்கால் இந்து மயானம் கடற்படையினரின் கட்டுப்பாட்டினுள்ளேயே இருக்கும் என்றும் பொதுமக்களின் பாவனைக்காக மட்டும் விடப்படும் எனவும் கடற்படையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## நுரைச்சோலை அனல் மின் நிலைய மின்பிறப்பாக்கி இயந்திரம் செயலிழப்பு

(நுரைச்சோலை)

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மின் பிறப்பாக்கி இயந்திரமொன்று செயலிழந்துள்ளது.

ஆயினும், தொடர்ச்சியான மின் விநியோகத்திற்கு இதனால் எவ்வித தடையும் ஏற்படமாட்டாதென மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் நேற்று முன்தினமிரவு முதல் செயலிழந்துள்ளது.

கொதிகலனில் ஏற்பட்டுள்ள நீர் கசிவு காரணமாகவே அந்த இயந்திரம் செயலிழந்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் தேசிய மின்சார கட்டமைப்பிற்கு 900 மெகாவாட் மின்சாரம் இணைத்துக்கொள்ளப்படுகின்றது.

இயங்கு நிலையிலுள்ள முதலாம் மின் பிறப்பாக்க இயந்திரம் மூலம் தற்போதைக்கு 150 மெகாவாட் மின்சாரமே உற்பத்தி செய்யப்படுகின்றது.

இரண்டாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் மூலம் 300 மெகாவாட் பிறப்பிக்கப்படுவதுடன், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தினால் தற்போதைக்கு பிறப்பிக்கப்படும் மின்சாரத்தின் அளவு 425 மெகாவாட் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மின்சார சபையினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட மின் பிறப்பாக்கி அறிக்கையின் பிரகாரம் தற்போது நீர் மின் உற்பத்தி 22.86 % வீதமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் பாவனையால் முன்னெடுக்கப்படும் மின்சார உற்பத்தியின் அளவு 22.56 % வீதமாக காணப்படுகின்றது.

அனல் மின் உற்பத்தி நிலையம் மூலம் 32.64 % வீதமும் காற்றழுத்த மின் உற்பத்தியினால் 0.38 % வீதமும் தேசிய கட்டமைப்புடன் மின்சாரம் சேர்த்துக்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன் உள்ளக விசாரணைப் பொறிமுறை

(கொழும்பு)

ஐ.நாமனிதவுரிமைகள்ஆணைக் குழுவின் 32 ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக உள்ளக விசாரணை பொறிமுறை வரைவை முன்வைப்பதற்கான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொணடுள்ளது.

இந்த உள்ளக விசாரணை பொறிமுறையின் வடிவத்தை இறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசேட செயலணி மக்களிடம் யோசனைகளை கோரியுள்ளதுடன், மக்களுடன் நேரடி கலந்துரையாடல்களையும் நடத்தவுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறையின் இறுதிவடிவம் மேமாத இறுதியில் தயாராகுமென தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாவில் எதிர்வரும் ஜூன மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 32ஆவது கூட்டத்தொடரில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் வாய்மூல அறிக்கையை வெளியிடவுள்ளார்.

இந்நிலையிலேயே அதற்கு முன்னதாக உள்ளக விசாரணைப் பொறிமுறை குறித்த இறுதிவடிவத்தை தயாரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 32 ஆவது கூட்டத்தொடரில் சர்வதேச சமூகத்துக்கு விளக்கம் அளிக்கவுள்ள இலங்கையின் உயர்மட்ட தூதுக்குழு, இந்த உள்ளக விசாரணைப் பொறிமுறையின் இறுதி வடிவத்தையும் கையளிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

## வீதியில் விழுந்த...

குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உயிரிழந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் சம்பவதினமன்று இரவு 8.30 மணியளவில் பலாலி வீதி உரும்பிராய் மேற்குப் பகுதியில் நடந்து வந்து கொண்டிருந்துள்ளார்.

இந்நிலையில் அப்பகுதியூடாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று குறித்த நபரை மோதிவிட்டு சென்ற நிலையில்,

மோட்டார் சைக்கிளின் மோதுகையால் பிரஸ்தாப குடும்பஸ்தர் தடுமாறி வீதியின் நடுவே வீழ்த்தப்பட்டார்.

அச்சந்தர்ப்பத்தில் அவ்வீதியால் வேகமாக பயணித்த முச்சக்கர வண்டி வீதியில் வீழ்ந்து கிடந்த குடும்பஸ்தர் மீது சடுதியாக மேல் ஏறியதுடன் அங்கிருந்தும் தப்பித்துச் சென்றுள்ளது.

இதனால் படுகாயமடைந்த பிரஸ்தாப நபரை உடனடியாக அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேதப் பரிசோதனையின் பின்னர் நேற்றைய தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில்,

பிரஸ்தாப குடும்பஸ்தரை மோதிய மோட்டார் சைக்கிள் உரிமையாளரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், தப்பிச் சென்ற ஆட்டோ சாரதியையும் பொலிஸார் தேடிவருகின்றனர். (செ-30,87)

## மாநிலங்களை...

த்தில் ஈழதேசமும் உருவாக்க வடமாகாண சபை முயற்சிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு தென் மாகாணத்தைச் சேர்ந்த மூன்று மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் சிலர் தங்காலை கால்டன் இல்லத்திற்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் செய்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்தித்த அவர்கள், அங்கு இடம்பெற்ற பாற்சோறு விருந்திலும் கலந்து கொண்டனர்.

இதனை அடுத்து அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட போதே மஹிந்த ராஜபக்ஷ இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் யோசனைகள் கொண்டுவந்து ஈழ நாடும் உருவாக்குவதற்கு முயற்சிகளும் இடம்பெறலாம்.

இது அவர்களது முதல் நடவடிக்கையாகும். எனினும் மாகாண சபைகளுக்கு நினைத்தாற்போல் தான்தோன்றித்தனமாக தீர்மானங்களை எடுக்கவோ அல்லது வெவ்வேறு மாநிலங்களை அமைக்கவும், மாநிலங்களை இணைக்கவும்.

பிரிக்கவுமோ முடியாது. அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அந்த வகையில் வடமாகாண சபையின் எதிர்பார்ப்பு ஒருபோதும் நிறைவேறாது.

இந்த விடயத்தில் நல்லாட்சி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பது தொடர்பில் தெரியாது.

ஆனாலும் இதற்கு நாங்கள் இடமளிக்கப்போவதில்லை என்பதோடு நாட்டு மக்களும் இதற்கு அனுமதி வழங்கப்போவதுமில்லை.

நல்லாட்சி அரசாங்கத்திலும் நாட்டை நேசிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

அவர்களும் இதற்கு எதிர்ப்பை நிச்சயம் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என்றார். (செ-12)

## “சுகாதார மேம்பாட்டுக் கிராமம்”...

கட்டுப்படுத்தும் நோக்குடன் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அந்தவகையில் கடந்த மாதம் டெங்குவாரம் ஆரம்பிக்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் குழுவினராக இணைந்து நகர்பகுதி மற்றும் கிராமங்களில் குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அந்தவகையில் கடந்தவருடத்தை விட இந்தவருடம் டெங்கு ஒழிப்பு செயற்பாடு வெற்றிகரமாக அமைந்துள்ளது.

எனவே தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடாக இது இருப்பதால் குறித்த டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எதிர்கொண்ட சவால்கள், முன்னாய்த்த நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேற்றையதினம் மீளாய்வு கூட்டம் நடைபெற்றது.

அதில் ஒவ்வொரு பிரிவினரும் தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் தெரிவித்திருந்தனர்.

அந்தவகையில் டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தின் போது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு மிகமிக குறைவாக காணப்பட்டது என்றும் பொலிஸாரின் பங்களிப்பு சிலசில பிரதேசங்களில் மிகவும் குறைவாக காணப்பட்டது என்றும் இனிவரும் காலங்களில் அவர்களின பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இராணுவத்தினரின் பங்களிப்பு முற்றுமுழுதாக கிடைத்துள்ளபோதும் சில இடங்களில் இராணுவத்தினர் வருகை தருவது பயனற்றிருப்பதாகவும் அதாவது அவர்களுக்கு மொழிப் பிரச்சினை காணப்படுவதால் அவர்களால் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை எனவும் அவர்களுடைய பங்களிப்பு பயனுளளதாக இருக்கும் படியான செயற்பாடுகளை அவர்கள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் அனைத்து பகுதிகளிலும் கழிவகற்றும் செயற்பாடுகள் மிக தாமதமாக இடம்பெறுவதால் சுற்றுச்சூழல் அதிகளவில் பாதிக்கப்படுகின்றது என்றும் பொதுமக்கள் மத்தியில் கழிவுகளை வகைப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு மிககுறைவாகவே காணபடுகின்றது என்றும் இதனால் கழிவகற்றல் செயற்பாடுகள் சீரானமுறையில் மேற்கொள்ள முடிவதில்லை எனவும் பல்வேறு தரப்பினரால் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இக் கலந்துரையாடலின் போது அரச அதிபர் கருத்து தெரிவிக்கையில்,

எமது மாவட்டத்தில் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும். பொதுவாக கழிவகற்றல் செயற்பாடுகளில் பிரதேச சபைகள் ஒழுங்கான செயன்முறைகளை கடைப்பிடிக்காமல் இருக்கின்றார்கள்.

தமது கடமைகளை கட்டாயம் முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டியது அவசியம். அனைவருக்கும் சமூகப் பொறுப்பு உள்ள காரணத்தால் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தாமல் சேர்ந்துசெயற்பட வேண்டும்.

கழிவகற்றல் முறைகளில் சட்டதிட்டங்களை மீறுவோர் தொடர்பாக அறியத்தரும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேசசெயலர் பிரிவிலும் உருவாக்கப்படவுள்ள சுகாதார மேம்பாட்டு கிராமம் தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட கிராமத்தின் விபரங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர்கள் அறியத்தரவேண்டும்.

அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்டகிராமங்களில் சுகாதார செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி இதை தொடர்சியான செயற்பாடாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பௌத்த மேலாதிக்கத்திற்காக...

வடமாகாண சபையின் 49-வது அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபையில் நடைபெற்றது.

உறுப்பினர் து.ரவிகரனினால் கொண்டுவரப்பட்ட பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை மீதான கருத்தினை முன்வைக்கும் போதே உறுப்பினர்கள் இவ்வாறு கூறியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம சேவையாளர் மீது தாக்குதல் நடத்தியது இந்த நிலமையை எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த ஆட்சியில் சிவில் நிர்வாகத்தில் இராணுவ தலையீடுகள் இருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. இந்த ஆட்சியில் மீன்பிடி அமைச்சராக இருந்த ராஜித சேனாரட்ன முல்லைத்தீவு மாவட்டத்தில் 52 சிங்கள மீனவர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டது என்றும் ஏனையோருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என பகிரங்கமாக கூறியிருந்தார்.

அதேவேளை, சட்டவிரோதமாக முல்லைத்தீவில் இருக்கும் தென்னிலங்கை மீனவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என உத்தரவிட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதேபோன்று நல்லாட்சி அரசின் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர உத்தரவிட்டிருந்தும் அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அமைச்சரின் உத்தரவுகளே நடைமுறைப்படுத்தப்படாத நிலை என்றால்,

இராணுவ ஆட்சி நடப்பதையே எடுத்துக் காட்டுகின்றது. தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி இராணுவம் அங்கு அதிகளவில் நிலை கொணடுள்ளது.

வடக்கின் பொருளாதாரம் மற்றும் மதத்தினை சிதைப்பதற்கான நோக்கத்திற்காகவே இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு என்றால் என்ன? இலங்கை மீது இன்னொரு நாடு படையெடுத்து வரப் போகின்றதா? பின்பு என்ன தேசிய பாதுகாப்பு? தேசிய பாதுகாப்பிற்கு பிழையான அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி நிலை கொள்ளச் செய்யப்படுகின்ற பாதுகாப்புத் தரப்பினர் வடக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினைத் திணிப்பதற்கே முயற்சிக்கின்றனர் என உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர்.

இவ்வாறான விடயங்களை கவனத்தில் கொண்டு, உடனடியாக உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றனர். (செ-4)

# ஜனாதிபதி...

மாகாண சபையில் நடைபெற்றது.

இதில் பிரேரணைகள் குறித்த விவாதம் இடம்பெற்றபோது, வட மாகாணத்தில் சட்ட விரோதமான காணி சுவீகரிப்புக்கள் நல்லாட்சி அரசாங்கத்திலும் நடைபெற்று வருகின்றது. ஆனைக்கோட்டை கூழாவடி பகுதியில் காணிகள் அளப்பதற்கு நில அளவையாளர்கள் முற்பட்டபோது, அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் அலுவலகமும் முற்றுகையிடப்பட்டது.

வடக்கில் காணி சுவீகரிப்பதற்காக 168 திட்டங்கள் இருக்கின்றது. கிளித்தட்டு மறிப்பது போன்று மக்களின் காணிகளை பாதுகாப்பதற்காக நாங்களும் ஓடுகின்றோம். அரசாங்கத்தின் கொடிய முகம் எம்மைத் தீண்டுகின்ற போது, அரச நிர்வாகத்தினை முடக்க வேண்டிய நிலை ஏற்படும். எமது மக்களுக்கு நடக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு தர வேண்டும். அந்த தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு நாமும் போராடுகின்றோம். மக்களும் போராடிக்கொண்டு இருக்கின்றார்கள்.

எனவே, வடமாகாணத்தின் காணி மற்றும் சட்டத்தினை கையாள்வதற்கு வட மாகாண முதலமைச்சர் இருக்கின்றார் எனவே, காணி சுவீகரிப்பினை நிறுத்துவதற்கு உடனடியாக ஜனாதிபதிக்கு தெரிவிக்குமாறு வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். அதன்பின்னர், வடமாகாண முதலமைச்சர் கருத்து தெரிவிக்கும் போது,

வடமாகாண காணி பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் 18 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர இணைந்து அழைப்பு விடுத்துள்ளனர்.

அந்த கலந்துரையாடலின் போது, காணி சுவீகரிப்பு மற்றும் காணிப் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு எடுத்துக் கூறுவதற்கு, உறுப்பினர்களிடம் இருக்கும் தரவுகளை கையளிக்குமாறும் சட்டத்திற்கு புறம்பாக காணிகள் சுவீகரிக்கப்படுகின்ற விடயம் பற்றியும், அதன் பாரதூரங்கள் பற்றியும் எடுத்துக் கூறுகிறேன் என தெரிவித்த முதலமைச்சர் அதற்காக தரவுகளை தந்துதவுமாறு உறுப்பினர்களிடம் கோரியுள்ளார். (செ -4)


ஆதிரையான் கல்வி நிலையம்
திக்கம்
O/L Day Class
ஆரம்பமாகிவிட்டன
தொடர்பு : 0770872903,
021 791 7791
(c-4294)




सत्यमेव जयते

சுதந்திர இந்தியாவின் சட்டம் மற்றும் நீதித்துறைக்கான முதலாவது அமைச்சர் கலாநிதி B.R.அம்பேத்கார் அவர்களது 125-வது பிறந்த தின நினைவு நாளை முன்னிட்டும், தமிழ் சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் யாழ். இந்திய துணைத்தூதரகம், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் சிறப்பு நிகழ்ச்சி.

இந்தியாவிலிருந்து வருகை தரும் பட்டிமன்றம் புகழ் திரு.ராஜா மற்றும் திருமதி பாரதி பாஸ்கர் அவர்கள் கலந்து சிறப்பிக்கும்

பட்டிமன்றம்

இடம் : சங்கிலியன் தோப்பு, நல்லூர்.
காலம் : 14.04.2016 வியாழக்கிழமை
நேரம் : மாலை 5.30 மணி

மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு அவசியமானவை

தொன்று தொட்டு வரும் பழமைகளே!
முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்,
செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்,
திரு.இ.சர்வேஸ்வரா

மாறிவரும் புதுமைகளே!
பேராசிரியர் தி.வேல்நம்பி,
திரு.ந.விஜயசுந்தரம்,
செல்வி ப.கதிர்தர்சினி

(இ)




நடுவர்கள் :
பட்டிமன்றம் புகழ் திரு.ராஜா
திருமதி பாரதி பாஸ்கர்

அனைவரும் வருக!



வெளிநாட்டு வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்
வீட்டுப்பணிப்பெண்கள், வெல்டர், கார்பென்டர், AC டெக்னீசியன் , சுத்திகரிப்பாளர் (ஆண், பெண்)
உங்கள் விருப்பத்துக்குகேற்ப தொழில் எம்மிடம் கிடைக்கப்படும்
IKEA Travels & Tours Pvt (Ltd) LLC3097
Contact : 021 222 4220 / 077 773 2022
62/34, Stanley Link Old Post Office Road, Jaffna.
www.ikeatourslk.com
(C-4295)



CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-4299)
CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062


# கண்கண்ட...

ர்களது விளக்க மறியல் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா (வயது 18) கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார். குறித்த கொலை வழக்கு ஊர்காவற்துறை நீதிமன்றில் நடை பெற்று வருகின்றது.

இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு சில தினங்களில் சி.ஐ.டி. யினால் கூறப்பட்ட கண்கண்ட சாட்சியம் குறித்து அனைவரிடத்தேயும் பெரும் எதிர்பார்ப்பை தோற்றுவித்திருந்தது. இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்துறை பதில் நீதவான் இ.சபேசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது புங்குடுதீவினை சேர்ந்தவர்களான, உதயசூரியன் சுரேஸ்குமார், தர்மலிங்கம் ரவீந்திரன் ஆகியோர் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். குற்றத்தடுப்பு புலனாய்வு துறையினர் மன்றில் முன்னிலையாகவில்லை. அதனை தொடர்ந்து வழக்கினை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார். குறித்த கொலை வழக்கு தொடர்பாக பத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு அவர்கள் மீதான வழக்கு விசாரணை பிறிதொரு தினத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றைய தினம் குறித்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை மேலும் ஒரு சந்தேக நபரை 13ஆவது சந்தேக நபராக கைது செய்யவுள்ளதாக குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் மன்றில் தெரிவித்திருந்தனர். அதனை அடுத்து குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (செ-4)

# விக்னேஸ்வரனை..

தார்.

அண்மையில் வடக்கு மாகாணசபை தர்வுத்திட்டமொன்றை முன்வைத்தமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் தினேஷ் குணவர்த்தன எம்.பி. மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் வட, கிழக்கு முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் போன்று செயற்பட வேண்டாமென சி.வி.விக்னேஸ்வரனுக்கு நாம் கூறுகின்றோம்.

வட மாகாண சபையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சிசெய்கின்றது என்பதை மறந்து முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

வரதராஜப்பெருமாளுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கும் கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதை சி.வி. விக்னேஸ்வரன் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது சிறந்ததாகும்

குறிப்பாக அண்மையில் அவர் அரசியல தீர்வுத்திட்டம் குறித்த வரைபு ஒன்றை வெளியிட்டிருந்தார். வட மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆட்சி செய்து வருகின்றது.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவராக சம்பந்தன் இருக்கின்ற போது வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் எவ்வாறு தீர்வுத்திட்டங்களை முன் வைக்க முடியும்? அந்தவகையில் வட மாகாண சபை முதலமைச்சர் ஏன் இவ்வாறு செயற்படுகின்றார் என்று புரியவில்லை.

வரதராஜபபெருமாளின் அறிவிப்புக்கள் விடயத்தில் அன்று ஜனாதிபதியாக இருந்தவர் வடக்கு கிழக்கு மாகாண சபையை என்ன செய்தார் என்பதனை அனைவரும் நினைத்துப்பார்க்க வேண்டும். கடந்தகாலத்தில் இனவாதிகள் மேற்கொண்ட செயற்பாடு களை முடிவுக்கு கொண்டுவர 30 வருடங்கள் தேவைப்பட்டன. எனவே இதற்கு பின்னரும் இவ்வாறு செயற்படுவதற்கு யாருக்கும் இடமளிக்க முடியாது என்றார்.

மேலும் அரசாங்கம் எவ்வாறான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப்போகின்றது என்று புரியவில்லை. அதிகாரப் பகிர்வு குறித்தும் பேசப்படுகின்றது. ஒற்றையாட்சியில் மாற்றம் ஏற்படக்கூடாது என்பதனை நாங்கள் ஏற்கெனவே வலியுறுத்தியுள்ளோம் என அவர் தெரிவித்தார். (செ-12)

# புதிதாக...

மக்களின் காணிகளை கையகப்படுத்துகின்றனர் எனக் கூறி, யாழ் அரச அதிபர் அலுவலகத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

இதன் பின்னணியில் காணிகளை கையகப்படுத்தும் ராணுவத்தினரின் செயற்பாடுகள் தொடர்பில், அவரிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உதாரணமாக, பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகிய பகுதிகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு, காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கை ஆறு அல்லது ஏழு வருடங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதுபோல, முன்பு குறிப்பிடப்பட்ட இடங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கைதான் தற்போது மேற்கொள்ளப்படுவதாகத் தெரி வித்த அவர், புதிதாக எந்த காணியும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்படுவதில்லை எனவும் கூறினார். (செ-12)


ஈழத்தின் பிரபல எழுத்தாளர்
குந்தவை
வீரகத்திப்பிள்ளை இராஜரட்ணம் சடாச்சரதேவி
அவர்களின்
சிறுகதைத் தொகுப்பு வெளியீடு
காலம் 14.04.2016 வியாழக்கிழமை
சித்திரை புதுவருடப்பிறப்பு பி.ப 3.00 மணி
இடம் ஸ்ரீ செல்வச்சந்நிதி செல்லையா ஐயர் கலாச்சார மண்டபம்
தலைமை
திரு.R. தியாகலிங்கம் அவர்கள்
( வட மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுத் தலைவர்)
மலர் வெளியீட்டினைத் தொடர்ந்து கவிஅரங்கமும், நடனநாட்டிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும். எனவே அத்தருணம் தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(C-4298)

உறவினர் சார்பில்
ஸ்ரீரஞ்ஜினி புவனேந்திரன் ஐயர்
(பட்டு)



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-06


**பகுதி-I** **தமிழ்க் கல்விக் கழகம்** நேரம்:- 45 நிமிடங்கள்

01 ஆம் 02 ஆம் வினாக்களின் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய உருவைத் தெரிவு செய்க.

1)



2)



03. 6 5 X
4 5 20
7 Y 21

இங்கு X,Y ஆகியவற்றின் பெறுமானங்கள்


1) 30,2 2)24,20 3) 30,3

04. கீழேயுள்ள கவிதையின் வரிகள் ஒருங்கின்றி எழுதப்பட்டுள்ளன. கருத்துள்ள கவிதையாக அமையுமாறு ஆங்கில எழுத்துக்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்துக.


A- நிலம் குளிர்ந்து போகும்
B-மழை பொழியச் செய்யும்
C-மரம் வளர்க்க வேண்டும்
D-நிழல் மரங்களாலே

1) CDBA 2) BCDA 3)ADCB

05.



பின்வரும் உருக்கோலத்திற்கு ஏற்ப? எனும் குறியீட்டினால் காட்டப்படும் உரு?



06. கீழே தரப்பட்டுள்ள எண்களில் ஒரு கோலம் உண்டாவதற்கு நீக்கப்பட வேண்டிய எண்கள் எவை?

42,48,50,36,32,54

1) 48 உம் 32 உம் 2) 54 உம் 50 உம் 3) 50 உம் 32 உம்

07. இருபத்தாறாயிரத்து நானூற்றி இருபத்து நான்கு என்னும் எண்ணிலுள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் எண் யாது?

1) 42462 2)24462 3)64422

08. பரீட்சை மிகவும் சுலபமானது. சித்தி பெறுவதென்பது இலகுவானது என்று புளுகித் திரியும் கரண் பயத்தினால் பரீட்சைக்கே தோற்றவில்லை. இதற்கு பொருத்தமான பழமொழி?

1) இளமையில் கல்வி சிலையில் எழுத்து 2) பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை 3)பேராசை பெரும் தருத்திரம்

09. ஒழுங்கு முறையாக எழுதப்படாத வரிசையை தெரிவு செய்க?

1) மரம்- பூ-காய்-கன்று 2) பூ-காய்-கன்று-மரம் 3)காய்-பூ-மரம்-கன்று

10. அகராதி எனப்படுவது

1) பொருளடக்கம் நிறைந்த சொற்கள் காணப்படும் புத்தகம்
2) அகர வரிசைப்படி சொற்களுக்கு பொருள் கூறுவது
3) பழைமையான சொற்கள் காணப்படும் பெட்டகம்

11. முதியவர் கொழும்பு தொடரூந்தில் ஏறி பயணச் சீட்டு ஒன்றை வாங்கிக் கொண்டு ஜன்னலுக்கு அருகில் அமர்ந்தார். இக்கூற்று பிழையானது. இதற்குக் காரணம்

1) தொடரூந்தில் பயணிக்க பயணச்சீட்டு அவசியமற்றதாகும்.

2) பயணச்சீட்டு வாங்குவது தொடரூந்தில் இருந்து இறங்கிய பின்பாகும்

3) தொடரூந்தில் ஏறுவதற்கு முன் பயணச்சீட்டு வாங்கிக்கொள்ள வேண்டும்.

★ பின்வரும் பாடலை வாசித்து வினவப்பட்டுள்ள வினாவிற்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?


அன்னப்பால் காணாத ஏழைகட்கு - நல்ல
ஆவின்பால் - எங்கே கிடைக்கும் அம்மா?




12. ஆவின் எனப்படுவது யாது?

1) ஆட்டுப்பால் 2) பசுப்பால் 3) தாய்ப்பால்


★ 13 ஆம் 14 ஆம் வினாக்களில் வெற்றிடங்களுக்கு பொருத்தமான உருவை தெரிவு செய்க?




13.




1)  2)  3) 

14.



1)  2)  3) 

15.




இவ் வட்ட வடிவத்தை நான்கு சம துண்டுகளாக வெட்டினால் ஒரு துண்டின் சுற்றளவு

1) 30 cm 2) 20 cm 3) 29 cm

16. நீளம்பாய்தல் போட்டி ஒன்றின் போது அமலனை விட கமலன் 6 cm அதிகமாக பாய்ந்தான். கமலனை விட அஜித் 10 cm குறைவாக பாய்ந்தான். அஜித்தை விட சாரங்கன் 12 cm அதிகமாக பாய்ந்தான். இதன்படி முறையே 1,2, 3 ஆம் இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் முறையே.

1) சாரங்கன் , கமலன், அமலன் 2) அமலன், சாரங்கன், கமலன் 3) சாரங்கன், அஜித், அமலன்


★ தரம் 5 இல் கல்வி கற்கும் ஒரு பிள்ளை ஒவ்வொரு மாதமும் தனது சேமிப்புக் கணக்கில் ஒரு தொகையை சேமிக்கும். பின்வரும் அட்டவணை குறிப்பிட்ட வருடத்தில் சில மாதங்கள் சேமித்த பணத்தொகை.

| தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி |
|---|---|---|---|---|---|
| ரூபா 12.00 | ரூபா 24.00 | ரூபா 48.00 | ரூபா 96.00 | ரூபா 192.00 | ரூபா 384.00 |

17. இதன்படி பிள்ளை ஆவணி மாதத்தில் வங்கியில் சேமிக்கும் பணம்.

1) ரூபா 576.00 2) ரூபா 1536.00 3) ரூபா 768.00

18. வகுப்பறை ஒன்றில் மாணவர்கள் விரும்பும் உணவுகளின் எண்ணிக்கை காட்டப்படுகின்றது. தோசையை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?





1) 15 பேர் 2) 17பேர் 3) 6 பேர்

19. அடுத்து வரும் எண்ணை தெரிவு செய்க?


45821, 58214, 82145, ..................................

1) 21485 2) 14528 3) 21458

20. 


3 பாத்திரங்களிலும் உள்ள நீரின் அளவு சமமானதாக ஆகுவதற்கு A பாத்திரத்தில் இருந்து B,C பாத்திரத்திற்கு எவ்வளவு நீர் ஊற்றப்படல் வேண்டும்.


1) 100 ml, 200 ml
2) 200 ml, 100 ml
3) 100ml, 100ml

21. 

இவ்வுரு முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றின் மூலம் தெரியும் கடிகார முகத்தைக் காட்டுகின்றது. அதன்படி இக்கடிகார முகம் காட்டும் உண்மை நேரம் யாது?

1) பிற்பகல் 4 மணி  2) முற்பகல் 7 மணி  3) பிற்பகல் 8 மணி

22. சதுரமுகி தாயக்கட்டை ஒன்றின் மூன்று நிலைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் C என்ற எழுத்திற்கு எதிரான எழுத்து எது?




1) B
2)D
3) E

23. ஒரு பிள்ளை MNOP எனும் நான்கு சந்தர்ப்பங்களில் பயணம் செய்த திசைகள் கீழே உருக்களில் காட்டப்பட்டுள்ளன.




அப்பிள்ளை M எனும் சந்தர்ப்பத்தில் பயணம் செய்தது வடக்கு திசை எனின் அப்பிள்ளை P எனும் சந்தர்ப்பத்தில் பயணம் செய்த திசை யாது?

1) கிழக்குத்திசை  2) மேற்குத்திசை  3) தெற்குத்திசை

★ கமலனிலும் பார்க்க விமலன் உயரம் கூடியவன். எல்லோரிலும் பார்க்க அமல் உயரத்தின் அடிப்படையில் முதலாவதாக காணப்படுகின்றான். கமலனிலும் பார்க்க நிமலன் உயரம் குறைந்தவன்.

24. இவர்கள் அனைவரையும் உயரத்தின் அடிப்படையில் இறங்கு வரிசைப்படுத்தினால்?

1)நிமலன், கமலன், விமலன்,அமல்  2) அமல், விமலன், கமலன், நிமலன்  3) விமலன், நிமலன், கமலன்,அமல்


25.எல்லோரிலும் பார்க்க உயரத்தில் குறைந்தவன் யார்?

1) விமலன்  2)நிமலன்  3) கமலன்


26. கோதுமைமா இரண்டு கிலோகிராமில் இருந்து பலகாரம் 40 உம் கொக்கிஸ் 70 உம் தயாரிக்கலாம். அதன்படி 5 கிலோகிராம் கோதுமைமாவில் தயாரிக்கும் அளவு யாது?

1)பலகாரம்-200, கொக்கிஸ்-175  2)பலகாரம்-100, கொக்கிஸ்-175  3)பலகாரம்-120, கொக்கிஸ்-140

? இடப்பட்ட இடத்துக்கு வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

27. 


1. 20
2. 28
3. 9


28. 


1. 14
2. 24
3. 12

29. ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம். இம் மரபுச் சொற்றொடரின் கருத்து?

1) உண்மையாகவே கவலைப்படல்
2) எந்த செயலையும் பொருட்படுத்தாமலிருத்தல்
3) வெளியில் கவலைப் படுவதாகக் காட்டிக்கொண்டு உள்ளூர மகிழ்ச்சியடைதல்

30.சதுர வடிவக் கடதாசியை இரண்டாக மடிக்கும் போது பெற முடியாத வடிவம்




31. வெற்றிடத்துக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

PEACH → HCAEP → 46327 → ..............


1) 72364 2)73624 3)27463

32) 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எனின் அவ்வருடத்தில் மார்ச் மாதம் 02 ஆம் திகதி என்ன கிழமையாகும்


1) ஞாயிற்றுக்கிழமை 2)செவ்வாய்க்கிழமை 3)திங்கட்கிழமை

★.33 ஆம் 34 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைத்தால் கிடைக்கும் உரு?

33)




34)




35)



இவ் உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்

1) 8/16 2) 1/4 3) 12/16

(36) செல்வன் கடைக்குச் சென்று 1/2 kg பயறும் 3kg மாவும் 1 அங்கர் பெட்டியும் 3 பேனாவும் வாங்கியபின் கடைக்காரரிடம் ரூபா 1000.00 செலுத்தினான் அவனுக்கு மிகுதியாக கிடைக்கும் பணம் எவ்வளவு?

1kg பயறு=200/-


1kgமா=50/-

1 அங்கர் பெட்டி= 250/-

1 பேனா= 12/-

1) ரூபா 536.00 2) ரூபா 464.00 3) ரூபா 464.00

37. இவ்வுரு ஒரு சதுரத்தையும் எல்லா பக்கங்களும் நீளத்தில் சமமான முக்கோணியையும் காட்டுகிறது. இதன்படி இவ்வுருவின் சுற்றளவு?





1) 30cm 2) 25cm 3) 20cm

38. ஒரு மனிதன் தனது பயணத்தின் 1/4 பங்கை பேருந்திலும் பயணத்தின் 1/2 பங்கை தொடரூந்திலும் 4 கிலோமீற்றர் தூரத்தை ஈருளியிலும் பயணித்தான். அதன்படி மூன்று வாகனங்களிலும் பயணித்த மொத்த தூரம்?

1) 16km 2) 9km 3) 10km


39.



இவ்வுருவில் முக்கோணங் கள் மாத்திரம் காணப்படுகின்றன. இக்கூற்று?

1) சரியானது 2) பிழையானது 3) கூறமுடியாது

40.



இத்தராசு சமநிலையில் உள்ளது ● இன் நிறை 750kg எனின் ✸ இன் நிறை?

(1) 150kg 2) 1500kg 3) 1000kg

இவ் வினாக்களுக்குரிய விடைகள் மற்றும் பகுதி II வினாத்தாள் ஆகியன நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (15.04.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

★யோகராசா -துஷ்யந்தன் (இயக்குநர்)

★அ.நிமலகாந்தன் (யா/இனுவில் மத்திய கல்லூரி)

★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

★G.மோகன்ராஜ் (ISA ஆரம்பக் கல்வி, வலயக்கல்விப் பணிமனை, கொத்மலை)

★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)

★I.முபாரக் (பொ/அல்றிபாய் முஸ்லிம் மகா வித்தியாலயம், பொலநறுவை)